கொன்றை மலர்க் குமாரி

விக்கிரமன்

முன்னுரை

தஞ்சை நகரை, முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றிய விஜயாலயன், பிற்காலச் சோழர் பரம்பரைக்கு அடிக்கல் நாட்டினார். அவருடைய திருக்குமாரர் ஆதித்த சோழர் சிறந்த வீரராகத் திகழ்ந்து, சோழநாட்டை விரிவுபடுத்தியதோடன்றிச் சிவபெருமானுக்குக் கோயில்கள் பல கட்டிச் சைவ சமயத்தை வளர்த்தார். அவர் திருக்குமாரர் பராந்தக சோழர் தந்தையைப் போன்று பெருவீரராகத் திகழ்ந்த தோடன்றித், தில்லை நடராசர் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார். சிதம்பரம் நடராசர் கோயில் பொன்னம்பலத்திற்குப் பொற்தகடுகள் வேய்ந்துச் சிறப்பித்தார். அவர் விட்ட பணியை அவருக்குப் பின் அரியணை அமர்ந்த கண்டராதித்தர் தொடர்வதைத் தன் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டார். போர்க்களத்தில் பெருமை சேர்ப்பதைவிட, தில்லை பொன்னம்பலப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்று வதைத் தன் தலையாயக் கடமையாகக் கொண்டார். பராந்தகன் காலத்திலிருந்தே வடக்கே இராட்டிரக் கூட அரசர்களுடன் தீராத பகை ஏற்பட்டு வளர்ந்தது. சோழர்களை வென்று அவர் நாட்டை தங்கள் நாட்டுடன் சேர்ந்துக் கொள்வதைக் குறிக்கோளாகக் கொண்டனர். படை பலத்தால் வெல்ல முடியாததைத் தந்திரத்தால் சாதித்துக் கொள்ளத் திட்டமிட்டனர்.

அவற்றுள் ஒற்றர்களைச் சோழ நாட்டில் பரவலாக உலவவிட்டதும் ஒன்று. ஓர் ஆழகிய மங்கை அதற்காக அனுப்பப்படுகிறாள்.

அந்த மங்கை வெற்றியடைந்தாளா? அந்தக் குமரிப் பெண், சிவநேயச் செல்வரான கண்டராதித்தரை வென்றாளா என்பதுதான் 'கொன்றை மலர்க் குமரி' கதை. இந்த வரலாற்றுப் புதினம் தினமலரில் தொடராக வெளிவந்தது. தொடராக வெளியிட்ட தினமலர் ஆசிரியருக்கு நன்றி தெரிவிக்கிறேன். நூல் வடிவில் வெளியிட்டுள்ள புலவர் வரத கோவிந்தராசனுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

ஆதித்த சோழர் கால நிகழ்ச்சிகளிலிருந்து இராசேந்திரன், குலோத்துங்கன் காலம் வரையில் பல நிகழ்ச்சிகளை அடித்தளமாகக் கொண்டு வரலாற்றுப் புதினமாகப் படைத்துள்ளேன். அவற்றுள், கொன்றை மலர்க் குமரியும் ஒன்று. தமிழ்ப் பெருமக்களின் ஆதரவு என்றும்போல் தொடரும் என்று நம்புகிறேன்.

'இலக்கியா'
20.12.2001
சென்னை-33

விக்கிரமன்

பதிப்புரை

வரலாற்று நாவல் இலக்கியத்தில் கலைமாமணி விக்கிரமன் அவர்களுக்கு ஓர் வரலாறு உண்டு. அமரர் கல்கி அவர்களுக்குப் பிறகு வரலாற்றுப் புதினங்கள் எழுதி வரலாறு படைத்து வருபவர். சிறுகதைச் சேக்கிழார் விக்கிரமன் அவர்கள். தென்னாட்டு வரலாற்றையும், இலக்கியங்களையும் கற்றுத் தேரப் பழுத்தவர். வரலாற்று அடிப்படையில் கற்பனைக் காவியங்களாக 50க்கும் மேற்பட்ட வரலாற்றுப் புதினங்களைப் படைத்துத் தமிழுக்குப் பெரும் புகழ் சேர்த்து வருபவர். அவர் எழுத்து நடை ஆற்றொழுக்கான, தெளிந்த, கவிதை நயமிக்க, இனிய, எளிய செந்தமிழ் கொழிக்கும் நடை. அவரின் புதினங்கள் படிக்கும் போது அலுப்போ சளிப்போ ஏற்படுத்தாதவை. விறுவிறுப்பும், வேகமும், எடுத்ததை முடிக்க வேண்டும் என்ற ஆவலையும் உண்டாக்குபவை.

எழுத்து வேந்தர் விக்கிரமன் அவர்களின் இந்தக் 'கொன்றைமலர்க் குமரி' பல ஆண்டுகளுக்கு முன் படைக்கப் பட்ட வரலாற்றுப் புதினம். சோழ நாட்டில் கண்டராதித்த சோழன் காலத்தில், இராட்டிரக் கூடர்களுக்கும் சோழர்களுக்கும் இடையே இருந்த பகைப் புலத்தை மையமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளது. இராட்டிரக் கூடப் பெண் மலர்மங்கையைப் பகடைக் காயாக வைத்து 'உதயன்' என்னும் ஓர் ஒற்றன், சோழ அரசைக் கவிழ்க்கக் காயை நகர்த்துகின்றான். ஆனால், தமிழ் நாட்டுக்கு இசைபயில அழைத்து வந்த மலர் மங்கை, தில்லை

அம்பல வாணனிடத்தில் பக்தியும், அவன் சூடும் அக்கொன்றை மலர் மேல் பெருவிருப்பும், தேவாரப் பாட்டிலும் அதனினிய பண்ணிலும் பித்தும் கொண்டவளாய்த் தஞ்சைத் தமிழ் மண்ணுக்கே தன்னை அர்ப்பணித்து விடுகிறாள். கூத்தனுக்கும் கொன்றை மலர்க் குமரிக்கும் இடையே மெல்லிய காதலைத் தவழவிட்டு, கண்டராதித்த சோழனோடு, செம்பியன் மாதேவி, பழுவேட்டரையர், உதயன் மதுவனன் என உயிர்புள்ள பாத்திரங்களை உலவிட்டு, இனிமையும் விறுவிறுப்பும் இழையோட, இப்புதினம் புனையப்பட்டுள்ளது.

படிக்க ஆவலோடு காத்திருக்கும் வாசக அன்பர்களே, படித்துச் சுவைத்து உங்கள் கருத்தை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். என்றும் உங்கள் நல்லாதரவிற்கு நன்றி.

அன்புடன்
வரதகோவிந்தராசன்
சுவாதி பதிப்பகம்

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்
— சேக்கிழார்.

பிறகாலச் சோழர்

1.	விசயாலயச் சோழன்	கி.பி. 846–887
2.	முதல் ஆதித்த சோழன்	கி.பி. 871–907
3.	முதல் பராந்தகச் சோழன்	கி.பி. 907–953
4.	கண்டராதித்த சோழன் (நம் கதை மன்னன்)	கி.பி. 950–957
5.	அரிஞ்சயச் சோழன்	கி.பி. 956–957
6.	இரண்டாம் பராந்தகன் சுந்தரச் சோழன்	கி.பி. 957–970
7.	உத்தம சோழன் மதுராந்தகன்)	கி.பி. 970–985
8.	முதல் இராசராச சோழன்	கி.பி. 985–1014

333394
KC43916

கொன்றைமலர்க் குமரி

1. மயக்க ஒரு மங்கை

திலைப் பொன் அம்பலத்து விமானக் கலசங்கள்மீது காலை இளங்கதிரவன் தன் கதிர்க் கரங்களை நீட்டி அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தான்.

பொன்னழகா அல்லது இளஞ்சூரியனின் கதிரழகா என்று பிரிக்க முடியாதவாறு விமானம் பேரெழில் பெற்று ஒளி வீசியது.

நந்தவனத்து வாவியில் நீராடி, சேலையைப் பிழிந்து வேறு உடுத்தி, கூந்தல் ஈரத்தை மெல்லக் காய வைத்தவாறு நடை பயின்று வந்தாள் மலர் மங்கை.

சரக்கொன்றை மரத்தருகே வந்து நின்று மலர் பறிப்பதும் அங்கிருந்தே பொன் விமானத்தின் எழிலைப் பருகுவதும் அவள் நாள்தோறும் தவறாமல் செய்பவைதாம்.

அன்று அவளுக்கு நீலவானத்துப் பின்னணியில் திகழ்ந்த பொன்விமான வடிவழகு மெய் சிலிர்க்க வைத்தது. அவள் நாள்தோறும் பாடும் பாடல் சிவபெருமானைக் கண் எதிரே கொண்டு நிறுத்துவது போல் தோன்றியது.

"பொன்னார் மேனியனே
புலித் தோலை அரைக்கசைத்து..."

அவள் நின்று நிதானமாகப் பாடினாள்.

அவள் இராட்டிரகூட நாட்டிலிருந்து வந்தவள். தமிழைச் சில காலமாகப் பயில்கிறாள். தமிழை அவள் கற்பதற்குச் சில முக்கியக் காரணங்கள் இருந்தன. முதலில் சில நாள்கள் அவள் சிறிது சிரமப்பட்டாள். பிறகு அவள் நளினமாக நடனமிடுவது போல் நாவும் நெளிந்து வளைந்து அழுதத் தமிழை எளிதில் பேசிப் பாட வைத்தது.

சின்னக் கூத்தன் அவளுக்குத் தமிழ் கற்றுத்தருகிறான். தமிழோடு இசையும் பயில்விக்கிறான்.

"பொன்னார் மேனியனே
புலித் தோலை அரைக் கசைத்து...
மின்னார் செஞ்சடை மேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே..."

என்று மலர் மங்கை பொருள் உணர்ந்து பாடுவதைக் கூத்தன் ரசிப்பான்; அவள் வடிவழகையும் சேர்த்துத்தான்.

அவள் பொன்னின் பொருள் அறிந்தாள். பொன்னுக்கும் உள்ள பொருள் வேற்றுமை அறிந்தாள்.

"கூத்தா! அப்படியென்றால் சிவபெருமான் பொன்னைப் போன்று நிறமுடைய அழகர். அப்படித் தானே?" என்று மலர் மங்கை கேட்பாள்.

"ஆமாம். மலர் மங்கை! சிவபெருமாள் பொன் நிறமுடையவர். அவரது சடை தீ வண்ணமுடையது. அதில் அணிந்திருக்கும் கொன்றை மலர் மஞ்சள் நிறமுடையது" என்று கூத்தன் வர்ணிக்கும்

போது மலர்மங்கை இமைகளை மூடியவாறு பொன் வண்ண இறைவனை மனத்தில் உருவகப் படுத்திக் கொள்வாள்.

"ஆகா! பொன்நிற மேனி! செவ்வண்ணக் கூந்தல். அதில் கொன்றை மலர். கொன்றை மலர் எப்படி இருக்கும்?" என்று மலர்மங்கை சிறு குழந்தைபோல் குழைந்து கேட்டாள் ஒரு நாள்.

தில்லை அம்பலவாணர் கோயிலுக்கருகே இருந்த நந்தவனத்திலிருந்து கொன்றைமலரைக் கொண்டுவந்து கொடுத்தான் கூத்தன்.

ஒரு கொத்து கொன்றை மலரைக் கொண்டையில் அணிந்து கொண்டு அவள் இடை நெளிய அபிநயம் பிடித்ததைக் கூத்தன் மறைந்திருந்து கண்ட போது அவன் உணர்ச்சி கொந்தளித்தது. அந்த நிலையிலேயே அவளை ஆரத்தழுவிட வேண்டும் என்று துடித்தான்.

ஐயோ! அந்த நினைப்பு தனக்கு இருப்பது தெரிந்தால்... மலர் மங்கை ஒரு நெருப்பு; கட்டுவிடும். உதயனுக்குத் தெரிந்தாலோ... தலையை வெட்டி நந்தவனத்தில் புதைத்து அதன் மீது கொன்றைச் செடி ஒன்றை நட்டு விடுவான்!

உதயன் சிதம்பரத்துக் கடை வீதியில் நவதான்யங்கள் விற்பனை செய்து வந்த வணிகன். அந்த ஊரிலேயே நேர்மை யானவன் என்ற பெயரெடுத்தவன். அந்த ஊருக்கு வந்து எப்போது குடியேறினான் என்ற அவனது பூர்வீகம் ஒருவருக்கும் தெரியாது.

கூத்தன் அம்பலவாணர் சந்நிதியில் பதிகம் பாடுபவன். சிவபெருமான் புகழ் பாடும் பல பதிகங்களை இசையோடு பாடுவான். அந்தப் பாடல்களை அவனது குடும்பத்தவர்கள் பரம்பரையாகப் பாடிக் கொண்டு வந்தனர். கூத்தன் பாடலை அவ்வப்போது

பாராட்டி உளுந்து, பயிறு போன்ற தானியங்களைக் கொடுத்து வந்த உதயன் கூத்தனின் மிக நெருங்கிய நண்பன் ஆனான்.

ஒருநாள் உதயன் மலர் மங்கையை அழைத்து வந்து கூத்தனிடம் அறிமுகப் படுத்தினான். மலர்மங்கை தன் உறவினள் என்றும், அவளுக்கு நல்ல குரலும், இசைஞானமும் இருப்பதால் அவளுக்குத் தமிழும் இசையும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் உதயன் கேட்டுக்கொண்டான். மலர்மங்கையின் சொக்கும் அழகைப் பார்த்தவுடனே கூத்தன் சற்றுத்தடுமாறினான். அவளுடைய விழிகள் அவன் இதயத்தைத் துளைப்பது போல் உணர்ந்தான். பேசுவதற்கு நா எழவில்லை.

"என்ன கூத்தா, வாயடைத்து நின்று விட்டாய்? உனக்குத் தெரிந்த பாடல்களைக் கற்றுக் கொடுத்து மலர்மங்கையைச் சிறந்த இசைவாணியாக ஆக்க வேண்டும்" என்று உதயன் கேட்டுக் கொண்டான். கூத்தன் தலையசைத்தான்.

மலர்மங்கை விரைவில் தமிழ் கற்றுக் கொண்டாள். பாடல்கள் பயின்றாள். பண்களின் பாகுபாடு அறிந்தாள். தான் கற்றறிந்த கன்னடப் பாடல்களைக் கூத்தனுக்குக் கற்றுத்தந்தாள்.

"மங்கை! உன் பெற்றோர் எங்கிருக்கிறார்கள்?" என்று ஒரு நாள் அவளைப் பற்றிய விவரம் அறியக் கேட்டான் கூத்தன். தலையை அசைத்த அவள், 'எனக்கு அவர்தான் எல்லாம்' என்று உதயனைக் குறிப்பிட்டாள்.

கூத்தன் அவளுடைய ஊரைப் பற்றி விசாரித்தான். அவளும் தன் கிராமத்தின், நாட்டின் பெருமையைப் புகழ்ந்து பேசினாள்.

"நீ சொல்லும் துங்கபத்திரை நதி கொள்ளிடத்தை விட மிகப் பெரியதா?"–கூத்தன் கேட்டான். கூத்தன் கொள்ளிடத்தை மட்டுமே அறிவான்.

மங்கை கலகலவென்று சிரித்தாள்.

"துங்கபத்திரை மிகப் பெரிய ஆறு. கிருஷ்ணை ஆறு அதைவிட மிகப் பெரியது. கிருஷ்ணையுடன் துங்கபத்திரை சேரும் இடத்திலுள்ள கூடலி கிராமத்தைச் சேர்ந்தவள் நான். எங்கள் ஊரில் ஆற்றின் மறுகரையைக் காணவே முடியாது. ஆற்றில் மணலையே நான் பார்த்ததில்லை!" என்று மங்கை துங்கபத்திரை ஆற்றின் நீள அகலத்தையும் நீர்ப் பிரவாகத்தையும் வர்ணிப்பாள்.

"அவ்வளவு வளமுள்ள ஊரைவிட்டுச் சிதம்பரத்திற்கு என் வந்தாய்?" கூத்தன் கேட்டான்.

"அவர் அழைத்தார் வந்தேன்" என்றாள் மங்கை. அவர் என்று மங்கை கூறுவது உதயனை. உதயன் அவள் குடும்பத்தின் நெருங்கிய உறவினர். அநாதையான அவளைப் பசி, பட்டினியிலிருந்து காப்பாற்றிப் பாதுகாப்பு அளித்தவன் உதயன். இப்போது காப்பாற்றுபவனும் அவனே. உதயனிடம் அவளுக்குப் பெரும் மரியாதை. அத்துடன் சிறிது அச்சமும். அவன் சொல்வதை மீற மாட்டாள்.

பேசிக் கொண்டே இருக்கும்போது, "நீ எப்போது கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்?" என்று கூத்தன் கேட்டுவிட்டான். ஒருவிதச் சிரிப்பு அவளிடையே மலர்ந்து இதய விகாரத்தை மறைக்க முயன்றது.

திருமணம் என்ற பேச்சைக் கேட்டால் அவள் நாணமடைந்து விடுவாள் என்று கூத்தன் நினைத்தான். ஆனால் அவளிடம் எந்த மாறுதலுமில்லை. அவள் சாதாரணமாக, "அவர் என்ன சொல்கிறாரோ அப்படித்தான் நான் நடப்பேன்" என்று கூறிவிட்டாள்.

அவள் முகத்தையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான் கூத்தன். "என்னைப் பிடித்திருக்கிறதா? என்னைக் கல்யாணம் செய்து கொள்கிறாயா?' என்று கேட்டுவிடத் துடித்தான். ஆனால் கேட்டுவிடவில்லை. 'அவர், அவர்' என்று எதற்கும் உதயனையே மங்கை குறிப்பிட்டது அவனுக்குப் பிடிக்கவில்லை.

அவள் நெருப்பு என்பதைப் புரிந்து கொண்டான். ஆனால் அவள் ஏன் நாடுவிட்டு நாடு வந்து தமிழையறிந்து தமிழ்ப்பதிகங்களைக் கற்றுக் கொள்கிறாள் என்பதை மட்டும் அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கோயில் நந்தவனத்திற்கு அருகே சிறு குடிலில் மங்கை வசித்து வந்தாள். வயதான மூதாட்டி ஒருத்தியும் அவளுக்குத் துணையாக இருந்தாள். அவளுக்குக் காது கேட்காது.

ஒவ்வொரு நாளும் மலர்மங்கை அந்த நத்தவனத்திற்கு வருவாள். கொன்றை மலர் மரத்தருகே நின்று பொன் விமானத்தைக் கண்டு ரசிப்பாள்.

அன்று அவள் விமான அழகை ரசித்துக் கொண்டிருந்தாள். அங்கு வந்த கூத்தன், "எதைக் கண்டு நீ சொக்கி மரமென நின்று விட்டாய் மங்கை?" என்று குரல் கொடுக்கவும், மலர்மங்கை திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"பயந்து விட்டாயா மங்கை? உன்னைத் தேடிக்கொண்டு நான் எங்கெல்லாம் அலைவது?" என்று கூத்தன் கேட்டான்.

மங்கை திரும்பிப் பார்த்தாள். அவள் பார்வையில் அவன் எதற்காகத் தன்னைத் தேடி வந்திருக்கிறான் என்ற கேள்வி இருந்தது. நீராடிச் சரியாக ஆடையணியா நிலையில் அவன் மறைந்துநின்று தன்னைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறான் என்று அவளுக்குத் தோன்றியது.

"குடிலில் உதயன் உனக்காகக் காத்திருக்கிறார். எங்கிருந்தாலும் உன்னை அழைத்து வரச்சொன்னார்" என்றான் கூத்தன்.

மங்கை ஏதும் பேசாமல் அவனைத் தொடர்ந்து நடந்தாள்.

"மங்கை! உதயனுடன் மற்றொருவரும் வந்திருக்கிறார் அவரை நான் இதுவரையில் இந்த ஊரில் பார்த்ததேயில்லை. அவரது விழியும் பேச்சும் பார்க்கக் கேட்கப் பயத்தையே அளிக்கின்றன" என்றான் கூத்தன்.

மங்கை சிரித்தாள். "எங்கள் ஊரில் எல்லாரும் பார்க்கப் பயம் ஏற்படும் உருவத்துடன்தான் இருப்பார்கள். ஆனால் அவர்கள் உள்ளம் வெள்ளை" என்றாள்.

"ஆமாம், ஆமாம். ஒருவரைப் பார்த்து அவர்கள் மனத்தை எடைபோட முடியாது! உதாரணமாக நீ...!" என்று கூறிச் சிரித்தான் கூத்தன்.

இசை பயிலும் வேளை தவிர, கூத்தனிடம் நின்று பேச விரும்பாதவள் மங்கை. இப்போதும் கூத்தன் பேச்சை வளர்க்க ஏனோ விரும்புகிறான் என்பதைப் புரிந்து கொண்டாள் மங்கை.

குடிலை நோக்கி மங்கை விரைந்தாள். குடிலுக்குள் உதயனும் மற்றொருவரும் பேசுவது கேட்டது.

வெளியே சற்று நின்றாள். உதயன் புதிதாக வந்தவருக்கு ஏதோ விளக்கிக் கொண்டிருந்தான்.

அவன் விளக்கியதும் விவரமாகப் பேசியதும் ஏதோ குடும்ப விவகாரமன்று, அரசாங்க விஷயம் என்பதை மங்கை நொடியில் புரிந்து கொண்டாள்.

"மங்கை கூடலியிலிருந்து புறப்பட்டு வந்து ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது என்பதை மறந்து விட்டாயா?" உதயனை நோக்கிப் புதியவர் மதுவணன் கேட்டார். அவர் இராட்டிரகூட மன்னர் கிருஷ்ணதேவனின் ஒற்றர் படையைச் சேர்ந்தவர்.

"மறந்துவிடவில்லை, மதுவணரே! தக்க சமயத்தை எதிர் நோக்கிக் காத்திருக்கிறேன்" என்றான் உதயன்.

"இன்னுமா உரிய சமயம் வாய்க்கவில்லை? ஆறு மாதங்களாகக் கண்டராதித்தன் சிதம்பரத்திற்கு வரவில்லையா?" மதுவணர் கேட்டார்.

"இல்லை, தஞ்சையை விட்டு எங்கும் புறப்படவில்லை. மாளிகை விவகாரங்களைக் கவனித்தபடி இருக்கிறார்."

"ஏன் என்று தெரியவில்லையா?"

"கண்டராதித்தன் பட்டத்தரசி சொல்படிதான் கேட்டு நடக்கிறார். சோழ அரசியின் புத்திக் கூர்மையை நாடே போற்றுகிறது."

"யார் அந்தப் பட்டத்து ராணி? மழவர் குலத்துப் பெண் என்று சொல்கிறார்களே? கண்டராதித்தன் இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டானா?"

"ஆமாம்; முதல் மனைவி நாராயணி இறந்தவுடன் மழவரையர் மிகவும் சாமர்த்தியமாகத் தன் மகளைக் கண்டராதித்தனுக்கு மணம் செய்து கொடுத்து விட்டார்."

இதைக் கேட்ட மதுவணன் அந்தக் குடிலே அதிரும்படி சிரித்தார். "மழவரையன் பெரிய திட்டம் தீட்டிவிட்டான். மகளைத்

திருமணம் செய்து கொடுத்ததால் தன்னுடைய ஆதிக்கத்தைச் சோழ நாட்டில் செலுத்தலாம் என்று கனவு காண்கிறான். பாவம்! சோழ சாம்ராஜ்யமே இருந்த இடம் தெரியாமல் உருக்குலைந்து போகப் போகிறது என்று அந்தக் கிழவனுக்குத் தெரியாதே" என்று கூறும்போது சிரிப்புடன் நெருப்பும் அவர் குரலில் இருந்தது.

அவர் பேச்சைக் கேட்கக் கேட்க உதயனுக்கு வியப்பு ஏற்பட்டது.

"சோழ நாட்டு விவகாரங்கள் உங்களுக்கு மிக நன்றாகவே தெரிந்திருக்கின்றன" என்றான் உதயன்.

"என்னைவிட நம் மன்னருக்குத் தஞ்சையில் நடைபெறுபவை நன்றாகத் தெரியும்" என்றார் மதுவணர்.

"இங்கே இரட்டர் நாட்டரசர் கிருஷ்ணதேவன் பெயர் சொன்னாலே கிலிதான். எந்தச் சமயத்திலும் பெண்ணையாற்றைக் கடந்து சோழ நாட்டிற்குள் இராட்டிரகூடர் படைகள் வந்துவிடும் என்ற பயம் மக்களுக்கு இருக்கிறது" என்று உதயன் கூறி மதுவணரின் பேச்சுக்கு மேலும் உற்சாகமூட்டினான்.

"உதயா! கவனமாகக் கேள். தஞ்சையில் மந்திரி மணடலத்தாருக்கும் கண்டராதித்தனுக்கும் பலத்த கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறதாம். ஆனால் சோழ நாட்டு மக்கள் கண்டராதித்தன்மீது மிகுந்த அன்பு கொண்டிருக்கிறார்கள். கண்டராதித்தன் தஞ்சையைவிட்டு வெளியே புறப்பட்டுச் சென்றுவிட்டால் தஞ்சையில் சிறு குழப்பம் ஏற்படும். அந்தத் தருணம் பார்த்துத் தம் படைகளைச் சோழ நாட்டிற்குள் அனுப்பத் திட்டமிட்டிருக்கிறார் நம் மன்னர் கிருஷ்ணதேவன். கண்டராதித்தன் தஞ்சையை விட்டு எப்போது புறப்படுகிறார் என்பது தெரியுமா?" மதுவணன் மெல்லவே பேசினார்.

"ஆமாம், ஆமாம். அதுதானே நம் திட்டமும்? அதற்காகத்தானே மலர் மங்கையை அழைத்து வந்தேன். தமிழ் கற்றுக் கொடுத்தேன். பக்திப் பாடல்களைப் பயில்வித்தேன். கண்டராதித்தன் சிதம்பரம் நகரத்திற்கு விஜயம் செய்வதை ஏனோ தள்ளிப் போட்டுக்கொண்டே செல்கிறார்?" என்று உதயன் சோர்வுடன் கூறினான்.

"எனக்கென்னவோ அந்தத் திட்டம் அவ்வளவு எளிதில் நடக்கும் என்று தோன்றவில்லை. கண்டராதித்தன் சிதம்பரத்துக்கு வருவது எப்போது? மலர்மங்கையின் பாடலைக் கேட்பது எப்போது? என்ன திட்டமிது? கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது என்று பழமொழி கூறுவார்களே அது போல் இருக்கிறதே..." என்று சற்றுச் சலிப்புடனும் மிகுதியான சீற்றத்துடனும் கேட்டார் மதுவணர்.

உதயன் சற்று மௌனமாக இருந்தான். பிறகு, "மலர் மங்கை நினைத்ததற்கு மாறாக வெகு சீக்கிரம் தமிழைக் கற்றுக் கொண்டுவிட்டாள். அவள் குரலினிமையை நீங்கள் கேட்டால் மயங்கிவிடுவீர்கள். தஞ்சைக்கு அவளை அனுப்பி, கண்டராதித்தன் பார்வையில் படுமாறு செய்ய நினைக்கிறேன்" என்றான் உதயன்.

மதுவணன் சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. ஏதோ யோசித்தவாறிருந்தார். "உதயா! கண்டராதித்தன் சிவபக்தி மிகுந்தவனாம். அவனுடைய பக்தியைக் கொண்டே அவனைத் தஞ்சையை விட்டுப் புறப்படும்படி செய்துவிட வேண்டும். அல்லது தஞ்சை மாளிகையில் அவனுடன் நெருங்கி உறவாடி அவனைத் தீர்த்துவிட வேண்டும். அதற்கு மலர்மங்கை ஏற்றவள்தான். ஒரு வகையில் உன் திட்டம் சரிதான். ஆனால் கால தாமதமாகிறதே! இன்னும் சில நாள்களில் கண்டராதித்தன் சிதம்பரத்திற்கு

வருகிறானா என்று பார்ப்போம். இல்லாவிடில் மலர்மங்கையைத் தஞ்சைக்கே அனுப்புவோம்" என்று உறுதியாக ஒரு முடிவைக் கூறினார்."

குடிலுக்கு வெளியே நின்று அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த மலர்மங்கை திடுக்கிட்டாள். 'சோழ மன்னர் கண்டராதித்தரைத் தீர்த்துக்கட்டத் தன்னைப் பயன்படுத்தப் போகிறார்களா?'–அவள் உடல் சிலிர்த்தது.

2. அழகு ஓர் ஆயுதமா? ஆபத்தா?

மதுவணரும், உதயனும் பேசிக் கொண்டிருந்ததைக் குடிலின் வெளியே நின்று மலர்மங்கை கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் உடல் சிலிர்த்தது. கூடலி கிராமத்திலிருந்து சிதம்பரத்திற்கு அவளை உதயன் அழைத்து வந்தபோது ஏற்படாத அச்ச உணர்வு அவளுக்கு இப்போது ஏற்பட்டது. அநாதையாக மறுவேளை உணவு கிடைக்குமா என ஏங்கிக் கொண்டிருந்த மங்கைக்கு நல்ல ருசியான உணவு, வேளா வேளைக்குக் கிடைத்தது. கண்கவரும் வண்ணங்களில் பூ வேலைப்பாடுகளுடன் கூடிய புடைவை, உடுத்தக் கிடைத்தது. மார்புக் கச்சை அணிந்து பழக்கப்படாத அவளுக்கு உயர் குடும்பத்துப் பெண்களைப் போல் அணியப் பட்டுத் துணிகளில் கச்சுகள் கிடைத்தன. அவளுக்குச் சோறாக்கிப் போடும் மூதாட்டிதான் கச்சை அணிவதற்கு யோசனை சொன்னாள். அதுதான் நாகரிகம் என்பதையும் எடுத்துக் கூறினாள். வாரம் ஒருமுறை அவளுக்குத் திருஷ்டி கழித்தாள்.

"மங்கை! உன் அழகுக்கு நீ சோழ அரசரின் அந்தப்புரத்தில் இருக்க வேண்டியவள்" என்று மூதாட்டி அடிக்கடி கூறுவாள்; பருவ வயதுப் பூங்கொடிக்கு அந்த மூதாட்டி அவ்வப்போது தக்க யோசனைகள், கருத்துரைகள் கூறிவந்தாள்.

"மங்கை! அழகு ஒரு பெண்ணைப் பெருமைப் படுத்துகிறது. அழகே சிலசமயம் அவளுக்குச் சத்ருவாகவும் மாறுகிறது" என்பாள் அந்த மூதாட்டி.

மலர் மங்கை சிந்தித்தாள். "அழகு ஒரு பெண்ணைப் பெருமைப் படுத்தும் என்பது சரி. அழகு சத்ருவாக எவ்வாறு விளங்க முடியும்?"–அவள் மூதாட்டியைக் கேட்டாள்.

மூதாட்டி தன் பொக்கை வாயைக் காட்டிச் சிரித்து "மங்கை! அழகைப் பற்றி அவ்வளவு எளிதில் விளக்கிச் சொல்லி விட முடியாது. அழகால் ஆபத்து எப்படி வரும், எப்போது வரும் என்பதையும் உடனே சொல்லிவிட முடியாது. என்றாலும் எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொண்டு எச்சரிக்கையாக இரு" என்றாள்.

மலர் மங்கைக்கு இன்னும் பயம் அதிகமாகியது. "பாட்டி! என்ன சொல்கிறீர்கள்? நான் ஓர் அநாதை. மொழி தெரியாத ஊருக்கு வந்திருக்கிறேன். என்னை எதற்காக இங்கே அழைத்து வந்திருக்கிறார்கள் என்றும் எனக்குத் தெரியாது. பொழுது போகாமல் திண்டாடிய நான் பக்திப் பாடலைக் கற்றுக் கொண்டேன், தமிழ்ப் பாடல்கள் என் மனத்துக்குப் புத்துணர்வைத் தருகின்றன அவையே எனக்குத் துணையாக இருக்கின்றன. ஆனால் ஆபத்து எப்படி வரும்? எப்போது வரும்? என்று தெரியாதென்று சொல்கிறீர்களே அதுவே எனக்குக் கவலையாகவும் இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது" என்றாள்.

மூதாட்டி அவள் கரங்களைப் பிடித்துக்கொண்டு மெல்லத் தடவி, "மங்கை! பயப்படாதே. உனக்கு எந்தவித ஆபத்தும் வந்துவிடாது. ஆனால் ஒரு பெண்ணின் பெரும் அணிகலன் கற்பு. அந்த அணிகலனை நீ எச்சரிக்கையுடன் பாதுகாக்க வேண்டும். நீ தினமும் பாடுகிறாயே பரமன்மீது, அந்தப் பாடல்கள் எப்போதும் உன் அருகே இருந்து உன்னைக் காப்பாற்றும்" என்று ஆறுதல் கூறினாள்.

"பாட்டி! நான் உயிருக்கு அஞ்சவில்லை. நீங்கள் கூறுவது போல் அந்த அணிகலனை நான் எச்சரிக்கையுடன் பாதுகாக்க வேண்டும். அதற்காகத்தான் பயப்படுகிறேன்" என்று மங்கை கூறும்போது அவள் குரலில் பயமிருந்தது.

"மங்கை! நீ மிகுந்த புத்திசாலி. கற்பின் பெருமையை, புனிதத்தை உணர்ந்திருக்கிறாய். சோழ நாட்டில் ஒரு பெண்ணுக்கு என்றும் பாதுகாப்பு உண்டு. ஆனால் பெண்ணுக்குள்ள கற்புக்கு அவளுடைய அழகுதான் சில சமயங்களில் தொல்லைதரும். அதுதான் எனக்குக் கவலை. உன்னைப் பயமுறுத்த வேண்டும் என்று நான் இதைச் சொல்லவில்லை. உன்னை வடக்கே வெகு தொலைவிலிருந்து அழைத்து வந்திருக்கும் உதயன் என்ன உள் நோக்கம் கொண்டிருக்கிறான் என்பது எனக்குத் தெரியாது. உனக்குப் பாடல்கள் கற்றுத்தரும் பிள்ளை நல்லவன்தான், ஆனால், நெருப்பின் அருகே உள்ள பஞ்சு எவ்வளவு வெண்மையாக இருந்தாலும் நொடியில் கருகிவிடும்.

"அவனிடமும் நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நான் ஒரு பாடலைக் கற்றுத் தருகிறேன். அதை மனப்பாடம் செய்து எப்போதும் மனத்திற்குள் சொல்லிக்கொள். எந்த ஆபத்தும் உன்னை ஒன்றும் செய்யாது" என்று கூறி மூதாட்டி ஒரு பதிகத்தைப் பாடினாள்.

"உருவளர் பவள மேனி யொளிநீறணிந்து
உமையோடும் வெள்ளை விடை மேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடி மேலணிந்துளான்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வ மானபலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே."

அந்த முதிய பருவத்தில், குரல் நடுங்கினாலும் இனிமை குறையாத அந்தத் தெய்விகப் பாடலில் மெய் மறந்திருந்த மலர்மங்கை, "பாட்டி! இவ்வளவு அருமையாகப் பாடுகிறீர்களே! இந்தப் பாடலின் அர்த்தம் என்ன பாட்டி?" என்று மிக ஆவலுடன் கேட்டாள்.

"மலர் மங்கை! இது போன்று நூற்றுக் கணக்கான பாடல்கள் எனக்குத் தெரியும். இந்தப்பதிகம் ஞானசம்பந்தப் பெருமான் இயற்றியது. சிதம்பரத்திற்கு அருகே சீர்காழி எனும் ஊரிருக்கிறது. அங்கே பிறந்தவர் சம்பந்தர். மூன்று வயதிலேயே ஈசனருளைப் பெற்றவர். சிவபெருமானைக் கண்டவர். சிவபெருமான் பவழ நிறம். திருநீறு உடலில் பூசியவர். பார்வதிதேவியோடு வெள்ளை நிற எருதின் மீதமர்ந்தவர். முடியிலே கொன்றை மலரை, சந்திரனை அணிந்தவர். அவர் அடியார்களின் இதயத்திலே வசிப்பதால் லட்சுமி, துர்க்கை, ஜெயலட்சுமி, பூதேவி எட்டுத் திக்குகளிலுள்ள தேவதைகள் மற்றும் பல தெய்வங்கள எல்லாம் அடியார்களுக்கு நல்லவையே செய்யும் என்று சம்பந்தப் பெருமான் அந்தப் பதிகத்தில் கூறியுள்ளார். நம்பியாண்டார் நம்பி என்ற பெரியவர் சிதம்பரத்திற்கு வந்திருந்தபோது அவருக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பல பதிகங்களை அவரிடமிருந்து கற்றேன்.

அவற்றுள் 'கோள் அறு பதிகம்' என்ற பதினோரு பாடல்கள் எனக்கு மனப்பாடம். பியந்தைக் காந்தாரம் என்ற பண்ணில் அதைப் பாட வேண்டும். கூத்தன் உனக்குச் சொல்லிக் கொடுப்பான்."

மூதாட்டி இவ்வாறு நிறுத்தாமல் சொல்லிக் கொண்டிருக்கும்போது மங்கை உள்ளம் நெகிழ, "பாட்டி, பாட்டி! உங்களுக்கு இசைப் புலமை உண்டென்பதை நான் முன்பே அறிந்திருந்தால் உங்களிடமே நான் இசையைக் கற்றுக் கொண்டிருப்பேனே..." என்று கூறும்போது உணர்ச்சி வசப்பட்டாள்.

"மங்கை! எனக்கு எழுபது வயதிற்கு மேலாகிறது. உடல் தளர்ந்து விட்டது. இசைக்குத் தெளிவான உச்சரிப்பு மிக அவசியம். குரல் மிக முக்கியம். நினைவு தவறக்கூடாது. தாளம் தப்பக் கூடாது. இன்னும் எவ்வளவு நாள்கள் இந்த மண்ணில் வாழ வேண்டியிருக்குமோ தெரியாது. இருக்கும் சிறிது காலத்திற்குள் நல்ல செயல்களைச் செய்யவே நினைக்கிறேன். சங்கீதம் கற்றுக்கொள்ள வந்திருக்கும் உனக்குச் சோறாக்கிப் போடுமாறு உதயன் கேட்டுக் கொண்டார். உதயன் பேச்சை மீறமுடியாது. நீ இங்கே இருக்கும் வரை உனக்கு உறுதுணையாக இருப்பேன்" என்றாள்.

"நான் இங்கே இருக்கும் வரை–என்றால்... எனக்குப் புரியவில்லையே! நான் சிதம்பரத்திலேயே இருக்கப் போவதில்லையா? கொன்றை மலரைச் சூடி நாள்தோறும் தில்லை நடராசரைக் கண்டு களித்திருக்கப் போவதில்லையா? உங்களுக்கு வேறு செய்தி ஏதாவது தெரியுமா?" மங்கை கவலையுடன் கேட்டாள்.

மூதாட்டி மௌனமாக இருந்தாள். பிறகு மெல்லிய குரலில் சொன்னாள்: "மங்கை! நான் இவ்வளவு பேசியதே தவறு. எனக்கு அப்படியொரு கட்டளை. உனக்குச் சோறு போட வேண்டுவது

மட்டுமே என் வேலை. வேறெதையும் நான் பேசக் கூடாது. முக்கியமாக மற்றவர்கள் எவரும் உன்னுடன் பேசாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உதயனுக்குத் தெரிந்தால்..."

இது கேட்ட மங்கை மெல்ல நடுங்கினாள். உள்ளத்தில் பயம் ஏறபட்டது.

அன்று, குடிசைக்குள் உதயனும் மதுவணரும் பேசிக் கொண்டிருப்பதை வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்தபோது சில நாள்களுக்கு முன்பு மூதாட்டி கூறியவை நினைவுக்கு வந்தன. உதயனும் மதுவணரும் சேர்ந்து சில சதித் திட்டங்களை வகுக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டாள். உதயன் அந்தத் திட்டத்தை முதலிலேயே தன்னிடம் சொல்லியிருக்கலாம். ஏன் சொல்லவில்லை என்று எண்ணும்போது அவள் உள்ளத்தில் கவலை எழுந்தது. என்ன நேருமோ என்று அஞ்சினாள்.

குடிசைக்கு வெளியே யாரோ நிற்பது போல் நிழலாடியதை அறிந்த உதயன், "யாரது அங்கே?" என்று குரல் கொடுத்தவாறு வெளியே வந்தான். மலர்மங்கை நிற்பதைக் கண்டான். மலர் மங்கையின் நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன.

"மங்கை! நீயா நின்று கொண்டிருக்கிறாய்? இப்பொழுது தான் வந்தாயா? உனக்காக எவ்வளவு நேரம் காத்திருப்பது? நமது அரசாங்கத்து முக்கிய அதிகாரி வந்திருக்கிறார். அவருக்கு ஏதாவது உணவு தரவேண்டாமா? நீ எங்கே போய் விட்டாய்? அந்த மூதாட்டி எங்கே?" என்று உதயன் கேட்டான். பிறகு அவனே, "ஓ! குளித்துவிட்டு வருகிறாயா?" என்று கூறி உட்பக்கம் திரும்பி "மதுவணரே! இங்கே யார் வந்திருக்கிறார்கள் வந்து பாருங்கள்" என்று அவரை அழைத்தான்.

மதுவணர் வெளியே வந்து மலர்மங்கையைப் பார்த்து ஒரு கணம் திகைத்தார். நீராடி வந்திருந்த அந்தப் புத்தம் புது மஞ்சள் மேனியும் தோளில் தவழும் கூந்தலும் மை தீட்டாமலேயே கார்மேகம் போன்ற விழிகளும் உதடுகளுக்கு மேல் அரும்பி இருந்த மெல்லிய வியர்வைத் துளிகளும் சற்றே பயத்தால் நடுங்கி விம்மும் தனங்களும், செவ்வனே உடுத்தப்படாமல் அவசரத்தில் அள்ளிச் செருகியிருந்ததால் இடையினின்று சற்று இறங்கியிருந்த ஆடையும், வளைந்த இடையைத் தாங்கியுள்ள வாளிப்பான தொடைகளும் செம்பாதங்களும் மதுவணரைச் சற்றுத் தடுமாறச் செய்தன.

மலர்மங்கையை ஓராண்டிற்கு முன்பு கூடலியில் அவர் பார்த்திருக்கிறார். சோழ நாட்டிற்குச் சென்று செய்ய நினைக்கும் செயல்களை முடித்து வரக்கூடிய திறமையுடையவள் என்று அவளைப் பார்த்த மாத்திரத்திலேயே முடிவு செய்து விட்டார். அப்போதைக்கு இப்போது எழில் பூரணமாக அவள் மேனியில் குடி கொண்டு விட்டதை அவர் காணும் போது சற்றுத் தடுமாறினார்.

"உதயா! என் மனமே சற்றுத் தடுமாறுகிறது. சோழ மன்னன் கண்டராதித்தன் இவளைப் பார்த்தவுடன் பொசுங்கி விடுவான்" என்று கூறி, மலர்மங்கையின் பாதாதி கேசத்தை மீண்டும் ஒருமுறை நோக்கினார்.

மலர் மங்கையை நாணம் சூழ்ந்தது. கையது கொண்டு மெய்யது தழுவி, அச்சங் கலந்த நாணம் பொங்க குடிலுக்குள் புகுந்து மறைந்தாள்.

"மதுவணரே! உங்களைப் போல் பெண்ணழகில் சோழ மன்னன் மயங்கி விடுவானா என்பது சந்தேகமே" என்றான் உதயன்.

மதுவணன் "ஹோஹோ" என்று சிரித்து "நான் மட்டும் பெண்ணழகுக்கு அடிமைப்பட்டு விடுவேன் என்று நினைத்தாயா? ஒரு நாட்டின் ஒற்றர் ஒரு துறவியைப் போல் வேடம் பூண்டால் மட்டும் போதாது. துறவிக்குள்ள குணங்களுடன் இருக்க வேண்டும். மது, மாது எதிலுமே இச்சைப்படாதிருக்க வேண்டும். பொன்னுக்கும் ஆசைப்பட்டு விடக்கூடாது. ஒற்றனின் இலட்சியமே, அவனது சொந்தத்தாய் நாட்டிற்கு இறுதி மூச்சு வரை உண்மையாக உழைப்பதாக இருக்க வேண்டும். பெண்ணழகுக்கு நான் அடிமை ஆவதாக இருந்தால் வரும் வழியில் திருப்பாதிரிப் புலியூர் எனும் ஊரில் நான் சந்தித்த அழகியிடம் மயங்கியிருக்க வேண்டும்" என்றார்.

உதயன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். "என்ன, வழியில் ஓர் அழகியைச் சந்தித்தீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம். கருட நதிக்கரைக்கு வரும்போது பொழுது சாய்ந்து விட்டது. ஒரே மூச்சில் பயணம் செய்தால் சிதம்பரத்தை அடைந்து விடலாம் என்று கேள்விப்பட்டேன். பயணத்திற்குக் மாற்றுக் குதிரை கிடைக்கவில்லை. கருடநதிக் கரையிலுள்ள சத்திரத்தில் குதிரை கிடைக்கும் என்று சொன்னார்கள். நான் அங்குச் சென்றேன். மிகவும் களைப்பாக இருந்தது. பசி வேறு. அங்கேதான் அந்த அழகியைச் சந்தித்தேன்!" என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

"அழகி, அழகி என்று நீங்கள் கூறுவதைப் பார்த்தால் உண்மையிலே பேரழகியைத்தான் சந்தித்திருக்கிறீர்கள்"–உதயன் அவரைத் தூண்டி விட்டான்.

"ஆமாம், உதயா! சோழ நாட்டில் இப்படியோர் அழகுத் தேவதை இருப்பாளென்று நான் நினைக்கவில்லை" என்றார் மதுவணன்.

"திருப்பாதிரிப் புலியூர் திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்த ஊர். சோழ நாட்டின் ஆட்சிக்கு அந்த ஊர் உட்பட்டிருக்கவில்லை. இப்போது வெள்ளாற்றிற்கு அப்புறம் தான் சோழநாடு" என்றான் உதயன்.

"ஆமாம், ஆமாம். சிறுசிறு நாடுகளுக்கு வெவ்வேறு பெயர் இருந்தாலும் எல்லாம் சோழநாடுதான். எந்த நாடாயிருந்தால் என்ன? நான் அழகியைச் சந்தித்தேன். இரவு வயிற்றிற்கு ஏதாவது ஆகாரம் கிடைக்குமா என்று நான் தேடிக் கொண்டிருந்தபோது அவளே உணவளிப்பதாக முன் வந்தாள். சத்திரத்து முன் திண்ணையில் அமர்ந்தேன். பௌர்ணமி கழிந்து இரண்டு நாள்கள்தாம் ஆகியிருந்தன. வெளியே நிலவு வெள்ளம். அவள் இரு முறை இடுப்பில் குடத்துடன் தண்ணீர் கொண்டுவர வெளியே சென்று வந்தாள். ஒவ்வொரு முறையும் என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துச் சென்றாள்.

"இன்னும் சிறிது நேரத்தில் உணவு போடுகிறேன்..." என்று சிரித்தவாறு சொன்னாள். அவள் ஒயிலாக நடந்து செல்வதையே பார்த்துக் கொண்டிருக்கத் தோன்றியது. அவள் மேனியை நிலவொளி குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. அடர்ந்த கூந்தலை அள்ளிச் செருகியிருந்தாள்.

"சத்திரத்தினுள்ளே இலைபோட்டு உண்ண அழைத்தாள். நான் அவள் அழகை மனத்திற் குள்ளேயே பருகிக் கொண்டிருந்தேன்..."

உதயன் இப்போது குறுக்கிட்டான். "பெண்ணழகிற்கு அடிமைப் படமாட்டேன் என்று சற்று முன்பு சொன்னீர்கள்; ஆனால் அங்கு நடந்ததே வேறு விதமாக இருக்கும் போலிருக்கிறதே..."

மதுவனன் கையமர்த்தினார். "நான் சொல்வதைக் கேள். அவள் சோறு பரிமாறினாள். அவள் குனிந்து நிமிர்ந்தபோது அவளுடைய பரிபூரண எழிலின் சிகரக் கலசமாகத் திகழும் அவயவங்கள் என் மனத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்தின. உண்ட களைப்புத் தீர நான் திண்ணையில் வந்து உட்கார்ந்தேன். அயல் நாட்டு ஒற்றன் என்று என்னை ஒருவரும் கண்டுவிடக் கூடாதே என்ற கவலை எனக்கு. அதனால் அதிகமாகப் பேசாமல் மௌனம் சாதித்தேன். கொச்சைத் தமிழ் காட்டிக் கொடுத்து விடப்போகிறதே என்ற கவலை எனக்கு. இரவு அங்கே தங்கிவிட்டு அதிகாலையில் புறப்பட்டு விடத் திட்டமிட்டேன்.

"சிறிது நேரத்தில் அவள் என் அருகே திண்ணையில் வந்தமர்ந்தாள். அவள் கரத்தில் மரத்தட்டு, அதில் காய்ந்த வெற்றிலை, பாக்கு. அவளே முதலில் சிரித்தாள். நான் பேச்சைத் தொடங்குவேன் என்று அவள் நினைத்திருக்கலாம். உறக்கம் வந்தவனைப்போல் நான் விழிகளை மூடிக் கொண்டேன்.

'மிகத் தொலை தூரத்திலிருந்து வருகிறீர்களா?' என்று கேட்டாள்.

"ஆமாம் என்பதா, இல்லை என்பதா? என்ன சொல்வதென்றே எனக்கு ஒருகணம் புரியவில்லை.

"சத்திரத்தின் திண்ணையில் சந்திரனுடைய கரங்கள் பரவி அவளுடைய மேனியைத் தழுவிக் கொண்டிருந்தன. நிலவொளியில் அவள் முகம் எனக்குப் பயங்கரமாகக் காட்சியளித்தது." சற்று நிறுத்தினார்.

"உங்களுக்குக்கூட பயமா?"–உதயன் கேட்டான்.

"உதயா! நான் மிகத் தொலைவிலிருந்து பயணம் செய்து வருவதாகக் கூறினால் அவள் எந்த ஊர் என்று

கேட்பாள். சொல்லவும் முடியாது. கொல்வாமல் இருக்கவும் முடியாது. அதனால் பயம் ஏற்பட்டது."

"அதனாலா பயம் ஏற்பட்டது?"

"அதனால் மட்டுமில்லை, உதயா! அவள் என்னை நெருங்கிக் கன்னட மொழியில் தெளிவாகப் பேசிக் கொண்டே என்னை அணைக்க முயன்றாள்."

"நீங்கள அணைத்துக் கொண்டீர்கள். அப்படித் தானே?"

"இல்லை. நான் அதற்குத்தான் பயந்து விட்டேன்."

"என்ன மனிதர் நீங்கள்! நல்ல வாய்ப்பை நழுவ விட்டு விட்டீர்கள்."

"ஆம்! பார்த்தாயா, பார்த்தாயா... முதலிலேயே சொல்லி விட்டேனே! ஒற்றன் ஒரு துறவியைப் போல் இருக்க வேண்டும் என்று. அவள் அழகி மட்டுமல்லள். மிகவும் சாமர்த்திய சாலியாக இருக்க வேண்டும். எனக்குக் கன்னட மொழி தெரியுமென்பதை எப்படியோ அறிந்து கொண்டிருக்கிறாள். ஒருவேளை அவள் சோழநாட்டு வேவுப் படையைச் சேர்ந்தவளாக இருக்கலாம். அவள் அழகுக்கு அடிமையாகி, மயங்கி யிருந்தால் நான் இந்த நேரம் இங்கு வந்திருக்க முடியாது. நீ அந்த இடத்திலிருந்தால் உன் வசமிழந்திருப்பாய்..." என்று கூறிச் சற்றுப் பேச்சை நிறுத்தினார்.

உதயன் சிரித்தான். "இந்த ஊருக்கு வந்து பல வருடங்கள் ஆகின்றன. பெண் சபலமுடையவனா யிருந்தால் நான் மதிப்பையே இழந்திருப்பேன். என்னிடம் இந்த ஊரிலுள்ளவர்களுக்கும் பெருமதிப்பு; மரியாதை; அச்சமும்கூட."

குடிலுக்குள்ளே இருந்து இவர்கள் பேசுவதைக் கேட்டு கொண்டிருந்த மலர்மங்கை, 'நல்ல வேளை ஒரு கழுகுக்

கண்ணிடமிருந்து தப்பினோம். நம் கற்பு எனும் அணிகலனைப் பங்கப்படாமல் பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால், அடுத்த வார்த்தையை உதயன் கூறியவுடன் மலர்மங்கை திடுக்கிட்டாள். உதயனின் திட்டத்தால் தனக்கு எவ்வளவு பாதகம் ஏற்படப் போகிறது என்பதை நினைக்கும் போது அவள் உடல் நடுங்கியது.

உதயனுக்குப் பூரணமான நம்பிக்கை இருந்தது. கண்டராதித்தன் மலர்மங்கையைப் பார்த்தவுடனே அவளிடம் மனத்தைப் பறிகொடுத்து விடுவான் என்று உறுதியாக நம்பினான்.

மதுவணனுக்கு நம்பிக்கை இல்லை.

"நீங்கள் உடனே எதையும் நம்ப மாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். உம்மைப்போல் அவர் துறவியல்லர். அவருக்குப் பெண்ணாசை அதிகம். அரண்மனை ரகசியங்கள் சில எனக்குத் தெரியும்" என்று அழுத்தந்திருத்தமாக உதயன் பேசினான்.

குடிலுக்குள் திகிலுடன் இருந்த மலர்மங்கை பல்லைக் கடித்துக் கொண்டாள்.

உதயன் கூறியதற்கு மதுவணன் சிரித்தவாறு கூறினார்: "சரி, உதயா! மங்கை எப்போது கண்டராதித்தனைச் சந்திப்பது? அவர் எதிரே சென்று எந்தக் காரணம் கொண்டு நிற்பாள்? அவளைப் பார்த்து எப்போது அவன் மயங்குவான்? அதற்குள் இந்த யுகமே முடிந்து விடும்" என்று சலித்துக் கொண்டார் மதுவணன்.

"நான் அதற்கேற்ற திட்டம் ஒன்றை முன்பே முடிவு செய்து வைத்திருக்கிறேன். கண்டராதித்தன் சிதம்பரத்திற்குச் சில நாள்களிலே வருகிறான். சிதம்பரம் நடராசர் மீது மிகுந்த பக்தி

உள்ளவன். நடராசர் சந்நிதியில் நின்று மெய் உருகப் பாடுவது அவனுக்குப் பிடிக்கும். மலர்மங்கையின் குரல் இனிமை உங்களுக்குத் தெரியுமா? கண்டராதித்தன் நடராசர் சந்நிதியிலிருக்கும் போது மலர்மங்கை பாடுவாள். அவள் பாட்டைக் கண்டராதித்தன் ரசிப்பான். பிறகு...." என்று உதயன் உற்சாகமாகக் கூறினான்.

மதுவணன் மௌனமாயிருந்தார். "மிகவும் இலேசாக உன் திட்டத்தைக் கூறிவிட்டாய். எவ்வளவு ஆபத்தும் அபாயமும் அதில் நிறைந்திருக்கின்றன என்று உனக்குத் தெரியுமா? கண்டராதித்தனிடம் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொடுத்து விட்டாயா?" என்று மதுவணன் கேட்டார்.

"இல்லை. இனிதான் சொல்லப் போகிறேன்" என்றான் உதயன்.

"அப்படியா? நான் சொல்லித் தருகிறேன். அவள் மிக எச்சரிக்கையுடன் நடிக்க வேண்டும். சிறிது அவநம்பிக்கை அவள் மீது ஏற்பட்டாலும் நம் திட்டங்கள் பாழாகி விடும். நீ இப்போதே ஊருக்குள் சென்று கண்டராதித்தன் விஜயம் எப்போது என்பதைத் தெளிவாகத் தெரிந்து வா" என்று மதுவணன் கூறவும், "அவளைத் தனியே விட்டுவிட்டா?" என்று உதயன் கவலையுடன் கேட்டான்.

"நான் துணையாக இருக்கிறேனே, என்மீது உனக்கு நம்பிக்கை இல்லையா?" என்று மதுவணன் மீசையை மெல்ல ஒதுக்கிக் கொண்டு கேட்டார்.

உதயன் தலையைப் பக்கவாட்டில் அசைத்தான். பல்லைக் காட்டி, "நீங்கள் தான் துறவியாயிற்றே" என்றான்.

இருவரும் சேர்ந்து பலமாகச் சிரித்தனர். ஆனால் குடிலுக்குள்ளிருக்கும் மலர்மங்கைக்கு ஒரு வேங்கை கர்ஜிப்பது போல் அந்தச் சிரிப்பொலி கேட்டது.

3. இனிமைக்குப் பரிசு!

குடிலுக்குள் மலர்மங்கை சுவரில் சாய்ந்தவாறு நின்று கொண்டிருந்தாள். ஈரக் கூந்தலைத் துவட்டிக் கொள்ளவில்லை. கூந்தல் நீண்டு இடுப்பை முத்தமிட்டது. அவள் பார்வையில் அச்சம் கலந்திருந்தது. உடல் மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தது. மதுவணன் தன்னை என்ன செய்வாரோ என்று பயம் அவளிடம் நிறைந்திருந்தது.

"மலர்மங்கை!" என்றழைத்தவாறு மதுவணன் குடிலுக்குள் நுழைந்தார்.

"அழகான பெயர். அழகான வடிவம். குரலும் மிகவும் அழகாக இருக்கும் என்று உதயன் சொல்லியிருக்கிறான்" என்று மெல்லச் சிரித்தவாறு மதுவணன் அவள் அருகே வந்தான்.

மலர்மங்கையின் பயம் மேலும் அதிகமாகியது. அவள் சற்று நகர்ந்தாள்.

"மங்கை! நீ நன்றாகப் பாடுவாயாமே! ஒரு பாட்டுப் பாடேன், கேட்போம்" என்றான் மதுவணன், அவளது பாதம் முதல் முடிவரை ஒருமுறைக்கு இருமுறை கண்களைப் படரவிட்டு.

மலர்மங்கையின் நாக்கு மேல் அண்ணத்துடன் ஒட்டிக் கொண்டது. அவள் மதுவணனை ஏறிட்டுப் பார்த்தாள். பரிதாபமான

அந்தப் பார்வையில், 'நான் ஒரு பாவமும் அறியாதவள். உங்கள் மகளைப் போன்றவள். என்னை ஒன்றும் செய்யாதீர்கள்' என்று கெஞ்சும் மானின் மருட்சி இருந்தது.

"மங்கை! உனக்கு உதயனை எப்படித் தெரியும்? உன்னைப் பற்றி மிகவும் புகழ்கிறானே!" என்று மதுவணன் கேட்டார்.

மீண்டும் மங்கை அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் உடல் லேசாக நடுங்குவது அவருக்குத் தெரிந்தது.

"மங்கை! ஏன் பேசாமடந்தையாக நிற்கிறாய்? உன் முகம் ஏனோ மாறிவிட்டது. உடல்நிலை சரியில்லையா?" என்று மதுவணன் கேட்டார். அவளை நெருங்காமல் தொலைவில் நின்றார். மங்கைக்குச் சற்றுப் பயம் தெளிந்தது. முகத்தை மெல்லத் தாழ்த்திக் கொண்டாள்.

"நன்றாகத் தமிழ் கற்றுக் கொண்டு விட்டாய் அல்லவா?" என்று மதுவணன் கேட்டார்.

ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள் மங்கை. "வாய் திறந்துப் பேசமாட்டாயா?"—மதுவணன் மீண்டும் கேட்டார்.

திறப்பேன் என்பதற்கு அடையாளமாக மங்கை தலையை அசைத்தாள்.

"எல்லாம் சைகையிலே தானா? உதயன் கேட்டால்தான் பேசுவாயா? அப்படியென்றால் நான் வெளியே நிற்கிறேன். உதயன் வந்தவுடன் வருகிறேன்" என்று வெளியே செல்லப் போன மதுவணனை நோக்கி, "வேண்டாம், வேண்டாம்! இப்படி

உட்காருங்கள். அவருக்குத் தெரிந்தால் கோபிப்பார்" என்று கூறி ஒரு மரப் பலகையைக் கூட்டிக் காட்டினாள் மங்கை.

"தைரியமாகப் பேச வேண்டும். இப்படிப் பயந்தால் சோழ அரசரிடம் எப்படிப் பேசுவாய், பழகுவாய்?"–மதுவணன் கேட்டார்.

சோழ மன்னரிடம் பழகுவதா? அவளுக்குப் புரியவில்லை. அவர் என்ன சொல்கிறார்? அவள் அவரை நோக்கினாள்.

"உதயன் உன்னிடம் ஒன்றும் சொல்ல வில்லையா?" என்று மதுவணன் கேட்டார்.

சொன்னார் என்பதா, சொல்லவில்லை என்பதா?–மங்கை யோசித்தாள்.

"எதைப் பற்றி?" மங்கைக்குச் சற்றுத் தைரியம் பிறந்து விட்டது.

"மங்கை! முதலில் நான் கேட்டேனே, அதற்கு மறுமொழி கூறு. உதயனை உனக்கு எப்படித் தெரியும்?"

"ஐயா, நான் ஓர் அநாதை..." என்று மங்கை மெல்லக் கூறினாள்.

"அது தெரியும் எனக்கு. உதயன் உனக்கு எப்படிப் பழக்கம்?"–மதுவணன் கேள்வியில் பல அர்த்தங்கள் மறைந்திருந்தன.

"கூடலியில் படகோட்டும் நரசிங்கன் என்னை வளர்த்து வந்தார். ஒரு வேளை ஆகாரத்திற்கே திண்டாட்டம். சரியான ஆடை இல்லை. நரசிங்கன் இல்லாவிடில் என் கதி? நான் மண்ணோடு மண்ணாகி யிருப்பேன். அவரும் ஒருநாள் வெள்ளத்தில் படகோடு மூழ்கி விட்டார். அப்பொழுதுதான் உதயன் என்னைச் சந்தித்தார்,

அவருக்குப் பெரிய வீடு ஒன்று இருக்கிறது இல்லையா?" என்று கூறிச் சற்று நிறுத்தினாள் மங்கை.

"ஆமாம், தனியே ஒருபெண்–பருவப்பெண் வாழ்க்கைப் பாதை தெரியாமல் திண்டாடுவது சரியில்லைதான். உதயன் உன்னை அந்த வீட்டிற்கு அழைத்துச் சென்றானா?" என்று மதுவணன் கேட்டார்.

"ஆமாம் என்னை அந்த வீட்டுத் தலைவியிடம் ஒப்படைத்தார். ஒரு வருடம் எந்தவிதக் குறையும் இன்றி வாழ்ந்தேன்; வளர்ந்தேன்; பருவமடைந்தேன். சில நாள்களில் உதயன் தெற்கே எங்கோ போய் விட்டார். சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒருநாள் அவர் வந்தார். பட்டுப் பட்டாடை கொண்டு வந்தார். என்னைப் பார்த்து அவர் முகத்தில் ஒருவிதப் பிரமிப்பு ஏற்பட்டது. என் என்று எனக்குப் புரியவில்லை. அவரைச் சந்திக்க அந்த வீட்டிற்கு யார் யாரோ வருவார்கள். ஒரு முறை அரண்மனையிலிருந்து அவருக்கு அழைப்பு வந்தது" என்று கூறி வந்த மங்கையின் பேச்சின் நடுவே, "ஆமாம், அப்போது நானும் கூட வந்தேன். இப்போது நீ எந்த நாட்டிற்கு வந்திருக்கிறாய் என்று அறிவாயா?" என்று மதுவணன் கேட்டார்.

இதென்ன சிறு குழந்தையைப் போல் கேட்கிறாரே என்று மெல்லச் சிரித்தவாறு, 'சோழ தேசம்' என்றாள் மங்கை. இப்போது அவளுக்குச் சற்றுத் துணிவு பிறந்துவிட்டது.

"நம் நாட்டிற்குச் சோழர்கள் விரோதிகள். சோழர்கள் நம் நாட்டிற்கு இழைத்துள்ள கொடுமைகள் ஒன்றல்ல, இரண்டல்ல. நியாயமாகச் சோழநாட்டுப் பகுதிகள் நமது நாட்டுடன் சேர்க்கப்பட வேண்டும். இப்போது ஆட்சி புரியும் கண்டராதித்தன் இருக்குமிடத்தில் நம் மன்னர் வணக்கத்துக்குரிய கிருஷ்ணதேவ மாமன்னர் அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். கண்டராதித்தன்

தந்தை பாரந்தகன் இருந்த வரையில் அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. இப்போது நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. கண்டராதித்தனைப் பதவியை விட்டு இறக்க வேண்டும். அதற்குத் தகுந்தவர்களைத் தேடினோம். உன்னைத் தேர்ந்தெடுத்தோம்... உதயனிடம் சொன்னேன். உதயனே ஒரு திட்டம் கூறினான். உன்னைச் சிதம்பரத்துக்கு அழைத்து வந்தான். தமிழ் கற்பித்தான். உனக்குச் சங்கீதத்தில் ஆர்வமிருப்பதாக அவன் கூறினான். குரலும் நன்றாக இருக்கிறதாம். உன்னைப் பெற்ற நாட்டிற்கு, நம் நாட்டிற்கு உன்னால் ஒரு முக்கியமான வேலை ஆக வேண்டியிருக்கிறது..." என்று கூறிச் சற்று நிறுத்தினார் மதுவணன்.

மலர்மங்கைக்குச் சற்று முன்பு மதுவணனிட மிருந்த அச்சம் இப்போது பறந்தோடி விட்டது. ஆனால் புதிய பயம் பிடித்தது. கண்டராதித்தனைப் பதவியினின்று இறக்கத் தன்னால் இயலுமாமே! அது எப்படி? ஈரக் கூந்தலை மெல்ல உலர்த்திக் கொள்ளத் தோளின் மீது கூந்தலைப் படரவிட்டாள். லேசாகத் துவட்டிக் கொண்டாள். "சற்று வெளியே வந்து வெயிலில் கூந்தலைக் காய வைக்கலாமா?" என்று மங்கை கேட்டாள்.

'ஆகா; பேசி விட்டாள். நாம் நினைத்தது போல் அவள் பயந்தவள் அல்லள். பேசாமடந்தை அல்லள்' என்று சந்தோஷப்பட்ட மதுவணன், அவளை வெளியே செல்ல அனுமதித்துத் தானும் பின் சென்றார். அவள் பின் அழகின் அசைவு கண்டு அவர் பிரமித்து நின்று விட்டார்.

மலர்மங்கை, ஒரு கரத்தால் கூந்தலைக் கோதியவாறு தோள் மீது பிரித்துப் படரவிடும் அழகைக் கண்டார்.

அவள் கரங்களை உயர்த்திக் காய்ந்த கூந்தலை அள்ளிச் செருகிக் கொண்டாள். தான் பறித்து வந்த கொன்றை மலரை

எடுத்துக் கொண்டையில் செருகிக் கொண்டாள். முன்றானையால் முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

மலர்மங்கை செய்வதையெல்லாம் இமைக்காமல் பார்த்துவந்த மதுவணன், "கூந்தலில் நீ சூடியுள்ள மலரின் பெயரென்ன? மலர் உன்னைப் போலவே அழகாக இருக்கிறது. இதுவரை நான் பார்த்ததில்லை அந்த மலரை" என்றார்.

"இதன் பெயர் கொன்றைமலர். சிவபெருமானுக்கு மிகவும் பிடித்தமான மலராம். இது எனக்கும் மிகவும் பிடித்த பூ. இதைப் பறிப்பதற்காகக் கோயில் நந்தவனத்திற்குக் காலையில் நான் போவேன்" என்று மங்கை தைரியமாகப் பேசினாள்

"கொன்றை மலரை எனக்கும் பிடித்திருக்கிறது. நீ அதைச் சூடியிருக்கும் ஒய்யாரம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. உன்னைக் 'கொன்றை மலர்க்குமரி' என்று அழைக்கலாம் என்றே தோன்றுகிறது" என்று மதுவணன் கூறியபோது மலர்மங்கை நாணத்தால் தலை தாழ்த்தினாள்.

"ஆகா, நன்றாகக் கூப்பிடலாம். நானே மனத்திற்குள் அப்படித்தான் அழைத்துக் கொண்டிருக்கிறேன்" என்ற குரல் கேட்டு மங்கை திரும்பிப் பார்த்தாள்.

மதுவணனும், "யாரது?" என்று கேட்டுத் திரும்பிப் பார்த்தார்.

கூத்தன் வந்து கொண்டிருந்தான்.

"யாரப்பா நீ?" என்று மதுவணன் கேட்டார்.

"நான் மலர்மங்கைக்குப் பாடம் கற்றுத்தருபவன். கூத்தன் என்று பெயர். சிதம்பரம் கோயிலில் பதிகங்களைப் பாடும் பேறு பெற்றவன்..." என்று மிகவும் அடக்கமாகப் பேசினான்.

அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்த மதுவணன், "இப்போது எங்கே வந்தாய்? மலர்மங்கையைத் தேடி வந்தாயா?" என்று கேட்டார். அவருக்குக் கூத்தன்மீது சந்தேகம் ஏற்பட்டது.

"இல்லை, இல்லை. மலர்மங்கையைக் காலையிலேயே நந்தவனத்தில் சந்தித்து விட்டேன். நீங்கள் வந்திருப்பதாகச் சொல்லி மலர்மங்கையை இங்கு அனுப்பியவனே நான்தான்..." என்று கூத்தன் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் ஏற்படாமல் பேசினான்.

"ஓகோ! நந்தவனத்தில்தான் தினமும் நீ மங்கையைச் சந்திப்பது வழக்கமோ?" என்று மதுவணன் சற்றுக் குத்தலாகக் கேட்டார்.

"மங்கையை நான் எங்கு வேண்டுமானாலும் சந்திப்பேன். ஆனால் இசையைக் கற்றுத் தருவது இந்தக் குடிவில்தான். மிக அமைதியான இடம். கானப்பறவைகளின் கலகலவென்ற இசையின் சுருதிக்கு ஏற்ப மங்கை பாடும்போது தேவ கன்னிகைகள் வந்து யாழெடுத்து மீட்டுவது போலவே இருக்கும்..."

கூத்தன் பேசுவதே ஒரு சங்கீதம் போல இருந்தது. அவன் பேச்சில் அடக்கம் இருந்ததென்றாலும் அதில் தனக்கு யாரும் நிகரில்லை என்ற கர்வ உணர்வு மிகுதியாய்ப் புலப்பட்டது.

"ஓகோ! நீ சிதம்பரம் கோயிலில் எவ்வளவு ஆண்டுகளாகத் தொண்டாற்றுகிறாய்? ஜீவனத்திற்கு என்ன செய்கிறாய்?" என்று மதுவணன் கேட்டார்.

"எனக்கு விவரம் தெரிந்த காலம் முதல் என் தந்தை, பாட்டனார், முப்பாட்டனார் எல்லாரும் நடராசப் பெருமானுக்கு இசையால் நித்யக் கைங்கர்யம் செய்து வருபவர்களே! இதைவிட

வேறு திவ்ய ஜீவனம் ஒன்று வேண்டுமோ? இறைவன் படியளக்கிறான்" என்று மிகப் பெருமையுடன் கூத்தன் சொன்னான்.

"ஓகோ! சிதம்பரத்திலேயே பிறந்து வளர்ந்து சிதம்பரம் நடராசர் மீது அளவற்ற பக்தி கொண்டவன் நீ என்று சொல்லு" என்று மதுவணன் அவன் இதயத்திலிருப்பதை அறிவது போல் கூர்ந்து நோக்கினார்.

"ஆமாம். நடராசர் தான் எங்களுக்குக் குலதெய்வம். இந்த நாட்டு அரசருக்கும் நடராசரே குலதெய்வம். கோயில் விமானத்திற்குப் பொன்னால் கூரை வேய ஆசைப் பட்டவர்கள், அவர்கள்."

"ஓ! பொன்னால் கூரையா?" மதுவணன் வியப்புடன் கேட்டார்.

"ஆமாம்; நீங்கள் பார்க்கவில்லையா?...ஆமாம். எப்படிப் பார்த்திருக்க முடியும்? இன்றுதானே நீங்கள் இந்த ஊருக்கு வந்திருக்கிறீர்கள். இன்று உச்சிக் காலப் பூஜையின்போது கோயிலுக்கு வாருங்கள்; மிகவும் அனுபவித்து ஆண்டவனைத் தரிசிக்கலாம். என் பாடலையும் கேட்கலாம்!" என்று கூறிய கூத்தன் மங்கை பக்கம் திரும்பி, "மங்கை! இவரைக் கோயிலுக்கு அழைத்து வா. நீயும் ஒரு பதிகம் பாடு. உனக்குப் பிடித்த 'பொன்னார் மேனியனே' பாடு" என்று கூறியவன் மங்கையின் கொண்டையில் குடியிருந்த கொன்றை மலரைப் பார்த்து, "ஆகா! உனக்குக் கொன்றை மலர் எவ்வளவு அழகாயிருக்கிறது! கொன்றையின் வண்ணத்திற்கு ஏற்பப் போட்டியிடுகிறது உன் மேனி வண்ணம். 'மிளிர் கொன்றை யினிந்தவளே!' என்று மாற்றிப் பாடலாம் போல் தோன்றுகிறது" என்று கூறிச் சிரித்தான். அவள் சிரிக்கவில்லை. மதுவணனும் சிரிக்கவில்லை.

மங்கையின் முகம் நாணத்தால் சிவந்தது. மஞ்சளும், சிவப்பும் கலந்த அந்த முகத்தின் சோபையே தனி அழகாகத்தானிருந்தது.

மங்கை முகம் மாறுவதை, மதுவணன் பார்த்துக் கொண்டிருந்தார். கூத்தன் உற்சாகமாக அவளை வர்ணிப்பதைக் கேட்க அவருக்குக் கோபம் பொங்கியது. என்றாலும் அடக்கிக் கொண்டார். மன்னர் எதிரே மங்கையைப் பாட வைக்கக் கூத்தனால் இயலும் என்பதைப் புரிந்து கொண்டார்.

"தம்பி! பரம்பரை பரம்பரையாக நீ ஆண்டவன் சந்நிதியில் பாடுகிறாயே, சோழ மன்னர்கள் உனக்குத் தரும் ஊதியம் என்ன?" என்று மதுவணன் கேட்டார்.

அவன் மெல்லச் சிரித்தான். "நான்தான் அப்போதே சொல்லி விட்டேனே. இறைவன் படியளக்கிறான் என்று! உங்களுக்கு இந்த நாட்டின் பழக்க வழக்கங்கள் தெரியாதா? ஆமாம்; நான் கேட்கிறேன் என்று தவறாக நினைக்காதீர்கள். நீங்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்களில்லையா?" என்று கேட்டான் ஒரு கேள்வி.

மதுவணன் திடுக்கிட்டார். கூத்தன் மகா சாமர்த்தியசாலி என்பதை நொடியில் புரிந்து கொண்டார். அவன் மூலம் மலர்மங்கை சோழ மன்னரை எளிதில் சந்திக்க இயலும் என்பதையும் புரிந்து கொண்டார். அவனிடம் கடுமையாகப் பேசாமல் இனிய சொற்களால் அவனைக் கவர விரும்பி, "தம்பி! நான் இந்த நாட்டவனில்லைதான். ஆனால் இந்த நாட்டவனாகவே வாழ விரும்புகிறேன். மங்கையின் உறவினன் நான். மங்கை உன்னிடம் பக்திப் பாடல்களைப் பயின்று பிறகு என்ன செய்யப் போகிறாள் என்று தெரியவில்லை. அவளைத் திரும்பவும் ஊருக்கே அழைத்துச் சென்று விடலாம் என்று நினைக்கிறேன்" என்று கூறி அவன் முகத்தை ஒரு கணம் உற்று நோக்கினார்.

கூத்தன் பரபரப்புடன், "ஊருக்கு அழைத்துச் சென்றுவிடப் போகிறீர்களா? ஏன்? இப்பொழுதுதான் அவள் தமிழைத் தெளிவாக உச்சரிக்கக் கற்றுப் பல பதிகங்களைப் பயின்றுள்ளாள். இவ்வளவு நாள்கள் கற்றதெல்லாம் வீணாகி விடும். மலர்மங்கை சிதம்பரத்திலேயே சில நாள்களிருக்கட்டும். சோழ மன்னர் அவளுடைய பாடல்களைக் கேட்டால் மெய்ம்மறந்து விடுவார்..." என்றான்.

"மன்னர் பாராட்டினால் மட்டும் போதுமா?"–மதுவணன் கேட்டார்.

"என்ன அப்படிக் கேட்டு விட்டீர்களே! மன்னர் மனது வைத்தால் அவளுக்கு ஒரு வீடு தருவார், நிலங்களைத் தருவார். ஒரு குறையும் இல்லாமல் வாழலாம். பிறகு நல்லவனைத் திருமணம் செய்து கொண்டு மங்கையும் அவளை மணக்கப் போகிறவனும் சுகமாக வாழலாம்" என்று உற்சாகத்துடன் பேசிக் கொண்டே போனான்.

"அப்படியா? மன்னரை மங்கையால் எளிதில் சந்திக்க முடியுமா?"–மதுவணன் கேட்டார்.

"ஓ! முடியும். அதனால்தான் சொல்கிறேன். இன்றைய உச்சிக் காலப் பூஜையின் போது சந்நிதிக்கு வந்து பாருங்கள். மன்னர் எந்த இடத்தில் வந்து நிற்பார்; மங்கை எந்த இடத்தில் நின்று பாடினால் மன்னரின் கவனம் அவள் பக்கம் திரும்பும் என்பதைக் கண்டறியலாம்" என்றான்.

மலர்மங்கை அவனை நோக்கினாள். மதுவணன் அவளை நோக்கினார்.

"ஓ! நினைக்கும் காரியங்கள் மிக எளிதில் முடிந்துவிடும் போலிருக்கிறதே" என்று எண்ணிய மதுவணன் உற்சாகத்துடன் "நான் இன்று உச்சிக்காலப், பூஜைக்குக் கோயிலுக்கு வந்துவிடுகிறேன்" என்றார்.

கூத்தன் மலர்மங்கையிடம் விடைபெற்றுச் சென்ற பிறகு, மதுவணன் மங்கையைப் பார்த்து "நான் குளித்துவிட்டு வருகிறேன். அதற்குள் உதயனும் வந்துவிடுவான். எல்லாரும் சேர்ந்தே கோயிலுக்குச் செல்வோம்" என்று கூறி நீராடச் சென்றார்.

அவர் அங்கிருந்து அகன்றவுடன் விடைபெற்றுச் செல்வதுபோல் நடித்து, மறைந்திருந்த இடத்தை விட்டுக் கூத்தன் வெளியே வந்து பரபரப்புடன் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டுக் குடிசைக்குள் நுழைந்து, "மலர்மங்கை! நீ மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும், எனக்கு என்னவோ மதுவணனைப் பார்த்தால் மிகவும் சந்தேகமாக இருக்கிறது" என்றான். அவள் தன்னைப் பாராட்டுவாள் என்று எண்ணினான்.

"ஏன் என்ன சந்தேகம்? எனக்கு உங்களைப் பார்த்தால் தான் சந்தேகமாக இருக்கிறது. ஏதோ சொல்லி, சிதம்பரத்திலேயே என்னைத்தடுத்து நிறுத்தப் பார்க்கிறீர்கள். அதை நினைக்கும் போது எனக்குச் சந்தேகம்" என்று சற்றுக் கோபத்துடன் பேசினாள்.

"அதனால் என்ன மங்கை? நீ சிதம்பரத்தி லிருந்தால் சுக செளக்கியத்துடனிருக்கலாம். வீடு, நில புலன்கள் எல்லாம் கிடைக்கும்" என்றான் கூத்தன்.

"எதற்காக வீடு, நிலங்களை ஒரு பெண்ணுக்குக் கொடுக்கிறார்கள்?"

"உன் இனிய குரலுக்காக!"

"இனிமையாகப் பாடுவதற்காக மட்டுமே இவ்வளவு பரிசுகளா?"

மங்கை இப்படி அழுத்தமாகக் கேட்டவுடன் கூத்தன் சற்றுத் திகைத்தான்.

மங்கையின் குரலில் சீற்றம் மிகுந்தது. "இல்லை, இல்லை! எல்லாரும் ஏதோ சூது செய்கிறீர்கள். திட்டமிடுகிறீர்கள். அநாதையான ஒரு பெண்ணின் கலைத் திறமையைக் கயவாபத்திற்குப் பயன் படுத்திக் கொள்ளப் பார்க்கிறீர்கள். சிதம்பரத்திலேயே நிற்க வைக்கப் பார்க்கிறீர்கள். ஆண்களையே நம்பக் கூடாது" என்று கூவினாள். மிகவும் உணர்ச்சிவயப் பட்டிருந்தாள். விழிகளில் நீர் கோத்திருப்பது தெரிந்தது. முகம் சிவந்து விட்டது. நாணச்சிவப்பு மறைந்தது. கூத்தன் திடுக்கிட்டான். இதுவரை மலர்மங்கை இவ்வாறு பேசியதில்லை.

"உனக்கு என்ன வந்துவிட்டது மங்கை? ஏன் இப்படிக் கோபப்படுகிறாய்? இன்று காலையில் மிகச் சௌந்தர்யமாக இருந்தாய். உன் எழில் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. உன்னைக் காணாமல் ஒரு நொடிகூட என்னால் இருக்க முடியவில்லை. உனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால் என்னால் தாங்க முடியாது. அதனால்தான் மீண்டும் இங்கு வந்தேன். அதனால்தான் சிதம்பரத்திலேயே தங்கும் யோசனையையும் சொன்னேன்" என்று கூறி அவளை நெருங்கி அவள் விழிகளில் ததும்பிய நீரைத் துடைக்கக் கையை நீட்டினான்.

மங்கை அவன் கரத்தைப் பளீரென ஒதுக்கினாள். "உடனே இந்த இடத்தை விட்டுப் போய் விடுங்கள்" என்று சீறினாள். அவள் சீற்றம் நாகத்தின் சீறலை நினைவு படுத்தியது.

4. "எப்படியாவது வெல்ல வேண்டும்"

உதயன் அப்போது மெல்ல வந்து கொண்டிருந்தான். கூத்தன் குனிந்த தலையுடன் அங்கிருந்து மெல்ல நடந்து கொண்டிருந்தான்.

மலர்மங்கை கொதித்து நிற்பதையும், கூத்தன் தலை குனிந்து செல்வதையும் கண்ட உதயனுக்கு ஒன்றும் புரியவில்லை. எப்போதும் புன்முறுவல் தவழ நிற்கும் மங்கையின் முகம் அப்பொழுது மாறி யிருப்பதன் காரணம் அவனுக்கு விளங்கவில்லை.

"என்ன நேர்ந்தது மங்கை?"–உதயன் மெல்லக் கேட்டான்.

இதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திர மெல்லாம் பொங்கி வரும் அழுகையின் மூலம் வெளிப்பட குமுறிக் குமுறி அழுதாள் மங்கை. அவளை நெருங்கி அணைத்து அவள் கண்ணீரைத் துடைக்க அவன் கரங்கள் பரபரத்தன. தன்னிடம் அவள் கொண்டிருக்கும் மதிப்பு மரியாதை எல்லாம் ஒரே கணத்தில் சிதறிவிடப் போகிறது என்ற பயத்தினால் தன்னை அடக்கிக் கொண்டு நின்ற இடத்திலேயே அவள் விம்மல் ஓயும் வரை நின்றான் உதயன்.

"என்ன நடந்தது, சொல்லு மங்கை! கூத்தன் உன்னிடம் தவறாக ஏதும் பேசிவிட்டானா?" என்று உதயன் கேட்டான்.

மங்கை விழிநீரைத் துடைத்துக் கொண்டு நடந்தவற்றை மெல்லக் கூறினாள். உதயன் அதைக் கேட்டு "ஹோ ஹோ" என்று சிரித்து, "இவ்வளவுதானா? நீ எதற்காகச் சிதம்பரம் வந்தாயோ, நீ எதற்காகப் பாடல்களைக் கற்றாயோ அதற்கான பலன் விரைவில் கிடைத்துவிடும் வேளை நெருங்கிவிட்டது" என்றான் உதயன்.

"என்ன சொல்கிறீர்கள்? நிலம், வீடு, பணம் எல்லாம் கிடைக்கும் என்று கூத்தன் சொன்னாரே, அதையே நீங்களும் சொல்கிறீர்களா?" என்று மங்கை சிணுங்கியவாறு கேட்டாள்.

"உனக்கு நிலம், வீடு, பொன், பொருள் எல்லாம் சோழ மன்னர் கொடுப்பதைவிட அதிகமாக என்னால் கொடுத்துவிட முடியும். அதற்கு மேலே சோழ மன்னரால் தரமுடியாத மகத்தான பாராட்டுதல் ஒன்றை, என்றென்றும் அழிக்க முடியாத பெயரை இராட்டிரகூட நாட்டில் நீ பெறப்போகிறாய். அதற்கான சந்தர்ப்பம் விரைவில் வரப்போகிறது" என்று கம்பீரமாகவும் உற்சாகமாகவும் உதயன் கூறினான்.

மங்கை மேலும் பேசும் முன்பு, "உன்னை நடராஜர் சந்நிதிக்கு அழைத்துச் சென்று பாடச் செய்யும் நல்ல வாய்ப்பையும் கூத்தன் ஏற்படுத்திக் கொடுக்கிறான் என்றால் என் திட்டங்கள் நடந்து விட்டன போல்தான். தஞ்சையிலிருந்து கண்டராதித்தன் சிம்பரத்திற்கு வருகிறார் என்ற செய்தி இப்போதுதான் கிடைத்தது. அதை அறிந்து மதுவணரிடம் கூற ஓடோடி வந்திருக்கிறேன். கண்டராதித்தன் பார்வையில் படும் விதத்தில் நீ நடந்து கொள்ள வேண்டும். அதுவரை கூத்தனை அலட்சியப்படுத்தாதே" என்றான் உதயன். மங்கை தலையைக் குனிந்து கொண்டாள்.

"கூடலி நகரிலிந்து மதுவணன் வந்திருக்கும் இந்தச் சமயத்தில் நீ மகிழ்ச்சியுடன் எப்பொழுதும் இருக்க வேண்டும்.

எங்கள் திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறப் போகின்றன என்ற நம்பிக்கையை நீ அவருக்கு அளிக்க வேண்டும்" என்றான் உதயன்.

"எனக்குச் சந்தோஷத்துக்குக் குறைவே இல்லை. எப்போதாவது சோர்வு ஏற்பட்டுவிட்டால் நான் இதுவரை கற்ற பாடல்களில் ஒன்றை உரக்கப் பாடுவேன். நொடியில் மனவேதனை மறைந்து விடும்" என்றாள் மங்கை.

"உனக்கு என்ன சோர்வு, என்ன மனவேதனை?" என்று உதயன் அவளை ஆராய்வது போல் கேட்டான்.

மங்கை மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஒருவித நாணமிருந்தது.

"பெண்ணாகப் பிறந்து விட்டால் சோர்வு ஏற்படுவது இயற்கை. மன வேதனை ஏற்படுவதும் இயற்கை" என்றாள் மங்கை.

"நூறு வயது நிறைந்த மூதாட்டி போல் பேசுகிறாயே? உனக்கு இங்கு ஏதாவது கடுமையான வேலை இருக்கிறதா? வேளைக்கு வயிற்றுக்கு உணவு கிடைக்கவில்லையா?"–உதயன் கேட்டவுடன், மங்கை மனம் திறந்து பேசத் துணிந்தாள்.

"வேலையே இல்லாதிருப்பதுதான் வேதனையைத் தருகிறது. எவ்வளவு நேரம் மலைய மாருதத்துடனும் காந்தாரத்துடனும் பேசிக் கொண்டிருப்பது? பாவம் அந்தப் பாட்டி சோறாக்கிப் போடுகிறாள். இரண்டு வேளையும் வயிறார உண்கிறேன். ஒரு பெண்ணுக்கு அது மட்டும் போதுமா?" மங்கை கேட்டுவிட்டுச் சற்று மௌனமானாள்.

உதயன் ஏதோ கேட்பதற்கு முன்பு மங்கை முந்திக் கொண்டாள்: "ஐயா! திரும்பவும் நான் துங்கபத்திரை ஆற்றங்கரைக்கே போய்விடுகிறேன். அங்கே நீங்களாகப் பார்த்து

யாராவது ஓர் ஏழையைக் கல்யாணம் செய்து வையுங்கள். ஒருவேளை ஆகாரம் கிடைத்தால்கூடப் போதும். இங்கே எனக்கு நிம்மதி குறைந்து விடும் போலிருக்கிறது. பயமாக இருக்கிறது" என்றாள்.

"என்ன பயம்? இன்னும் உன் நடவடிக்கையைப் பற்றி ஓர் ஈ, எறும்பு கூடத் தெரிந்து கொள்ளவில்லை அதற்குள் என்ன பயம்?"

"என்னப்பற்றி நானே தெரிந்து கொள்ள வில்லை. பிறர் நினைப்பதைப் பற்றி நான் பயப்படவில்லை. ஆனால் என்னைப் பற்றிப் பிறர் அறிந்து கொண்ட ஒன்றைக் கண்டுதான் எனக்குப் பயம்."

வியப்பு மிகுதியால் புருவத்தை உயர்த்தினான் உதயன்.

"அது என்ன?"

"அதுதான் என் அழகு. அழகுடன் எனக்கு இயற்கையாக உள்ள இசைத்திறமை. இசையுடன் நான் கற்ற பாடல்கள்."

மங்கை இவ்வாறு கூறியது கேட்டு உதயன் பெரிதாக நகைத்தான். "இந்த மூன்றும் உன்னிடம் இருப்பதால் தானே எங்களுக்கு நம்பிக்கை மிக அதிகமா யிருக்கிறது? ராஜபார்வையே உன்மீது விழப் போகிறது. அதனால் உனக்கும் பயன். நம் நாட்டுக்கும் நல்ல பலன்..."

"அதை நினைக்கும்போதுதான் எனக்குப் பயமாக இருக்கிறது. என் இசைப் புலமையையும் என் அழகையும் இறைவனுக்கு அர்ப்பணிக்க நினைக்கிறேன். ஆனால் அதற்குள் பல கழுகுக் கண்கள் தம் பசிக்கு என்னை இரையாக்கிவிடும் போல் தோன்றுகிறது"–மங்கை இப்படிக் கூறும்போது அவள் கண்களில்

ஒருவித அச்சம் கலந்திருந்தது. தான் சொல்வது சரியா, தவறா என்று உள்ளூர எண்ணிக் கொண்டிருப்பது போல் வார்த்தைகள் தடுமாறின.

"என்ன சொல்கிறாய் மங்கை?! உன்னைக் காத்துக் கொள்ள உனக்குத் தெரியாதா? ஆனால் இந்த ஊருக்கு நீ வந்திருக்கும் விஷயம் மிக முக்கியமானது என்பதை முன்பே உன்னிடம் சொல்லி விட்டேன். அதைப் பற்றித் தான் நீ இனி நினைக்க வேண்டும். அந்த விஷயம் நிறைவேறுவதற்கு நீ எத்தகைய தியாகம் செய்யவும் ஆயத்தமாக இருக்க வேண்டும். உடல், பொருள், ஆவி என்பார்களே அம் மூன்றையும் தியாகம் செய்ய நீ சித்தமாக இருக்க வேண்டும்" என்று குரலில் கண்டிப்பு நிறைந்திருக்கக் கூறினான் உதயன்.

"தியாகம் செய்ய வேண்டும். உடல் பொருள் ஆவியை அளிக்கவேண்டும். பிறந்த நாட்டிற்காகத் தியாகம் செய்ய வேண்டும் என்று திருப்பிச் திருப்பிச் சொல்கிறீர்களே, அதை விவரித்துத்தான் சொல்லுங்களேன்" என்று மங்கை சற்றுச் சலிப்புடன் கேட்டாள். தான் ஆற்ற வேண்டிய கடமை என்ன என்பது அவளுக்கு ஓரளவு புரிந்திருந்தது.

உதயன் சற்று நேரம் மௌனமாக இருந்தான். பிறகு, "மங்கை! நீ ஓர் அநாதை என்பதால் உன்னைப் பெரிய ஆபத்தில் சிக்கவிட நாங்கள் விரும்பவில்லை. ஆனால், எங்கள் பிறந்த நாடான இராட்டிரகூட நாட்டின் உயர்வுக்காகச் சர்வ பரித்தியாகம் செய்யச் சபதம் எடுத்துள்ளோம். அவ்வாறு சபதம் எடுத்துக் கொண்ட பல நூறு நபர்களில் மதுவணரும் ஒருவர். மதுவணரின் கட்டளைகளை ஏற்று நடப்பவர்களில் நானும் ஒருவன். பரம ரகசியமான இந்தத் திட்டத்தை ஒருவருக்கும் சொல்லக்கூடாதென்பது நாங்கள் எடுத்துக் கொண்ட உறுதிப் பிரமாணங்களுள் ஒன்று. எங்கள்

திட்டத்தை நிறைவேற்றுபவர்களில் நீயும் ஒருத்தி என்பதால் மிகமிக முக்கியமான ரகசியங்களை உன்னிடம் தெரிவிக்கிறேன். எங்கள் திட்டம் சோழ பரம்பரையே இல்லாமல் செய்து விடுவது. நம் மாமன்னர் கிருஷ்ண தேவரின் ஆட்சிப் பரப்பில் சோழ நாட்டுப் பகுதிகளைச் சேர்த்துவிட வேண்டும். பிறகு எந்தக் காலத்திலும் சோழர்களால் நமக்கு ஆபத்து ஏற்படாமல் செய்து விட வேண்டும் என்பதே எங்கள் இலட்சியம்..." என்று கூறிச் சற்று நிறுத்தினான்.

இவ்வளவு முக்கியமான ரகசியத் திட்டத்தை ஒரு பெண்ணிடம் சொல்கிறோமே என்று உதயன் ஒரு கணம் நினைத்தான். ஒரு வேளை மங்கை மனம் மாறித் திட்டங்களை வெளியே சொல்லி விட்டால்....எனக் கவலைப் பட்டான். ஆனால் மங்கை அவ்வாறு சொல்ல மாட்டாள் என்பதை அவன் உள்ளம் பூர்ணமாக நம்பியது. அப்படியே மனத்திலுள்ளதை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் அவளுக்கு ஏற்பட்டாலும் கூத்தனிடம்தான் சொல்லி விடுவாள். கூத்தனிடம் அவள் சொல்லாமலிருப்பதற்கான வழியை இப்போதே தேடி விட்டால் பிறகு எந்தக் கவலையுமில்லை என்று தனக்குத்தானே மனத்தைத் திடப் படுத்திக்கொண்ட உதயன் மேலும் பேச முற்படும்போது மங்கை குறுக்கிட்டு, "உங்கள் இலட்சியம்தான் என் இலட்சியம் என்பதை நான் முதலிலேயே சொல்லி விடுகிறேன். பெரியவர் மதுவணரும் அதையே வற்புறுத்தினார். சோழ மன்னர் கண்டாதித்தரிடம் எவ்வாறு பழகவேண்டும் என்பதைக் கற்றுத் தருவதாகக் கூறினார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை கருணை கூர்ந்து நமது இலட்சியப் பூர்த்திக்கு நான் செய்ய வேண்டியது என்ன என்பதை இப்போதே விளக்கிக் கூற வேண்டுகிறேன்" என்றாள்.

உதயன் முகத்தில் ஓர் உற்சாக ஒளி தோன்றியது. "மங்கை! நம் திட்டம் என்று நீ சொன்னதைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

மகத்தான செயலில் ஈடுபட உன்னைத் தேர்ந்தெடுத்தது வீண் போகவில்லை. நிலைமையை நீ தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறாய்..." என்று உற்சாகத்துடன் கூறினான்.

மலர்மங்கை குறுக்கிட்டு, "இல்லை...இல்லை... நான் புரிந்து கொள்ளவே இல்லை. எனக்கு இடப்பட்டுள்ள பணி என்ன? நான் என்ன செய்ய வேண்டும் என்பதை எனக்கு இன்றளவும் நீங்கள் சொல்லவில்லை. சிதம்பரத்திற்கு அழைத்து வந்தீர்கள். தமிழைக் கற்றுக் கொள்ளச் செய்தீர்கள். இசை பயிலச் சொன்னீர்கள். அவற்றைப் பற்றி ஏன் எதற்கு என்று நான் கேட்கவில்லை. ஒரு பெண் கற்க வேண்டிய கலைகளுள் சங்கீதம் பயிலுதல், வேறு மொழி கற்றல் இவையும் சேரும் என்பதால் நான் உற்சாகமாகக் கற்றேன்..." என்றாள்.

"மிகச் சீக்கிரமே கற்று விட்டாய். இனி அடுத்துச் செய்ய வேண்டியதையும் விரைவில் செய்ய வேண்டும்... மங்கை! உனக்குச் சில அடிப்படை உண்மைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவ்வாறு தெரிவித்தால் தான் நீ செய்ய வேண்டிய கடமையின் அவசியமும் அவசரமும் உனக்குத் தெளிவாகப் புரியும். நான் வற்புறுத்துகிறேன் என்பதைவிட, நீயே அவசியத்தை உணர்ந்து செயலாற்றினால் நமக்கு வெற்றி நிச்சயம்" என்று சற்று உணர்ச்சி வசப்பட்டே பேசினான்.

"இப்படி உட்கார்ந்து பேசுவோம். காலையிலிருந்து நின்று கொண்டிருக்கிறோம்." என்றான் உதயன். கடுமை நிறைந்தவன். இரக்கமற்ற இதயம் உடையவன் என்று பலர் அவனை வர்ணித்ததை மங்கை அறிவாள். ஆனால் இப்போது அவன் பேசுவதையும், உணர்ச்சி வயப்படுவதையும் பார்த்தால் உதயனைப் போல் நல்லவர்கள் இரக்க உள்ளம் படைத்தவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்களோ என்று தோன்றியது.

"மங்கை! சோழர்களுக்கும், நம் நாட்டிற்கும் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மணத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. சொல்லப் போனால் இராட்டிரகூட ரத்தம்தான் சோழ மன்னர்களின் உடலில் ஓடுகிறது. நியாயமாக நம் அரசர்கள்தாம் தஞ்சையில் மகுடாபிஷேகம் செய்து அரசாண்டிருக்க வேண்டும். பராந்தகன் என்ற சோழமன்னன் பலவிதத் தந்திரங்களால் தஞ்சை அரசனானான். அதுமுதல் நமக்கும் பராந்தகனுக்கும் விரோதம் அதிகமாகியது. வாணர்குல அரசனிடமிருந்து அநீதியாக நாட்டைப் பறித்துக் கொண்டதால், வாணர்குல அரசர் நாடிழந்து முடி இழந்து நமது அரசரிடம் அடைக்கலம் புகுந்துவிட்டார். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு நமது கடமை மேலும் முக்கியமாகிவிட்டது. எப்படியாவது வாணர்குல அரசருக்கு அவரது நாட்டை மீட்டுத்தந்துவிட வேண்டும் என்று உறுதி பூண்டுவிட்டார் நமது மாமன்னர். பராந்தக மன்னன் தஞ்சை பொக்கிஷத்தில் ஏராளமாகப் பொன்னும், பொருளும் வைத்திருக்கிறார். நமது படையில் ஏராளமான வீரர்களைச் சேர்த்து வைத்திருக்கிறார். அழைத்தவுடன் படைகளும் வருவதற்குச் சிற்றரசர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். அவரது புதல்வர்களும் மாவீரர்கள்... காலம் அப்படியே செல்வதில்லை. தக்க தருணத்தை எதிர் பார்த்திருந்தோம். நமக்குச் சாதகமாகக் காற்று வீசத் தொடங்கியது. பராந்தகனின் மூத்தமகன், அடுத்துப் பட்டம் ஏறவேண்டிய கட்டிளங்காளை இராசாதித்தன் போரில் இறந்து விட்டான். அதன்பிறகு பராந்தகன் மனமுடைந்து நோய்வாய்ப்பட்டான். படுத்த படுக்கையாகி இறந்தே போனான். பராந்தகன் இருந்த வரை நம்மால் அவனை எதிர்த்து நிற்க முடியவில்லை. ஒற்றர்களால் பாலாற்றைக்கூடத் தாண்டிச் சோழ நாட்டில் உட்புக முடியவில்லை. "ஒரு முறை நம் அரசர் கிருஷ்ணன் சோழ நாட்டிற்குள் நுழைந்துவிட்டார். பராந்தகனுடைய

புதல்வர்களும், மூத்தமகன் இராசாதித்தனும் நம் மன்னரைத் தோற்றோடச் செய்துவிட்டார். ஆனால் மூத்த மகன் இராசாதித்தன் போரில் இறந்துவிட்டான். தலைப்பிள்ளையை இழந்த புத்திர சோகத்தால் பராந்தகன் நோய்வாய்ப்பட்டு இறந்த பிறகு கண்டராதித்தன் பட்டத்துக்கு வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கண்டராதித்தன் தஞ்சையில் மகுடம் ஏற்றான். கண்டராதித்தன் பெரும் வீரன்தான். ஆனால் அவனுக்கு ஆட்சி நடத்துவதில் விருப்பமில்லை. சிறு வயது முதலே சிவபக்தியில் அவன் சிந்தனை சென்றிருந்தபடியால், ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகும் அவனால் தன் சிவ பக்தியை மாற்றிக் கொள்ள முடியவில்லை. தஞ்சை நகரிலேயே அடைந்து கிடக்காமல், சிவத்தலங்கள் தோறும் சென்று இறைவனைத் துதிக்க விரும்பினான். சோழர்களுக்குச் சிதம்பரத்திலுள்ள நடராசர்தான் குலதெய்வம். கண்டராதித்தனுக்குச் சிதம்பரத்தைத் தரிசிப்பதில் பெரும் ஆவல். சிதம்பரத்திற்கு வந்தால் இங்கே மாதக் கணக்கில் தங்கிச் சிவபக்தியில் ஆழ்ந்துவிடுவான்" என்று கூறிச் சற்று நிறுத்திய போது மங்கை குறுக்கிட்டுக் கேட்டாள். குரலில் ஆவல் மிகுந்திருந்தது.

"சிவபக்தி மிகுந்த ஓர் அரசர் சிதம்பரத்துக்கு வருவது சரிதான். இதில் நான் செய்ய வேண்டியது என்னவென்று நீங்கள் சொல்லவில்லையே...?"

"நீ செய்ய வேண்டிய பணிகள் தாம் இனி இருக்கின்றன. சிவபெருமான் மீது பாடப் பெற்ற பக்திப் பாடல்களைக் கற்றுக் கொள்ளுமாறு செய்தது எதற்காக என்று இப்போது புரிந்து கொண்டாயா? இனிய குரலில் நீ பாடுவதைக் கண்டராதித்தன் கேட்டு மகிழ்ந்து உன் பாடலை நாள்தோறும் கேட்டுக் கொண்டே இருக்க உன்னை அரண்மனையில் பாடகியாக நியமிப்பான். அது மாபெரும் வாய்ப்பு. அதை நீ பயன் படுத்திக் கொண்டு நாங்கள்

சொல்லப் போகும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். கண்டராதித்தனை எப்படியாவது சோழ அரியணையிலிருந்து இறக்கிவிட வேண்டும்" என்றான் உதயன்.

"சோழ அரியணையிலிருந்து அவரை இறக்க என்னால் முடியுமா?"–மங்கை கேட்டாள்.

"ஓ! நிச்சயம் முடியும். அதற்கான வழி வகைகளைச் சொல்லித் தராமல் இருப்பேனா?"–உதயன் உற்சாகமாகப் பேசினான்.

"ஐயோ! சிவபெருமான் மீது மிகுந்த பக்தி கொண்டவரை ஒழிக்கச் சொல்கிறீர்களே?"–மங்கை கவலை தெரிவித்தாள்.

"மங்கை!" என அழைத்தான் உதயன். குரலில் கடுமை இருந்தது. "பற்று, பாசம், பக்தி எல்லாவற்றையும் நீ மறந்து விடவேண்டும். போர்க்களத்தில் ஒப்பாரி எடுபடாது. பந்த பாசம் கூடாது. சிவபக்தியை உன் உள்ளத்தினுள் வைத்துக் கொள். நீ இனி இராட்டிரகூட அரசனின் ஒற்றர்படையைச் சேர்ந்தவள். நாங்கள் சொல்வதைச் செய்ய வேண்டும். உன் திறமை, புத்திசாலித்தனம் ஆகியவற்றையும் சேர்த்துத் திட்டத்தில் வெற்றியைப் பெற வேண்டும். கண்டராதித்தனை உன் வயப்படுத்த வேண்டும். நீ கண்டராதித்தன் அழகில் மயங்கி நம் நாட்டிற்குத் துரோகி ஆகி விடலாம் எனக் கனவில் கூட நினைக்காதே. உன்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையும், ஒவ்வொரு கணமும் எங்களுக்குத் தெரிந்து கொண்டே இருக்கும். கவனமாக–நம் பிறந்த நாட்டின் நன்மைக்காக நீ செயலாற்ற வேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறியது கேட்டு மங்கை நடுங்கினாள்.

"என்ன? மறுமொழி கூறாமல் மௌனமாக இருக்கிறாய்? எப்படியாவது வெல்ல வேண்டும்" என்று எச்சரித்தான் உதயன். அரை மனத்துடன் மங்கை தலையை அசைத்தாள்.

5. கண்டராதித்தரின் கோபம்

தஞ்சை மாநகரைக் கண்டராதித்தன் நெருங்கும்போது மலைவாயில் கதிரவனின் மாலைக்கதிர்கள் தஞ்சைக் கோட்டையைத் தழுவிக் கொண்டிருந்தன. வட்டத் திகிரிபோல் வேகமாகச் சுழன்று இறங்கும் அந்திவானச் செம்பொற் பரிதியின் வடிவழகைத் திரும்பி நின்று ரசித்துக் கொண்டே மாளிகைக்குள் கண்டராதித்தனின் அன்புக்கு மிகவும் பாத்திரமான பட்டத்து அரசி செம்பியன்மா தேவியார் நுழைந்து கொண்டிருந்தாள்.

முரசு அதிர்ந்தது. பலவித வாத்ய முழக்கங்களும் கேட்டன. மாளிகைக்குள் நுழைந்த அவளுக்குப் பெண்கள் ஆலம் சுற்றி வரவேற்றனர்.

பத்து நாட்களாக அவர்கள் தஞ்சையிலில்லை. பல சிவத்தலங்களைத் தரிசித்து அன்றுதான் திரும்புகிறார்கள்.

செம்பியன் மாதேவியாரின் உள்ளத்தில் சிவத்தல நினைவுகளே நிரம்பியிருந்தன. மாளிகைக்குள் மகிழ்ச்சியுடன் நுழைந்தாள். மாளிகை உள் முற்றத்தில் கட்டப்பட்டு இருந்த அழகிய கன்றைக் குனிந்து பார்த்து அதன் கழுத்தைத் தடவிக் கொடுத்து "நலமாயிருக்கிறாயா நந்தினி?" என்று கூறி முத்தமிட்டாள்.

படபடவென்று சிறகினை அடித்துக்கொண்டு செம்மூக்கும் பச்சை வண்ணமும் கொண்ட கிளி செம்பியன் தேவியார் தோள்மீது வந்து அமர்ந்தது.

"அடடே, உன்னை மறந்து விட்டேனா? பாலும் பழமும் சாப்பிட்டு விட்டாயா ககா?" என்று கேட்டு அதைத் தூக்கித் தன் இதழ்களுடன் இணைத்துக் கொண்டாள்.

மழலை மொழியில் அது ஏதோ பேசிற்று. "பார்த்தீர்களா, பார்த்தீர்களா! தேவி, செளக்கியமா? என்று கேட்கிறது" என்று தன் கணவர் பக்கம் திரும்பிக் கூறினாள்.

கண்டராதித்தன் புன்முறுவலுடன், "பத்து நாள்களும் நந்தினியையும் ககரையும் பிரிந்து உன்னால் இருக்க முடியவில்லையே. திருவஞ்சைக் களத்துக்குச் சென்றால் திரும்பப் பல மாதங்களாகுமே, அப்போது என்ன செய்வாய்?" என்று கேட்டார்.

மேற்குத் திசையில் கடற்கரையோரத்தில் மிகப்பெரிய சிவன் கோயில் இருப்பதாக அவர் கேள்விப் பட்டிருக்கிறார். சுந்தரர் அந்தக் கோயிலுக்குச் சேரமன்னர் சேரமான் பெருமாள் அழைப்பிற்கிணங்கச் சென்று வந்ததைப் பற்றி அறிந்திருக்கிறார்.

தன் பாட்டனார் ஆதித்தசோழர் கொங்கு நாட்டிற்குச் சென்று அங்குள்ள திருத்தலங்களைத் தரிசித்து மகிழ்ந்ததைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறார். அந்தத் திருத்தலங்களை யெல்லாம் சென்று கண்டு கோயிலிலுள்ள சிவபெருமானைத் தரிசித்து வணங்கவேண்டுமென்ற ஆவல் அவருள்ளத்தே நெடுநாட்களாக இருந்தது.

செம்பியன் மாதேவி தன் கணவரின் முகத்தை ஏறெடுத்துப் பார்த்து மெல்லப் புன்முறுவல் பூத்தாள்.

"தங்களுடன் நான் வருகிறேன் என்றால் ககரும், நந்தினியும் உடன் வருவார்கள் என்று தான் அர்த்தம். இந்த முறை அவர்களை

அழைத்துச் செல்லாததால் கொடும்பாளூரில் இருந்த பத்து நாள்களும் எனக்கும் பத்து யுகங்களாய்க் கழிந்தன. இனியும் அவர்களைப் பிரிந்து நான் எங்கும் வரமாட்டேன்" என்றாள் செம்பியன் செல்வி.

"ஒரு நாளிலோ இரு நாட்களிலோ திரும்புவதென்றால் நீயும் உடன் வருவது நல்லதுதான். ஆனால் மேற்கே வெகு தூரம் நான் செல்லும் போது நீயும் உடன் வருவது உன் உடல்நிலைக்கு ஒவ்வாது என நினைக்கிறேன்" என்று மன்னர் கண்டராதித்தன் கூறினார்.

"நான் நல்ல ஆரோக்யத்துடன்தான் இருக்கிறேன். கோவில்களைக் கண்டு தீர்த்தங்களில் நீராடினால் எந்தவித நோயும் அணுகாது என்பதை நான் அறிவேன்.

"அது இருக்கட்டும், தாங்கள் கொடுத்த வாக்கை மறந்து விட்டீர்களா?" என்று செம்பியன் தேவியார் கண்டராதித்தன் முகத்தை உற்று நோக்கியவாறு கேட்டாள்.

திருமணமான புதிதில் செம்பியன் தேவியாரும் கண்டராதித்தனும் தஞ்சையின் அருகேயுள்ள சிவத்தலங்களுக்குச் சென்று வந்தனர். கண்டராதித்தச் சோழருக்கு உள்ள சிவபக்தியில் செம்பியன் தேவியார் எந்தவிதத்திலும் குறைந்து விடவில்லை. தேவியாரின் சிவபக்தியைக் கண்டு கண்டராதித்தன் மிக உற்சாகம் கொண்டார்.

"தேவி, மழவரையர் மகளான உன்னை நான் மணக்கும்போது, திருமணமான பிறகு சிவபக்தியை யெல்லாம் விட்டு விட்டு உன் விழிகளுக்கு அடிமையாகிவிடுவேன் என்று தான் எல்லோரும் சொன்னார்கள். சிவபெருமான் மீது பக்தியா, மழவரையர் மகள் மீது காதலா, எதைவிடாமல் கடைப் பிடிப்பது என்று மனத்தில் சிறு

போராட்டம் கூட எற்பட்டது. அமரராகிவிட்ட எனது சகோதரர் இராசாதித்தன் எப்போதும் என்னைப் பார்த்துச் சொல்லிக் கொண்டே இருப்பார். நமது குடும்பத்தில் ஒரு சாமியார் பிறந்துவிட்டார் என்று. அவர் நினைத்தது முற்றிலும் சரி தான் என்றே நான் எண்ணினேன். கற்றைச் சடையும், காவி உடையும் அணிந்து உடை வாளுக்கு மாறாகக் கமண்டலமும், முத்துமலைக்கு மாறாக ருத்திராட்ச மாலையும் திருமேனியில் சந்தனப் பரிமளப் பூச்சுக்கு மாறாக திருநீற்றுப் பூச்சும் அணிந்து எப்போதும் அம்பலவாணர் நினைவாகவே காலங்கழித்து விடலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் சிவன் சித்தம் வேறாக இருந்தது. என் அருமைச் சகோதரர் இராசாதித்தன் தக்கோலம் போர்க்களத்திலே அமரத்துவமடைந்தவுடன் என் கனவுகள் தவிடுபொடியாயின" என்று கூறிக் கண்டாரதித்தன் சற்று நிறுத்தினார்.

"அதெப்படி தங்கள் கனவுகள் தவிடு பொடியாகிவிடும்? தங்கள் கனவுகள் சாதாரணக் கனவுகளல்லவே?" என்று செம்பியன் மாதேவியார் கேட்டாள்.

கண்டராதித்தன் பரபரப்புடன், "ஆமாம், என் மனோபீஷ்டத்திற்குத் தடை ஏற்படத்தான் செய்தது. அடுத்து நான் தான் சோழநாட்டு இளவரசன் என்று இளவரச மகுடம் என் சிரசில் கட்டியாயிற்று. உன்னையும் மணம் செய்துவைத்து விட்டார்கள்" என்றார்.

இந்தச் சொற்களை அவள் பலமுறை கேட்டுவிட்டாள். அடிக்கடி சொல்லிவந்த தன்கணவரின் வழக்கமான பேச்சிற்கு நிரந்தர முட்டுக்கட்டை போட விரும்பிய தேவியார் "என்னை மணம் புரிந்ததால் தங்களுடைய தூய சிந்தனைகளுக்கும் எண்ணங்களுக்கும் நான் இடையூறாகி விட்டேனா?" என்று கேட்டாள்.

கண்டராதித்தன் முகத்தில் தனிவித மலர்ச்சி உண்டாகியது.

"அப்படித்தான் முதலில் நினைத்தேன். ஆனால் முதல் நாள் சயன அறையில் உன் திருமுகத்தை மிக நெருக்கமாகக் கண்ட பிறகு என் ஐயம் மெல்லக் கரைந்தது. உன் நெற்றியில் அழகிய திருநீறு ஒளி வீசக் கண்டேன். ஒவ்வொரு கணமும், "அம்மையே அப்பா" என்று நீ மெல்ல முணு முணுப்பதைக் கேட்டேன். நீ கொண்டு வந்த சீர்வரிசைகளில் அழகிய சிவலிங்கம் இருப்பதைக் கண்டேன். என் மனம் சற்று நிம்மதி அடைந்தது" என்று கண்டராதித்தன் மெல்லக் கூறினார்.

"அவ்வளவு தானா? செம்பியன்தேவி விழிகளை மெல்லச் சுழல விட்டாள்.

"அவ்வளவுதான் என்று நான் சொல்லி விடுவேனா? நான் உன்னை அணுஅணுவாகச் சோதித்தேன். பிறகுதான் என் எண்ணமே உன் எண்ணமும், என் போக்கே உன் போக்கு என்பதைப் புரிந்து கொண்டேன்" என்று கண்டிராதித்தன் மெல்லப் புன்னகை பூத்தவாறு கூறினார்.

"ஒரு தடவை திருவையாறு சென்றபோது நாம் ஒரு முடிவுக்கு வந்தோமே, நினைவிருக்கிறதா?"–செம்பியன் செல்வி மிக முக்கியமான சம்பவத்தை நினைவுபடுத்தினாள்.

கண்டராதித்தன் சற்று யோசித்தார். "ஆமாம் ஆமாம்! மறக்கவில்லை. நீ அழகிய பாடலைப் பாடினாய் "காதல் மடப்பிடியோடு களிறு வருவனக் கண்டேன். கண்டேன் அவனிரு பாதம், கண்டறியாதன கண்டேன்" என்று ஐயாறு அப்பனைக் குறித்து நீ மெய்மறந்து பாடினாய் அன்று இரவு... ஆ... அதை என்னால் என்றுமே மறக்க முடியாது. உன்னை நான்

ஆராதழுவினேன். நான் சொன்னேன்..." என்று கண்டரன் கூற முற்பட்ட போது செம்பியன் மாதேவியார் அவரது திருவாயைத் தமது மெல்லியக் கரத்தால் பொத்தி, "போதும் போதும்! மெல்லப் பேசுங்கள். அந்த நினைவு இருந்தால் போதும் எந்த திருத்தலத்துக்குச் சென்றாலும் எந்த இடத்திற்குச் சென்றாலும் உன்னைப் பிரியாது உன் அழைத்துச் செல்வேன் என்று உறுதியாய்ச் சொன்னீர்களே, அதை மட்டும் நினைத்துப் பார்த்தால் போதும்" என்றாள் செம்பியன் மாதேவி.

கண்டரன் அந்த நிகழ்ச்சியை நினைவு கொண்டவன் போல் தலையை அசைத்தார்.

"ஆமாம், ஆமாம்! நான் மறக்கவில்லை; மறுக்கவும் இல்லை!" என்றார்.

"இல்லை இப்போது மறந்து விட்டீர்களே..." என்றாள் செம்பியன் தேவி.

"என்ன சொல்கிறாய் தேவி?–நாம் இங்கேயே நின்று பேசுவதைத் தொலைவிலிருந்து பலரிப் பெண்கள் பார்க்கிறார்கள்" என்று கவலையுடன் கேட்டார் கண்டராதித்தன்.

"ஏன் இந்தப் பொல்லாத சுகரும் கேட்டுக் கொண்டே இருக்கிறது. அரசே! மேற்குத் திசை ஊர்களுக்குச் செல்லும் போது மட்டும் என்னை அழைத்துச் செல்ல மறுக்கிறீர்களே ஏன்?" என்று செம்பியன் தேவியார் கவலையுடன் கேட்டாள்.

கண்டராதித்தன் உடனே மறுமொழி கூறவில்லை. மௌனமாக அந்த இடத்தை விட்டு மெல்ல நடந்தார். கண்டராதித்தனின் மௌனம் தேவிக்கு விளங்கவில்லை.

33384

அவர் ஏன் எதும் மறுமொழி கூறாமல் செல்கிறார் என்ற கவலை அவள் உள்ளத்தை வாட்ட அவளும் பின் தொடர்ந்தாள்.

இரவு போஜனத்திற்குப் பிறகு சயனத்திற்கு முன்பு மஞ்சத்தில் தேவி கண்டராதித்தனின் பாதங்களை மெல்ல வருடியாவாறு கேட்டாள்:

"திடீரென்று மௌனமாகிவிட்டீர்கள். ஏதோ சிந்தனையில் ஆழ்ந்துவிட்டீர்கள். நான் கேட்ட கேள்விக்கு மறுமொழி கூறவில்லையே?" கவலைக் குரலில் பொங்கி நின்றது.

"தேவி, எனக்கு இந்த அரச பரியாலனமும், அரசுக் கட்டிலும், மகுடமும், மந்திரிப் பிரதானிகளும் – ஒருவருமே பிடிக்கவில்லை. என் மனத்திற்குள்ளே ஓர் ஒளி கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கொண்டே வருகிறது. அதைப் பற்றிச் சிந்திக்கிறேன். நீ கேட்ட ஏதும் என் மனத்தில் பதியவில்லை" என்று மெல்லக் கூறினார்.

செம்பியன் மாதேவி திடுக்கிட்டாள். இதென்ன, இவர் மனத்தில் அதற்குள் ஒரு மாற்றம்? சற்று முன்புதானே பழைய சம்பவங்களை எல்லாம் நினைவுபடுத்திக் கொண்டார். மேற்குத் திசை நாடுகளுக்குச் செல்லும்போது என்னையும் ஏன் அழைத்துச் செல்லக் கூடாது என்று நான் கேட்டதற்கு இவர் கூறும் மறுமொழி ஒன்றுக்கு ஒன்று தொடர்பு அற்றதாக விளங்குகிறதே என்று எண்ணியவள், அவரது மார்பருகே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு, அவரது மார்பிலுள்ள முத்துமாலையை வருடியவாறு, "தங்கள் உள்ளத்திற்குள்ளே வளரும் ஒளி போன்றே என் இதயத்திலும் ஒரு ஜோதி சுடர் விடுகிறது. தஞ்சை மாளிகைக்குள் அடைபட்டுக் கிடக்காமல் நடு நாட்டிலுள்ள தலங்களையும் தொண்டை நாட்டுத் தலங்களையும் காண வேண்டும் எனும் ஆவல் என்னை உந்துகிறது. ஆனால் நமது சொந்த வெறுப்பு

விருப்பங்களுக்கு மேலே நமக்கு மாபெரும் கடமையென்று ஒன்று இருப்பதை மறந்து விட்டீர்களா? நாம் சோழநாட்டு மக்களுக்காக வாழ்பவர் என்பது தாங்கள் அறியாததா? பராந்தக சோழ தேவர் தங்களிடம் மாபெரும் கடமையை ஒப்படைத்துவிட்டுச் சென்றதை மறந்துவிட்டீர்களா? நம் இதய வேட்கை இறைவனைத் தேடுவது. நம் புற வேட்கை மக்களுக்கு நல்லாட்சி தருவது. தங்கள் கடமையில் சரியாதிக் கடமை மறந்துவிட மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். சிவ சிந்தனையுடன் சோழநாட்டு நலனுக்காக வாழ்வதில் எந்தவித அசௌகரியமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே" என்று செம்பியன் மாதேவியார் மெல்ல, ஆனால் அழுத்தமாக, அதே போது கணவர் மனத்தில் எந்தவிதமான சீற்றமும் எழாமல் பேசினார்.

கண்டராதித்தனின் உதடுகள் சிவசிவ என்றே முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

அந்தப்புரத்திற்கு வெளியே இரவு அரசர் தூயிலும் நிமித்தம் மெல்லிய கீதமிசைக்க வருபவர் ஓசை கேட்டது. தொலைவில் மணி ஓசை கேட்டது.

"ஐயனே! நெடுந்தூரம் வந்த களைப்புத் தங்களை மிகவும் சோர்வுறச் செய்திருக்கும். இந்த வேளையில் நான் ஏதேதோ கூறித் தங்களுக்கு மேலும் சோர்வளிக்க விரும்பவில்லை. தங்களுடன் என்னையும் எங்குச் சென்றாலும் அழைத்துச் செல்வதாகக் கருணைகூர்ந்து கூறுதி கூறுங்கள்" என்று அவருடைய கரங்களை அழுத்தமாகப் பிடித்தவாறு தேவியார் கேட்டாள்.

கண்டராதித்தன் விழிகளில் நீர் தளும்பியது. தேவியின் கரங்களை எடுத்து தன் மார்பில் வைத்துக் கொண்டு, "தேவி! உன்னுடைய சிவபக்தியை நான் அறிவேன். அதைவிட உன்னுடைய அறிவாற்றலையும் நான் மிக மிக அறிவேன். உன் உறுதுணை

எனக்கு எப்போதும் இருக்க வேண்டும் என்றே இறைவனைப் பிரார்த்திக்கிறேன். உன் திறமையையும் புத்திக்கூர்மையையும் மக்கள் புகழ்ந்து பேசும் போது என் உள்ளத்தே குதூகலம் ஏற்படுகிறது..." என்று கூறிவரும் போது தேவியின் முகத்தில் திடீரென நாணரேகை படர்வது மெல்லிய விளக்கொளியில் நன்றாகப் புலப்பட்டது.

இயற்கையாகவே அழகு நிறைந்த செம்பியமான் தேவியின் முகத்தில் நாணத்தால் ஏற்பட்ட மாறுதல் மேலும் அழகை அதிகரித்தது. இதயத்தில் ததும்பி நிற்கும் பக்தி வெள்ளம் முகத்திலும் பாய்வதால் அந்தப் பெண்மை அழகு லேம் அருளழகும் பெற்று விளங்குவதைக் கண்டராதித்தன் இமைக்காமல் பார்த்தவாறிருந்தார். அன்றுதான் புதிதாகத் தேவியின் வடிவழகு முழுவதையும் ரசிப்பது போல் அவருக்குத் தோன்றியது.

"தேவி! நீ அடிக்கடி பாடுவாயே அந்தப் பாடலைச் சற்றுப் பாடு" என்று கேட்டார். அவரது விழிகளில் ததும்பி நிற்பது உணர்ச்சி பூர்வமான ஆனந்தக் கண்ணீர் என்பதைப் புரிந்துக் கொண்ட தேவி,

"மாதர் பிறைக் கண்ணியானை..."—என்ற பாடலை மெல்லிய குரலில் பாடினாள்.

தேவி பாடி முடித்ததும், கண்டராதித்தன் உணர்ச்சியின் உச்சக் கட்டத்தில் சஞ்சரித்தவராகத் தேவியை இழுத்துத் தன் மார்போடு மார்பாக, தேவியின் மூக்குத் திணறும் வண்ணம் அணைத்துக் கொண்டு, "தேவி! நாம் இப்படியே இருந்து விடுவோமா?" என்று கேட்டார். பல நாட்கள் பிரிந்திருந்த தாபமும் சொற்களுடன் இணைந்தது.

அவர் நெற்றியில் ததும்பிய வியர்வையைத் தேவி மெல்லத் தன் பட்டு மேல் ஆடையால் துடைத்து, "எப்படி?" என்று மெல்ல நகைத்தவாறு ஒன்று மறியாதவள் போல் கேட்டாள். திருமணமாகிப் பல ஆண்டுகளாக அவள் கணவருடன் தனித்துக் கழித்திருந்தாலும் இந்த ஓர் இரவின் நெருக்கமான பிணைப்பைப் போல் அவள் இதற்கு முன் வேறு எப்போதும் அறியாதது போல் தோன்றியது.

"அந்தக் காதல் மடப்பிடியையும் களிறையும் நினைத்துக் கொண்டேன். நாமும் பிடியும் களிறுமாக மாறிச் சிவபாத சிந்தனையுடையவராக இப்படியே எப்போதும் இருந்து விடுவோமா?" என்று மீண்டும் கண்டராதித்தன் கேட்டார்.

"ஆஹா! இப்படியே இருக்கத்தான் எனக்கும் ஆசை. சிவசாம்ராஜ்யத்துப் பூத கணங்களுள் ஒருவராக நாம் மாறி விடவேண்டும் என்பதுதான் என் அவா. ஆனால் நமக்குள்ள கடமைகளை நிறைவேற்றிவிட்டு சிவயோகம் புரிகுவோம்" என்று அவர் அணைப்பிலிருந்து மெல்ல விடுபட முயன்றவாறு பேசினாள் தேவி.

கண்டராதித்தன் திடீரென்று கலகலவென்று நகைத்தார்.

"தேவி, உன்னைவிட்டுப் பிரியாமல் எப்போதும் இருக்கவும் உன் பாடலைக் கேட்டுக் கொண்டிருக்கவும் எனக்கு உள்ள ஆசையை மனம்விட்டு உன்னிடம் தெரிவிப்பதில் எனக்கு நாணமில்லை. ஆனால் நேற்றுப் பழுவேட்டரையர் என்ன சொன்னார் தெரியுமா?" என்று கேட்டு அவள் முகத்தை நோக்கினார்

செம்பியன் மாதேவியார் துவண்டிருந்த அந்த நிலையிலிருந்து விடுபட்டுத் தன் ஆடைகளைச் சரி செய்துகொண்டு, "நமச்சிவாய

வாழ்க. நாதன் தாள் வாழ்க!" என்று மும்முறை கூறிவிட்டு அவர் அருகே அமர்ந்து, "சுவாமி! பழுவேட்டரையர் என்ன சொல்கிறார் என்று தெரியும். அவருக்கு என்னைக் கண்டாலே இப்போதெல்லாம் பிடிப்பதில்லை. தங்களுடைய வீரப் பராக்கிரமங்களுக்கு நான்தான் இடையூறாக இருந்து கோயில் தீர்த்தம் என்று அழைத்துச் சென்று தங்கள் மனத்தை மாற்றி விடுகிறேனாம்..." என்றாள்.

"தேவி! நீயும் அறிந்து வைத்திருக்கிறாயா? நேற்றுப் பழுவேட்டரையர் கூறிய வார்த்தைகளுக்காகவே அவர் நாவைத் துண்டித்துச் சிறையிட்டிருப்பேன். சோழ நாட்டின் பெருமையும் திறமையும் நான்கு திசைகளிலும் குறைந்து வருவதற்கு என் திறமையின்மை காரணமாம். அந்தத் திறமை இன்மைக்குத் தூபம்போடுவது நீதானாம். அவர் இப்படிக் கூறியது கேட்டு நான் வெகுண்டெழுந்தேன்" என்று கூறிச் சற்று நிறுத்தினார் மன்னர்.

செம்பியன் மாதேவி மெல்லச் சிரித்தாள். "அரசே! பழுவேட்டரையர் பெரிய மனக்கோட்டை கட்டுகிறார். நமக்கு அடுத்துச் சோழ அரியணை ஏறுவதற்கு ஓர் மகன் பிறக்காததை அடிக்கடி அவர் சொல்லிக் காட்டுவதுடன் நிற்கவில்லை. இனி நமக்குப் புத்திரப்பேறு கிடையாது என்ற முடிவுக்கு வந்தவராகத் தங்கள் சகோதரருக்கு இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டும் என்றும் திட்டமிடுகிறார்"

"அரிஞ்சயன் என் அருமைச் சகோதரன். சோழ அரியணையை அவனுக்குத் தருவதில் என்னை விட வேறு யாரும் அதிக மகிழ்ச்சி அடையமாட்டார்கள். உரிமையை நான் மனமுவந்து தர வேண்டும். பழுவேட்டரையருடைய விருப்பப்படி சதி செய்து பெறக்கூடாது. தன் மகள் அரசியாக வேண்டும் என்று அவர் ஆவல் கொண்டிருப்பதால் தான் தன் மருமகன் அரிஞ்சயனுக்குச் சோழ அரியணையை அளிக்க விரும்புகிறார்"

கண்டராதித்தன் அவளைத் திரும்பிப் பார்த்தார். 'தேவி! என் மனமும் உன் மனமும் பழுவேட்டரையருக்குப் புரியாமல் வீணே உன்னைப் பழிக்கிறார். உன்னைப் பழிக்கும் அவருடைய உள்ளத்தில் கொடிய எண்ணம் உருவாவதால் அதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். அவரைச் சிறையிலடைப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்றார் கண்டராதித்த சோழர்.

தன் கணவருக்கு இப்படியொரு கோபம் பொங்கும் என்று செம்பியன் மாதேவி எதிர்பார்க்கவில்லை. பழுவேட்டரையரைப் பகைத்துக் கொள்வது சரியல்ல என்று அவளுக்குத் தோன்றிற்று.

கண்டராதித்தச் சோழ தேவருக்கு இரவு ஏற்பட்ட சீற்றம் மறுநாளும் குறையவில்லை என்பது புரிந்தது. காலையில் எழுந்தவுடனேயே முதல் பணியாகத் தன்னை உடனே சந்திக்குமாறு பழுவேட்டரையரிடம் தெரிவிக்குமாறு உத்தரவிட்டார் கண்டராதித்தன். ஆனால் பழுவேட்டரையர் மன்னரைச் சந்திக்க வரவில்லை.

6. நெருப்பும், மலரும்

கூத்தன் அழைத்துச் செல்ல உதயனும் மதுவனரும் அவரைத் தொடர்ந்து தில்லை நடராஜர் திருக்கோயிலுக்குச் சென்றனர் அவர்களுடன் மலர்மங்கையும் சென்றாள். உச்சிக் கால பூஜை நடைபெறும் வேளை.

உதயனும் மலர்மங்கையும் இதற்கு முன்பு பல தடவைகள் நடராசர் கோயிலுக்குச் சென்றிருக்கிறார்கள்.

கோவிந்தராசர் திருச் சந்நிதியில் நின்று கோவிந்தராசரையும் வலது புறமிருக்கும் நடராசரையும் ஒரே போதில் தரிசிக்கும் போது மலர்மங்கைக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. கூடலி நகரில் ஆற்றங்கரையில் கூட்டுத் துறையில் இருந்தால் இத்தகைய பாக்கியம் கிடைத்திருக்குமா என்று எண்ணிப் பார்த்தாள்.

உதயனுக்குச் சாமி தரிசனத்தில் அவ்வளவு ஈடுபாடு கிடையாது. காலை முதல் இரவு வரை அங்காடியில் உட்கார்ந்து வாணிபத்தைக் கவனிப்பதிலேயே அவனது நேரம் காலம் கழிந்துவிடும். அதைத் தவிரக் கூடலியிலிருந்து ஒற்றர்கள் கொண்டுவரும் செய்தி அறிய சத்திரத்திற்கு நாள்தோறும் சென்று வருவதற்கு நேரத்தை அவன் ஒதுக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. தான் ஓர் இரட்ட நாட்டு ஒற்றன் என்று யாரும் சந்தேகப்படாதிருக்க சத்திரத்திற்கு வேண்டிய நவதானியங்களைக் கொடுப்பது போல் அவ்வப்போது செல்வான்.

திருவாதிரை நாள் போன்ற முக்கியமான நாட்களில் அவன் நடராசர் திருச் சந்நிதிக்குச் சென்று ஆண்டவனைத் தரிசனம் செய்வான். அவன் விழிகள் நான்குபுறமும் வட்டமிடும். செய்தி கொண்டு வந்திருப்பவர்கள் யாராவது வந்திருக்கிறார்களா என்று.

அன்று அவர்கள் சென்றபோது முன் மண்டபத்தில் உயர்ந்த பீடத்தில் மரகத லிங்கத்திற்கு அபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. வேதகோஷங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. யாழும், குழலும் ஒலித்துக் கொண்டிருந்தன. நாயன இசை கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு புறமாக உதயனும் மதுவணரும் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் நின்ற இடத்திற்குச் சற்றுத்தள்ளி மலர்மங்கை நின்று கொண்டிருந்தாள்.

மலர் மங்கையைச் சற்றுத் தொலைவிலிருந்து கூத்தன் ரசித்துக் கொண்டிருந்தான். நேர் எதிரே அவள் எழிலைக் காண்பதைவிட ஒரு பக்கமாக அவளைக் காண்பதில் புதிய கனவு இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

நாள்தோறும் கூத்தன் மலர் மங்கையைக் காண்கிறான். அவளுக்குப் பாடல்களைக் கற்றுக் கொடுக்கிறான். தொடை மீது மெல்லிய விரல்களால் தாளமிட்டவாறு அவள் பாடும் அழகை ரசித்திருக்கிறான். உருக்கமான பாடல்களைக் கசிந்துருகிப் பாடும்போது விழிகளை அவள் பாதி மூடிக் கொண்டிருக்கும்போது அந்த அழகை ரசித்திருக்கிறான். இதழ்கள் விரிந்தும் குறுகியும் நெளிந்தும தோன்றும் எழிலை மனத்திற்குள்ளே பருகியிருக்கிறான். மேலாடை விலகாமல், மேனி அழகு அதிகம் வெளியே புலப்படாமல் அவள் நிற்பதும் நடப்பதும் உட்காருவதுமான அவள் நளினத்தை அவன் உள்ளூர மகிழ்ந்திருக்கிறான்.

ஆனால் இப்போது அவள் சிற்பத்தூண் அருகே மற்றொரு சிற்பம் போல் நிற்கும் அழகைக் காணும் போது அவனுள்ளம் குறுகுறுத்தது. தனது கள்ளப் பார்வையை மற்றவர் எவரும் கண்டுவிடவில்லை என்பதை உறுதி செய்துகொண்டு மற்றொருமுறை மற்றொருமுறை என்று அவள் அழகைக் கள்ளத்தனமாகப் பருகினான்.

மந்திர கோஷங்களுடன் அபிஷேகம் நடந்து கொண்டிருந்தது.

அவள் தன்னை உதாசீனம் செய்யச் செய்யத்தான் அவள் மீது அவனது கள்ளமனத்தில் உறைந்திருந்த காம எண்ணம் விகவரூபமெடுத்தது.

மலர்மங்கையின் விழிகளும் அவன் விழிகளும் ஒருமுறை திடீரென்று சந்தித்துக் கொண்டன. அவள் கரங்கள் மளமளவென இயங்கி மேலாடையைச் சரிசெய்து கொண்டன. அவன் பார்வையின் உள்ளர்த்தத்தை அவள் புரிந்துகொண்டுவிட்டாள். அவன் பார்வையில் விழாத இடமாகத் தூண்மறைவில் நகர்ந்து கொண்டாள்.

அபிஷேகம் முடிந்தது. தீபாராதனை முடிந்து கூத்தன் பதிகம் ஓதும் வேளை வந்தது. கூத்தன தில்லை வாழ் அந்தணர்களுக்குள் மூத்தவர் அருகே சென்று மெல்ல ஏதோ கூறினான்.

அவர் முகத்தில் வியப்புக்குறி தோன்றியது. முகம் மலர்ந்தது. தலையை அசைத்துத் தன் அருகே இருந்தவரிடம் "அதோ, கும்பத்தருகே நிற்கிறாளே ஒரு பெண் அவளைப் பாடுமாறு சொல்லு" என்று அன்புக் கட்டளையிட்டார். மிகவும் பயபத்தியுடன் வலக்கரத்தால் வாயை மெல்லப் பொத்தித் தலையை அசைத்து மலர்மங்கையிடம் அவர் விரைந்தார்.

"உன்னைப் பாடுமாறு பெரியவர் உத்தரவு" என்ற குரல் கேட்ட மலர்மங்கை திடுக்கிட்டாள்.

"என்னையா..... ஆ..... ஆ....." என்று வியப்புடன் அவரை நோக்கினாள் மலர்மங்கை.

"ஆமாம், உன்னையேதான். உம் நேரமாகிறது. பூசையை முடித்துக் கொண்டு நாங்கள் சற்று ஒய்வெடுக்க வேண்டாமா?" என்று தேவகாரியம் செய்யும் அவர் அலுத்துக் கொண்டார்.

தன்னைப் பாடுமாறு சிபாரிசு செய்தவர் கூத்தனாகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்த மலர்மங்கை கூத்தனை நோக்கித் திரும்பினாள். கூத்தன் அங்கில்லை, மதுவணரும்

உதயனும் அவளருகே வந்து நின்றிருந்தனர். கூத்தனும் அவளருகே நின்றிருந்தான். தோளைத் தொட்டு உலுக்கி "பாடு" என்று சொல்லாக் குறையாக மிக நெருக்கமாக நின்றிருந்தான்.

அவன் நெருங்கி நிற்பதும் பார்ப்பதும் அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அதே சமயம் தெய்வத் திருச்சபையில் தான் பாட ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்ததற்கு அவன்தான் காரணம் என்று அறியும்போது அவனுக்கு நன்றி தெரிவிக்கத் தோன்றியது. அவனுக்கு விழியால் மெல்ல கனிவை ஒரு நொடி மட்டும் புலப்படுத்தினாள்.

மலர்மங்கை சற்று நகர்ந்தாள். உதயன் அவளருகே வந்தான்.

"மங்கை, கூத்தன் சொன்ன வண்ணம் செய்துவிட்டான், நடராசர் திருச்சபையில் நீ பாடப் போகிறாய்..." என்று உற்சாகப்படுத்தினான்.

"உம்... உம்... நேரமாகிறது. மங்கை, இப்படி வா, இங்கு நின்று பாட வேண்டும்" என்று கூத்தன் பரபரப்புடன் கூறினான். அவள் காத்தைத் தொட்டு அவளை அழைத்துச் சென்று அந்த இடத்தில் நிறுத்த விரும்பினான். மங்கையின் விழிகளில் திரிபுரத்தை எரித்த சிவனின் கோபம்!

"கூத்தன்! சோழ மன்னர் வந்தால் எங்கே நிற்பார்? நீ எங்கே நின்று பாடுவாய்?" என்று மதுவணர் கேட்டார்.

கூத்தன் திரும்பிப் பார்த்தான். மங்கையின் இரு பக்கங்களிலும் உதயனும் மதுவணரும் மெய்க்காவலர் போல் நிற்கிறார்கள். பின்புறம் சிற்பத் தூண்.

'நாம் எதற்காக மங்கையை இங்குப் பாடவைக்க வேண்டும் நடராசர் திருச்சபையில் பாடுவதென்றால் பூர்வஜென்மத்தில்

புண்ணியமன்றோ செய்திருக்க வேண்டும்? ஆனால் மங்கை யோசிக்கிறாள். என்னை வேண்டா வெறுப்புடன் நோக்குகிறாள். இவளுக்குப் பாட வரவில்லை; தொண்டை சரியில்லை' என்று சிவாச்சாரியாரிடம் சொல்லிவிடலாமா? கூத்தன் ஒருகணம் நினைத்தான்.

'ஹூம், என்ன தவறான எண்ணம்! சோழ மன்னர் எதிரே ஒரு மங்கையைப் பாடவைத்தால் நமக்குப் பெருமை. அற்புதமாகப் பாடும் இந்தப் பெண் யார்? என்று மன்னர் வினவுவார். யாரிடம் இசை பயன்றாள் என்று வினவுவார். நமக்குப் பெயரும், புகழும் வருமே!' என்று கூத்தன் நினைத்தான். ஆனால், மதுவணரும் உதயனும் அப்படி நினைக்கவில்லை. சோழ சக்கரவர்த்தியின் எதிரே மங்கை பாடுவதால் தங்கள் நாட்டிற்கு உடனே பலன் ஏற்படப் போவதாக நினைத்தார்கள்.

மங்கை இருந்த இடத்தைவிட்டு இன்னும் நகரவில்லை. சுற்றுமுற்றும் பார்க்கிறாள். அனைவரது விழிகளும் தன்னையே நோக்குவதை உணர்கிறாள். வாத்ய ஓசை நின்றது. வேத ஒலி நின்றது. பெரும் அமைதி நிலவியது. அடுத்து சிவ பெருமான்மீது போற்றிப் புகழும் பதிகங்களைப் பாட வேண்டும்.

"கூத்தா என்ன அப்படியே சொக்கி மரமாக நிற்கிறாய், ஆரம்பமாகட்டும் திராவிட வேதம்" தில்லை அந்தணர் பரபரக்கிறார்.

"மங்கை, ஏன் இன்னும் மௌனம்? வா இப்படி! இங்கே நின்று பாடு, மன்னர் வந்தால் அதோ அங்கே நிற்பார். உன் பாடலைக் கேட்பார். இறைவனைப் பார்ப்பார். உள்ளத்துள் பரமன் திரு உருதோன்றக் கண்களை மூடிக் கொள்வார். உன் இசை செவிவழியே அவர் இதயத்தை அடையும். உம்... வா..." என்று,

மங்கை சற்றும் எதிர்பாராத வகையில் அவள் கரத்தைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துச் சென்று மேடையின் ஓரத்தே நிறுத்தினான்.

"உம், பாடலைத் தொடங்கு. நான் அடியெடுத்துக் கொடுக்கட்டுமா?" என்று பரபரத்தான் கூத்தன். கையிலுள்ள தாளத்தைத் தட்டினான்.

இமைக்கும் நேரத்தில் நிகழ்ந்துவிட்ட அவனது செய்கையால் அதிர்ச்சியடைந்த மங்கை அவன் கரத்தை உதறித் திரும்பி அவனை மீண்டும் கடுமையாக நோக்கினாள்.

"உம், தாமதப்படுத்தாதே, போ மங்கை" என்று உதயன் தன் செவிக்கருகே கட்டளையிட்டுச் சொல்வது கேட்டது. இனியும் மௌனமாக நிற்க முடியாது. கூத்தன் தாளமிட்டான். பதிகத்தின் முதல் அடியை எடுத்துக் கொடுத்தான். மலர்மங்கை பாடினாள்.

கோயில் நந்தவனத்துக் குயில்கள் ஒன்றுகூடி இசைத்தனவா? அருவிகள் நெளிந்து நெளிந்து சென்று இசை எழுப்பினவா? தேன் துளிகள் கருப்பஞ் சாற்றில் கலந்து வானிலிருந்து பொழிந்தனவா? காற்றிலே பூங்கொத்துக்கள் சொரிந்தனவா?

சபை அமைதியாக இருந்தது. பூசாரியர்கள் மெய்ம்மறந்து நின்றனர். தேவகாரியம் செய்பவர் கீத இன்பத்தில் திளைத்து நின்றனர். கருவரையிலுள்ள நடராசர்கூட ஒரு கணம் இசை இன்பத்தில் மயங்கி நடனத்தை நிறுத்தியவர்போல் தோன்றியது.

உதயனும் மதுவணரும் ஒருவரையொருவர் பெருமை நிறைந்த விழிகளுடன் பார்த்துக் கொண்டனர்.

கோயிலிலிருந்து வீடு திரும்பும்போது மலர்மங்கையைத் தொடர்ந்து கூத்தன் சென்றான். திட்டமிட்டே அவர்களை அவ்வாறு

செல்ல அனுமதித்தது போல் மதுவனரும், உதயனும் தனியிடத்தே ஏதோ பேசச் சென்றுவிட்டனர்.

மங்கையைப் பின் தொடர்ந்த கூத்தன் ஏதோ பேச முயன்றான். மங்கை உம் கொட்டியும் திரும்பிப் பார்க்க முயலவில்லை.

"மங்கை பாடுவாயோ என்று பயந்து கொண்டிருந்தேன். எனக்கு நீ நற்பெயரை வாங்கித் தந்துவிடுவாய் என்ற பூரணமான நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

"சோழ மன்னர் உன்பாடலைக் கேட்டுப் பரவசமடைந்து விடுவார். எனக்கும் நல்ல பெயர், உனக்கும் நல்ல பெயர். ராஜமரியாதை இலேசாகக் கிடைக்குமா?"

கூத்தன் பாராட்டிச் சொல்லும் ஒரு வார்த்தைகூட மங்கையின் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. அவள் முகத்தில் ஒருவித வெறுப்பு, முகத்தைத் திருப்பிக் கொண்டு வேகமாக நடந்தாள். மங்கை.

கூத்தனும் அவள் நடைக்கு ஏற்பத் தன் நடையை வேகமாக எடுத்து வைத்தான். மங்கையின் பேச்சில் சிறிது மாறுதல் தெரிந்தது. என்றாலும் மங்கையைவிட்டு விலகிச் செல்ல அவனுக்கு அப்பொழுது விருப்பமில்லை. அவள் அழகு, அவள் குரலினிமை ஒவ்வொன்றும் இப்பொழுது அவனுள்ளத்தில் புதிய வெறியை ஊட்டத் தொடங்கின. நடராசர் திருச்சபையில் ஒரு கணம் அவள் கரத்தைப்பற்றியபோது ஏற்பட்ட அந்த மென்மையான ஸ்பரிசத்தை அவன் இன்னும் உணர்ந்து கொண்டிருந்தான். அவன் உள்ளத்தினுள் இவ்வளவு நாட்கள் மறைந்திருந்த ஓர் உணர்வு விழித்தெழுந்துவிட்டது. அது மங்கையின் குரல் கேட்டு விழித்ததா? அவள் எழில் கண்டு விழித்ததா?

"மங்கை, உனக்கு என்மேல் ஏன் வெறுப்பு ஏற்படுகிறது. உன் முகத்தில் ஒரு சிறு முறுவலையாவது காட்டக் கூடாதா? எனக்கு ஒரு சிறுநன்றி தெரிவிக்கக் கூடாதா? ஒன்றுமே கிடையாதா?" என்று கூத்தன் அவளின் மிக அருகே தோளோடு தோள் உராயும் விதத்தில் நெருங்கி நடந்தான்.

"நன்றியா?"–மங்கை வெறுப்பு புலப்படச் சிரித்தாள். "நான் உங்களுக்கு ஏன் நன்றி சொல்ல வேண்டும்?" மங்கையின் குரலில் அலட்சியமிருந்தது.

கூத்தன் திடுக்கிட்டான். "மங்கை! நீயா இப்படிப் பேசுகிறாய்? நடராசர் திருச்சபையில் பூசை முடிந்தவுடன் பாடுவதற்கு வாய்ப்பு ஏற்படுவதென்றால் அது எதிதன்றே. என் வார்த்தைக்கு மதிப்பு வைத்து அந்த முதியவேதியர் வாய்ப்பு அளித்தார். அதற்காகவாவது எனக்கு நன்றி சொல்லக் கூடாதா?" கூத்தன் அவளைத் தடுத்து நிறுத்த முயன்றான்.

"சபையில் பாட வாய்ப்பளிக்குமாறு நான் கேட்க வில்லையே"

"நீ கேட்காவிட்டாலும் உதயனும் மதுவனரும் கேட்டார்களே. சோழச்சக்கரவர்த்தியின் பார்வையில் நீ படுமாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்களே. அதற்காகத்தானே உனக்கு நான் பதிகங்களைக் கற்றுக் கொடுத்தேன்..."

"அதற்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். தெய்வத்திருப்பாடல்களைப் பயின்ற பிறகு என் மனம் சிறிய செய்கைகளைச் செய்பவர் மீது பற்றுக் கொள்ளவில்லை. எப்போதும் சிவ நினைவாகவே இருக்கத் தோன்றுகிறது"

"நான் அந்த நினைவை மாற்ற விரும்பமாட்டேன் மங்கை! நீயும் நானும் சேர்ந்து எப்போதும் சிவ சந்நிதானத்திலேயே இருப்போம்"

"சிவ சந்நிதானத்திற்குப் போகும்போது தங்களை அழைக்கிறேன். நான் இப்போது குடிலுக்குச் செல்கிறேன். களைப்பாக இருக்கிறது. தங்களுடைய பேச்சு எனக்கு மேலும் களைப்பை அளிக்கிறது! என்னைச் சற்றுத் தனியே விட்டுச் செல்லுங்கள்..."

"மங்கை! எனக்கும் களைப்பாக இருக்கிறது. இங்கே இப்படியே மர நிழலில் அமர்வோம். கோயில் பிரசாதம் கொண்டுவந்திருக்கிறேன். பசி தீர்த்துக் கொள்வோம். உன்னைவிட்டு ஒரு கணமும் பிரிவதற்கு எனக்கு மனமே வாவில்லை. மங்கை இப்படித் திரும்பிப் பார்த்துப் பேசு–" கூத்தன் சற்று வேகமாக அவள் முன் சென்று வழியை மறிப்பதுபோல் நின்றான்.

மங்கை சற்றுப் பின் நகர்ந்தாள். "மறுபடியும் சொல்கிறேன் என்னைத் தனியே விட்டுச் செல்லுங்கள். எனக்கு அமைதி வேண்டும்"–மங்கை சற்று அமைதியாகவே பேசினாள்.

"களைப்பு நீங்க நான் பாடட்டுமா? இங்கேயே நான் உனக்கு அந்தப் பாடலைக் கற்றுத் தருகிறேன்..." கூத்தன் குழைந்தான்.

"எனக்கு நீங்கள் இனி ஒன்றும் கற்றுத்தர வேண்டாம். ஒவ்வொருவரும் என்னைக் கருவியாகப் பயன்படுத்தப் பார்க்கிறீர்கள்..."

"மங்கை, நீ என்ன சொல்கிறாய்? குருஸ்தானத்தில் நான் இதுவரை இருந்திருக்கிறேன். அதற்காகவாவது எனக்கு மதிப்புத் தரவேண்டாமா?"

"குரு! இந்தப் புனிதமான பெயருக்காகத்தான் நான் இதுவரை மதிப்புத் தந்தேன். ஆனால் உமது அந்தரங்க

விகாரத்தைப் புரிந்து கொண்ட பிறகு அந்தப் புனிதப் பெயருக்கான மதிப்பை உமக்கு இனித் தரப் போவதில்லை"–மங்கை அவனை ஒதுக்கிவிட்டு முன்னேற முனைந்தாள்.

கூத்தன் தாவி அவளது கரத்தைப் பிடித்தான். "என்ன சொன்னாய்? என் அந்தரங்க விகாரத்தைப் புரிந்து கொண்டாயா? உன்னைப் பூசனைக் குரியவளாக இதயத்தில் கொண்டிருப்பது விகாரமான செயலா?" என்று கூறிப் பெரிதாக நகைத்தான்.

"மங்கை! என் அந்தரங்க உள்ளத்தை அறிந்தவள்போல் இதுவரை நீ நடந்து கொள்ள வில்லையே. என்னை இதுவரை நீ ஒதுக்கியது இல்லை. நீ மலர் பறிக்கும்போது நான் உன்னருகே வந்திருக்கிறேன். குளத்தில் நீ குளித்துவிட்டு ஈர ஆடையுடன் வரும்போது உன் எதிரில் வந்து உன்னுடன் நெடுநேரம் பேசியிருக்கிறேன். குடிலுக்கு வந்து நேரம் போவது தெரியாமல் இசையைப் பயிற்றுவித்திருக்கிறேன். அப்போதெல்லாம் நீ என் அந்தரங்கத்தைப் புரிந்து கொள்ள வில்லையா? மங்கை, என்னால் மறைக்க முடியாது. உன்னைக் காணுந்தோறும் என் இதயத்தில் மூண்டெழும் அக்னி கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வந்தது. அது இப்பொழுது தீ நாக்குகளுடன் எழுந்துவிட்டது. என் உடலைத் தொட்டுப்பார். உள்ளத்தின் கொதிப்பை உடல் பிரதிபலிப்பதைக் காண்பாய்" என்று கூறி அவள் கரத்தை எடுத்துத் தன் மார்பு மீது வைத்துக் கொண்டான்.

மங்கை பெண் புலியானாள். "என்னைப் புரிந்து கொண்டது அவ்வளவுதானா? இசைக்கு என் உள்ளத்தை அளித்தேன். உமக்கல்ல. இறைவன் மீது காதல் கொண்டேன். உம்மீதல்ல. உம்மைப் பார்க்கும் போது எனக்குத் தெய்வ தூதராகத் தோன்றியது. நீங்கள் என் உடலின் மீது மோகங் கொண்டு அந்தத்

தீயில் பொசுங்கிச் செத்துக் கொண்டிருந்தால் அதற்கு நான் காரணமா?" என்று கர்ஜித்தாள்.

கூத்தனும் பொறுமை இழந்தான். "இசைக்கு உள்ளத்தைக் கொடுக்க வந்த உன் இலட்சணம் எனக்குத் தெரியாதா?" என்று அவளை நெருங்கினான்.

மங்கை இன்னும் சற்றுப் பின் நகர்ந்தாள். "நீங்கள் என்ன இலட்சணத்தைக் கண்டீர்கள். என்னை வேசி என்று நினைத்துக் கொண்டு விட்டீர்களா?" என்று கடுமையாகப் பேசினாள்.

"ஏன்? வேசி என்றால் குறைந்தவளா? வடக்கே வெகு தொலைவிலிருந்து உன்னை உதயன் எதற்காக இங்கே அழைத்து வந்தார் என்பது எனக்குத் தெரியாதா? சோழ மன்னரை வசப்படுத்த அவர் உன்னைப் பயன்படுத்த அழைத்து வந்தார். வெறும் அழகு மட்டும் போதாதென்று உன் இனிய குரலைப் பயன்படுத்தி இசை பயில ஏற்பாடு செய்தார். சோழ மன்னருக்கு ஆசை நாயகியாகப் போகும் நீ வேசி இல்லாமல் வேறு என்ன? உன்மீது நான் ஆசை கொண்டதில் என்ன தவறு? என் மன அந்தரங்கத்தில் தோன்றியதை உன்னிடம் கூறாமல் எவ்வளவு நாட்கள் அடக்கி வைப்பது! சோழ மன்னர் சிதம்பரம் வரப் போகிறார். அவர் முன்னிலையில் நீ பாடப் போகிறாய். உன் பாடலைக்கேட்டு அவர் மயங்கப் போகிறார். நீ தஞ்சைக்குச் சென்று விடுவாய், பிறகு நான் உன்னைச் சந்திக்க முடியுமா? நெருங்க முடியுமா? இன்று எரிமலையின் உச்சியில் அமர்ந்து காமத்தீயால் பொசுங்கிக் கொண்டிருக்கும் என் பசிக்கு விருந்தாகி விடு..." கூத்தன் அவளை நோக்கிப் பாய்ந்தான்.

"சீ! மிகப் பெரிய கயவர் நீங்கள். பசுத்தோல் போர்த்திய புலி, சிவபெருமான் துதிப் பாடல்களைப் பாடிக் கொண்டே சீலமற்ற

உள்ளங்கொண்டவர் நீங்கள். என்ன தவறான எண்ணங் கொண்டிருக்கிறீர்கள். நான் சோழ மன்னரின் ஆசை நாயகியாக ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன். இப்பொழுது எனக்கு வழிவிடப் போகிறீர்களா இல்லையா?"–மங்கை தன் இரு கரங்களாலும் மேனியை மறைத்துக் கொண்டாள்.

"தாமரை மொக்கை இலைகள் மறைத்துவிடாது உன் உயர்ந்த குணத்தை நான் பாராட்டுகிறேன். அப்படியென்றால் நாம் ஒன்று செய்வோம். நான் உன்னை மணந்து கொள்கிறேன். இருவரும் சேர்ந்து இறைவனை இசையால் பூசித்தவாறு காலமெல்லாம் இன்பமாகக் கழிப்போம்... உன் விருப்பத்தைத் தெரிவிக்க இப்போது என்னை ஒரே ஒருமுறை அணைத்துக் கொள். உன்னுடைய குளிர்ந்த மென்மையான தாமரை மொட்டுக்கள் என் இதயத் திரையில் சித்திரம் தீட்டட்டும். உன்னுடைய அன்னத் தூவி போன்ற விரல்களால் என் மேனியை ஒருமுறை தடவு. உன் செவ்விதழ்களால் என் இதழ்களுடன் சங்கீதம் பேசு, உன் அழுத்தமான ஆலிங்கனத்தால் என் மோகத்தை அழித்துவிடு. மங்கை! இந்த உலகத்துச் சுக போக்கியங்கள வேறு ஒன்றையும் நான் வேண்டேன். இன்று நல்ல நாள், இது நல்ல வேளை, அடர்ந்த மரங்களின் நிழல் நமக்கு முத்துப் பந்தல் ஆகட்டும், தென்றலை வீசட்டும். இதோ பூமியில் உதிர்ந்துள்ள தேன் மலர்கள் பஞ்சணையாகட்டும். அதோ அசைந்தாடும் கொன்றைமலரை– உனக்கு விருப்பமான அந்த மலரை நான் பறித்துவந்து உன் கூந்தலில் சூட்டவா? என் இதயத்திலே என்றும் வீற்றிருக்கப் போகும் மலர்மங்கையே, வா. தாமதம் செய்யாமல் என்னைத் தழுவி தாபத்தைத் தணிந்து விடு..."

கூத்தன் பேசினானா? அவனது உள்ளத்தில் எரிமலையாகத் தகிக்கும் விரகத் தீ அவனைப் பேச வைத்ததா! அவன் இதுவரை

கடைபிடித்த உயர்ந்த பிரம்மச்சர்ய விரதம் எங்கே? இறைவனைத் தவிர வேறு சிந்தனையில்லாது வளர்ந்த அவன் குணம் எங்கே?

மலர்மங்கை அவனது நீண்ட வர்த்தையைக் கேட்டுத் திகைத்தாள். அவள் உடல் நடுங்கியது. அவளால வாய் திறந்து மறுமொழி கூறமுடியவில்லை.

அவள் மௌனத்தைத் தனக்குச் சாதகமாக நினைத்த கூத்தன் அவளை நெருங்கினான். கரங்களை நீட்டி அவளது பூ உடலை இழுத்துத் தன்னுடன் சேர்த்து அணைக்கத் தாவினான்.

சிலிர்த்து எழுந்தது பெண்மை. சிறிது பின் நகர்ந்தாள் மங்கை பிறகு பலங்கொண்ட மட்டும் அவனைப் பிடித்து அருகே இருந்த புதரை நோக்கித் தள்ளினாள்.

கூத்தன் "ஓ" என்றலறி புதரில் சாய்ந்தான்.

7. ஒரு வாரிசு உருவாகிறது

கண்டராதித்த சோழரைச் சந்தித்துவிட்டு மாளிகையினின்று பழுவேட்டரையர் வெளியே வரும் வேகத்தைப் பார்த்தவர்கள் அவர் பெரும் சினங்கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

பழுவேட்டரையருக்குச் சோழவள நாட்டில் செல்வாக்கு அதிகம். அவர் கண்டராதித்தன் தந்தை அமரர் பராந்தக சோழரின் அபிமானத்தைப் பெற்றவர். போர்க்களங்களில் பராந்தகருக்கு உறுதுணையாக இருந்து பெரும் வீரத்தைப் புலப்படுத்தியவர். பழுவேட்டரையரின் வீரத்தையும் சோழ நாட்டிடம் அவர்

கொண்டிருந்த பேரன்பையும் கண்ட பராந்தகர் பழுவேட்டரையரிடம் மிக்க மரியாதை வைத்திருந்தார். அந்த மரியாதைக்கு மற்றொரு காரணமுமிருந்தது. பழுவேட்டரையரது மகளைப் பராந்தக சோழர் மணந்திருந்தார். அவள் வயிற்றில் பிறந்த அரிஞ்சயனிடம் பராந்தக சோழருக்குப் பிரியம் அதிகம்.

வருங்காலத்தில் அவன் சோழ நாட்டை ஆளவேண்டும் என்ற எண்ணம் பழுவேட்டரையருக்கு எழுந்தது. அது அடங்காத ஆவலாக மாறியது. தன் ஆவலை நிறைவேற்றத்தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தார்.

பராந்தக சோழரின் தலைமகன் இளவரசர் இராசாதித்தன் தக்கோலப் போரில் எதிர்பாராத விதமாக இறந்துவிடவே பழுவேட்டரையரின் நம்பிக்கை மேலும் உறுதிப்பட்டது. ஆனால் பராந்தகரோ தன் அடுத்தமகன் பெயரன் அரிஞ்சயன் எந்த விதத்தில் குறைந்தவன்? கண்டராதித்தனைவிட ஒரிரு வயதுகளே சிறியவன் என்பதால் அவன் இளவரசனாக முடியவில்லையா? பழுவேட்டரையருக்குப் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது.

ஆனால் பழுவேட்டரையருக்கு நம்பிக்கை குறையவில்லை. இளவரசப் பட்டம் சூட்டப் பெற்ற கண்டராதித்தனால் சோழ நாட்டை ஆள முடியாது என்ற எண்ணம் பழுவேட்டரையருக்கு இருந்தது. அரிஞ்சயனே நாட்டை ஆளப் போகிறான் என்று பழுவேட்டரையர் உறுதியாக நம்பினார்.

பராந்தக சோழ தேவர் இறந்த பின்பு கண்டராதித்தன் சோழ மன்னராக அரியணையில் அமர்ந்த பிறகும் பழுவேட்டரையருக்கு அந்த நம்பிக்கை அகலவில்லை. அரிஞ்சயன் பழுவூரிலேயே வளர்ந்தவன். பழுவேட்டரையர் அவனுக்கு அரசியல் சாத்திரங்

களைக் கற்றுக் கொடுத்தார். யுத்தத்தில் நடந்து கொள்ள வேண்டிய போர்முறைகளின் நுணுக்கங்களையும் போதித்தார்.

மந்திராலோசனை சபைக் கூட்டங்களின் போது பழுவேட்டரையர் வெளிப்படையாகவே கண்டராதித்தன் செயல்களைக் குறை கூறுவார், எதிர்த்துப் பேசுவார். பழுவேட்டரையரின் வாதங்களுக்கு எதிர்வாதம் செய்ய அமைச்சரவையில் அநிருத்தப் பிரம்மராயர் எனும் இளம் வயதினர் இல்லாதிருந்தால் பழுவேட்டரையர் அரசருக்கு எதிராகத் தனக்கு ஆதரவாகக் கட்சி ஒன்றையே சேர்த்திருப்பார்.

கண்டராதித்தன் அரியணை ஏறியபிறகு சோழ நாட்டின் எல்லைகள் குறுகி வருகின்றன என்பது பழுவேட்டரையரின் வாதங்களுள் ஒன்று. "சோழ நாட்டின் நல்வாழ்வையும், அதன் சிறப்பையும் பெருமையையும் விரும்புபவர்களே! நம் கண்ணெதிரே வீரபாண்டியன் தம்முடைய பகுதிகளை மீண்டும் கவர்ந்து கொண்டதைக் கண்டோம். இரட்டநாட்டு மன்னன் கிருஷ்ணதேவன் பெண்ணையாற்றங்கரை வரையில் தனது கொடியைப் பறக்க விட்டிருக்கிறான், என்பது உங்களுக்குத் தெரியுமா? எந்த நேரத்தில் வேண்டும் என்றாலும் இராட்டிரகூடரின் படைகள் சோழ நாட்டிற்குள் நுழைந்துவிடும். நமது மன்னர் அவர்களைத் தடுக்க என்ன திட்டம் வைத்திருக்கிறார்? பாண்டிய நாட்டை வென்று இருமுடி சோழன் என்ற பெயரை அமரர் பராந்தக சோழர் பெற்றார். அவரது திருக்குமாரர் நமது இப்போதைய மன்னர் கண்ட ராதித்தர் அப்பெயரைக் காப்பாற்றவில்லை. படைப் பலத்தைப் பெருக்க வேண்டும் என்று நான் சொன்னால் புதிய கோயில்களைக் கட்ட சிற்பிகளைக் கொண்டு வாருங்கள் என்று கூறுகிறார். அதிகம் குறைகளை எடுத்துக் கூறினால் நான் மன்னருக்கு எதிராகக் கட்சி சேர்க்கிறேன் என்று நீங்கள் குற்றஞ்சாட்டுகிறீர்கள்.

"சோர நாட்டினின்று வில்லவர்களை அழைத்து வந்து அவர்களுக்குப் பழுவூரில் புதுவித அயுதப் பயிற்சிகளை நான் அளித்தால் சுவகஞ்செய்ய முயல்கிறேன என்று சந்தேகப்பட்டு அநிருத்தர் குறை கூறுகிறார்" என்று பழுவேட்டரையர் கூறிவரும்போது அநிருத்தர் அமைதியாகக் குறுக்கிட்டார்.

"பழுவேட்டரையரைச் சந்தேகப்படலாமா? சம்புவரையருக்குத் தோன்றாத யோசனை கொடும்பாளூராருக்கு உதிக்காத திட்டம் பழுவேட்டரையர் மனத்தில் ஏற்படும்போது அவரை நாம் எப்படிச் சந்தேகப்படுவது? அவர்கள் எல்லாம் மௌனமாக இருக்கும்போது பழுவேட்டரையர் தனிப்படைகளைத் திரட்டுகிறார். அதனால் நாம் பழுவேட்டரையரைச் சந்தேகப்படலாமா?" என்று அநிருத்தர் குறும்புத்தனமான புன்னகை உதட்டில் நெளியக் கூறிவரும்போது பழுவேட்டரையர் சீற்றம் அதிகமாகியது.

"அநிருத்த பிரம்மராயரே! உம் பேச்சில் மறைந்திருக்கும் குற்றச்சாட்டினை நான் தெரிந்து கொள்ளவில்லை என்று நினைக்காதீர்கள். சம்புவரையரும், கொடும்பாளூராரும் படைகளைப் பெருக்கவில்லை என்பதற்காக நான் படைகளைப் பெருக்கக்கூடாதா? அநிருத்தர் கூறும் வாதப்படியே பார்த்தாலும் தெற்கிலும் வடக்கிலும் கர்ஜித்துக் கொண்டிருக்கும் விரோதிகளை அடக்காமல் அமைதியுடனிருப்பது விரோதிகளுக்குத் துணைப் போவது போலிருக்காதா? அதனால்தான் நான் முன் எச்சரிக்கையாக இருக்கிறேன். அதில் என் சுய நலமும் இருப்பதை மறுக்கவில்லை" என்று பழுவேட்டரையர் அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

"சுயநலமா?"– பல குரல்கள் சபையில் எழுந்தன. "ஆமாம்" என்று அநிருத்தர் குரல் கொடுத்தார். "நமது மதிப்புக்குரிய மன்னர்

இளவரசப்பட்டத்திற்கு யாரை நியமித்திருக்கிறார். இன்னும் முடிவு செய்யவில்லை. தன் பெயரன் அரிந்தமனுக்கு இளவரசப் பட்டம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்" என்றார்.

சபையில் சிரிப்பும், ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்வதுமாகக் கூச்சல் மிகுந்தது.

அந்தக் கூச்சலையும் மிஞ்சும் குரலில் பழுவேட்டரையர் "ஆமாம், அதில் என்ன தவறு? அரசர் வேறு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறாரா? அமைச்சர்களிடம் ஏதாவது யோசனை இருக்கிறதா?" என்று கேட்டார்.

சபையிலுள்ளோர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சோழ மன்னர் கண்டராதித்தனும் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். ஆமாம் நமக்குப் பிறகு யார்? யாரை நாம் இளவரசராக அங்கீகரிப்பது?

"நல்ல கேள்விதான் சிந்தித்து முடிவு கூறுவதாக" மன்னர் தெரிவித்தார்.

தன் அன்புக்குரியவளும், எந்தவிதச் சிக்கலான பிரச்னைகளுக்கும் தக்க முடிவு கூறுபவருமான பட்டத்து அரசி செம்பியன் மாதேவியாரிடம் இளவரசப் பட்டத்திற்கு யாரை நியமிப்பது என்பதைப் பற்றிக் கேட்டார்.

செம்பியன் மாதேவியார் உடனே மறுமொழி கூறவில்லை. ஏதோ கூற முயன்றார். அவள் முகத்தில் நாணஞ் சூழ்ந்தது.

"இளவரசர் பட்டத்துப் பிரச்சினையைத்தீர்க்க இரண்டே வழி. ஒன்று நமக்கு இன்னும் வயதாகவில்லை. உமாமகேசுவரன் அருள் இருந்தால் நமக்குக் குழந்தை பிறக்காமலா போய்விடும்? எனக்கு

நம்பிக்கை இருக்கிறது. நமது முன்னோர்கள் காலத்திலிருந்து திருமுறைச் சிவத்தலங்களில் தோறும் சென்று இறைவனை வழிபடுவோம். பார்வதி பரமேசுவரரின் அருள் நமக்குப் பரிபூரணமாக உண்டு. அதனால் இளவரசர்ப்பட்டப் பிரச்சனையை எடுக்காமல் இருப்போம்" என்று கூறியதன் சற்று நேரம் கழித்து, "மற்றொரு வழியும் உண்டு. தங்கள் தந்தையைப் போன்று வேறு திருமணம் செய்து கொள்ளுங்கள். அந்தப் பாக்கியசாலிகருள் யாருக்காவது மகப்பேறு எப்படியாவது போய்விடும்" என்றாள். இதைக் கூறும்போது அவள் தலையைக் குனிந்து கொண்டாள். அவளுக்குச் சற்று அச்சமாகவே இருந்தது. சொல்லக்கூடாத எதையாவது சொல்லிவிட்டோமா என்ற கவலையும் இருந்தது. இவ்வளவு தான் கூறியதைத் தன் கணவர் ரசிக்காவிட்டால் என்று தேவியாருக்குத் தெரியும்.

கண்டராதித்தர் ஒருமுறை பழுவேட்டரையரைத் தனியே சந்தித்தபோது செம்பியன் மாதேவியாரின் கருத்தைத் தெரிவித்தார்.

செம்பியன் தேவியாரிடம் உள்ளூர ஒருவித வெறுப்பு பழுவேட்டரையருக்கு இருந்தது. தன் திட்டங்களுக்குச் செம்பியன் மாதேவியாரின் யோசனைகள்தாம் தடைகளாக உள்ளன என்று நினைத்தார் அவர்.

கண்டராதித்தனுக்குச் சிவசிந்தனையைத் தவிர வேறு சிந்தனையே இல்லாதிருக்கும் போது ஆட்சி புரிவதற்கான யோசனைகளையும் வழிமுறைகளையும் செம்பியன் தேவியார் தாம் எடுத்துக்கூறி வருவதாகப் பழுவேட்டரையர் பூரணமாக நம்பினார். அதனால் தேவியிடம் அவருக்கு வெறுப்பும் கோபமும் உள்ளூர ஏற்பட்டிருந்தன.

சோழ நாட்டுத் திருத்தலங்களுக்குச் செல்வதன் மூலம் மக்களிடம் நேர்த் தொடர்பைத் தேவியார் கொண்டிருந்தார். பழுதுபட்டிருந்த கோயில்களைக் கற்றளியாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்தார். மருத்துவ வசதி அளிக்க அறச் சாலைகளைப் பல ஊர்களில் ஏற்படுத்தினார். அதனால் சோழ நாட்டு மக்களுக்குச் செம்பியன் மாதேவியார் மீது மரியாதையும் அன்பும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன.

இதற்கு முன்பு தஞ்சை மாளிகையில் வாழ்ந்த அரசிகளுக்கு அளிக்காத பெரும் மரியாதையைப் பணியாட்களும் அதிகாரிகளும் அளிப்பதும் பழுவேட்டரையருக்கு உள்ளூர எரிச்சலை ஊட்டியது. ஆனால் ஒன்றே ஒன்றுதான் பழுவேட்டரையருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதுதான் திருமணமாகிப் பல ஆண்டுகள் கழித்தும் செம்பியன் மாதேவிக்குக் குழந்தை பிறக்காதது கண்டராதித்தனுக்குப் பிறகு வாரிசு இல்லை என்ற நிலை தன் திட்டத்துக்குப் பெரும் வெற்றியை அளிக்கும் என்று பழுவேட்டரையர் பெரிதும் நம்பினார். அந்தத் திட்டத்தை முறியடிப்பது போல் அல்லவா தேவியார் அரசருக்கு யோசனை கூறியிருக்கிறாள்?

மற்றொரு பெண்ணை மணந்து கொள்வதாம்! கண்டராதித்தனுக்குத் தமது மகளை அளிக்கச் சிற்றரசர்கள் நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். அவர்களில் யாருக்காவது குழந்தை பிறக்காமல் போய்விடுமா? வாரிசு உருவாகி விடும். தன் பெயரன் அரிஞ்சயனுக்கு இந்தப் பிறவியில் சோழ அரியணை கிடைக்காது. பழுவேட்டரையரால் தாங்க முடியவில்லை.

"சக்கரவர்த்திகளே! என்னைப் பொருத்தருளுங்கள். சோழ நாட்டை ஆள்வது இராசகேசரி கண்டராதித்த சோழதேவரா அல்லது மழவர்குலப் பெண் செம்பியன் தேவியா? என்ற சந்தேகம்

வந்துவிட்டது. பல சமயங்களில் தேவியார் தவறாக யோசனையைக் கூறிவிடுகிறார். அப்படியென்றால் அமைச்சரவை எதற்கு? பாட்டா, பாட்டா" என்று அன்புடன் அனைவரும் அழைக்கும் நான்தான் எதற்கு? தங்களை அரசியார் கோழையாக்கி விட்டார்கள். அவரது பேச்சைக் கேட்டு நீங்கள் கருவூலத்திலிருக்கும் செல்வங்களைப் படை பலத்தை வளர்ப்பதற்கு மாறாகக் கோயில்களைக் கட்டுவதற்காகச் செலவிடுகிறீர்கள். சோழ நாட்டு எல்லைகள் குறுகி வருவதற்கும் தேவியார்தாம் காரணமோ? அரசியாக அவர்கள் இருக்கலாம். ஆனால், அவர்களும் ஒரு பெண்தானே!"–என்று பழுவேட்டரையர் கூறியது கண்ட ராதித்தனுக்குப் பெரும் கோபத்தை அளித்தது. அப்போது அவர் தன் உணர்ச்சியை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. மறுநாள் அவரை மீண்டும் வரவழைத்துக் கண்டிக்க விரும்பினார்.

மறுநாள் பழுவேட்டரையர் வந்தார். எப்போதும் சாந்தமே கொண்டு, கோபமே கொள்ளாக் கண்டராதித்தன் முகம் சிவந்திருக்க மிகவும் கடுமையாகப் பேசியது பழுவேட்டரையருக்கே வியப்பாயிருந்தது.

"பழுவேட்டரையர் அவர்களே! இளவரசுப் பட்டம் யாருக்குச் சூட்டுவது என்பதைக் குறித்து நான் முடிவு செய்து விட்டேன்" என்று கூறிப் பழுவேட்டரையரின் முகத்தை ஒரு தடவை நோக்கினார்.

பழுவேட்டரையர் முகத்தில் இருந்த கடுகடுப்பு சிறிதும் குறையவில்லை.

'இது என்ன செய்தி? நான் என்ன சிறு குழந்தையா? உடனே ஆவலுடன் 'யாரைத் தேர்ந்தெடுக்கிறீர்கள்?' என்று கேட்க? எனக்குச் சாதகமான ஒன்றைக் கூறுவதென்றால் அரசர் என்னை

வரவேற்கும் முறையே வேறாக இருக்கும். ஏதோ கபடமான சூழ்ச்சியைச் செய்திருக்கிறார். என்ன சொல்கிறார் பார்ப்போம்' என்று எண்ணிய பழுவேட்டரையர் ஹூங்காரமிட்டுத் தன் உள்ளத்துச் சீற்றத்தைப் புலப்படுத்திக் கொண்டார்.

"என் இளைய சகோதரி வீரமாதேவியை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். என் தந்தை அவளிடம் உயிரையே வைத்திருந்தார் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். நாட்டை இழந்து தன் கணவருடன் தஞ்சைக்கே வந்து சேர்ந்த அந்தத் தூர்ப்பாக்கியவதியை எண்ணி எண்ணி என் தந்தை எவ்வளவு வேதனைப் பட்டார் என்பதும் தங்களுக்குத் தெரியும். அதற்காகப் பெரும் போர் எற்பட்டது. அந்தப் போரில் என் அருமைத் தமையனார் இராசாதித்தன் உயிரிழந்ததும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்" என்று கூறும் போது பழுவேட்டரையர் குறுக்கிட்டு ஏளனம் குரலில் த்வனிக்க, "நான் மறக்க முடியுமா? இராசாதித்தன் இறந்ததால் அல்லவா தாங்கள் சோழ நாட்டு அரசராக முடிந்தது. உம், சொல்லுங்கள்... பிறகு...?" என்றார்

பழுவேட்டரையர் குரலில் இருந்த ஏளனத்தைப் புரிந்து கொண்டார் அரசன். எனினும் அதைப் புரிந்தவர் போல் புலப்படுத்திக் கொள்ளாமல், "பழுவேட்டரையரே! தாங்கள் சொல்வது ஒரு விதத்தில் சரிதான். என் அருமைத் தமையனார் வீரகவர்க்க மடைந்ததால்தான் நான் உடனே இளவரசரானேன். அவருக்குத் திருமணமாகவில்லை. தன் சகோதரிக்கு நல்வாழ்வு அளித்த பிறகே திருமணம் புரிந்து கொள்வதாகச் சபதமெடுத்திருந்தார். அவர் இறந்ததால் அவரது வாரிசாக நான் ஆனேன். என் சகோதரனது கடைசி கால ஆசை என்னவென்று தாங்கள் அறிவீர்களா? வீரமாதேவிக்கு மீண்டும் இராட்டிரகூட நாட்டை மீட்டுத் தருவது; அதற்கு முன்பாக இராட்டிரகூட

நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் சேர்ந்து இணைந்த இளவரசனாக வீரமாதேவியின் புதல்வன் கிருஷ்ணனுக்கு இளவரசுப்பட்டம் சூட்டப்போகிறேன்..." என்று கூறி நிறுத்தினார்.

பழுவேட்டரையர் திடுக்கிட்டார். இப்படி ஆசர் சொல்லுவார் என்று அவர் நினைக்கவில்லை. இது என்ன அக்கிரமம்? கோவிந்தனுடைய புதல்வனுக்கா? சோழ நாட்டை இராட்டிரகூட நாட்டவன் ஆள்வதா? இராட்டிரகூட நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டவனுடைய மகன் சோழநாட்டு இளவரசன் அவதா? நினைக்கவே பயங்கரமாயிருக்கிறதே..

"சக்கரவர்த்தி, என்ன சொல்கிறீர்கள்?" பழுவேட்டரையருடைய குரல் சிங்க கர்ஜனை போலவே இருந்தது.

கண்டராதித்தன் முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டு, "புரியவில்லையா பழுவேட்டரையரே? என் தந்தை தன் கடைசிக் காலத்தில் வீரமாதேவியைக் குறித்த கவலையுடனேயே உயிரை நீத்தார். உங்களுக்கோ என் தந்தையிடம் பக்தி அதிகம். மரியாதை அதிகம். நீங்களோ முன் நின்று வீரமாதேவியின் மகன் கிருஷ்ணனுடைய இளவரசுப் பட்டமேற்பு வைபவத்தைச் சிறப்பாக நடத்திவையுங்கள்" என்றார்.

"என்ன கூறுகிறீர்கள்? இரட்ட நாட்டவனுக்கு இங்கே பட்டத்து உரிமையா? கேட்பதற்கே சங்கடமாயிருக்கிறதே" பழுவேட்டரையர் சலிப்புடன் கூறினார்.

கண்டராதித்தர் மீண்டும் சிரித்தார். "பழுவேட்டரையரே! பொறுமையுடன் கேளுங்கள். வீரமாதேவியும் கோவிந்தனும். இப்பொழுது சோழநாட்டவர்களாகி விட்டார்கள். எனக்குப் பிறகு இராட்டிரகூட நாட்டையும் சேர்த்து ஆளக் கோவிந்தன் மகனுக்கு வசதியாக இருக்கும்"

"ஆஹா! என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள்? நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். மற்ற அமைச்சர்களும் ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்கள். தங்களுக்கு இந்தத் தவறான யோசனையைக் கூறியது யாரோ? அரசியராகத்தான் இருக்கும்..." என்று, பழுவேட்டரையர் வேதனை ஏமாற்றம் கோபம் அனைத்தும் கலந்து கூறும்போது கண்டராதித்தரும் உரத்தகுரலில் "நிறுத்துங்கள், பழுவேட்டரையரே! சொந்தக் கருத்தைத் தெரிவிக்க இயலாதவன் என்று என்னை நினைத்து விட்டீர்களோ? மற்றொரு முறை தேவியார்மீது பழி சுமத்தினால் பிறகு ஏற்படும் விளைவுகளைத் தாங்கள் அனுபவிக்க வேண்டியதுதான்" என்றார்.

பழுவேட்டரையர் விழிகள் சிவந்தன. மீசை துடித்தது. உடைவாளின் மீது கரம் சென்றது.

"இராசகேசரி கண்டராதித்த சோழ சக்கரவர்த்தி அவர்களே! நான் பார்த்து வளர்ந்தவர் தாங்கள். இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியவர்கள் யார் என்பது எனக்குத் தெரியும். இந்தக் கிழவன் பழுவேட்டரையன் உயருடன் உள்ளவரை வீர மாதேவியின் புதல்வனுக்குச் சோழ அரியணையில் இடமளிக்க மாட்டேன். வாரிசு உரிமைக்காகச் சோழ நாட்டில் இரண்டு கட்சிகள் பிரிந்துவிடச் செய்யாதீர்கள்..." என்று கூறித் திரும்பிப் பாராமலேயே மாளிகையை விட்டு, பூமி அதிர நடந்து வெளியேறினார்.

பழுவேட்டரையர் சென்ற உடனேயே செம்பியன் மாதேவியார் கண்டராதித்தன் அருகே ஓடோடி வந்தாள்.

"பழுவேட்டரையர் கேட்டது போல் நானும் கேட்கிறேன். வீரமாதேவியின் புதல்வனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டும் என்ற யோசனையைக் கூறியது யார்? நான் கூறவில்லை. பிறகு யார் கூறினார்கள்?" என்று கவலையுடன் கேட்டாள்.

கண்டராதித்தன் பெரிதாக நகைத்தார். "தேவி! எனக்கு ஒருவரும் இந்த யோசனையைச் சொல்லவில்லை. நானே கற்பனை செய்து கூறியதுதான். என் தந்தை இருந்த போது வீரமாதேவிக்கு நேர்ந்துவிட்ட துயரத்தைத் துடைப்பதற்கு வாளை உயர்த்தியவர் இதே பழுவேட்டரையர். நாடிழந்து வந்த வீரமாதேவியும் கோவிந்தனும் நாட்டற்றவர்கள் தாங்கள் என்ற நினைவே இல்லாமல் சோழ நாட்டில் வாழ வேண்டும் என்று வாதம் புரிந்தவர் இதே பழுவேட்டரையர். பட்டத்து உரிமை என்று வந்தவுடன் தன் பெயரனுக்குப் பட்டம் கிடைப்பதற்குத் தடை ஏற்படுகிறது என்றறிந்தவுடன் அவர் போக்கே மாறுகிறது. சிந்தனையே மாறுகிறது. இப்போது எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. தேவி, வீரமா தேவியின் மகன் கிருஷ்ணனை நாமே கவிகரித்து வளர்த்தால் என்ன? அதற்கு இறைவன் திருவுளம் எவ்வாறு இருக்கிறது என்பதை அறியப் போகிறேன். சிதம்பரம் சென்று நடராசர் சந்நிதியில் தெய்வத்திருவுளம் அறியப் போகிறேன். யாரங்கே? சோதிடரை உடனே அழைத்து வா. சிதம்பரம் புறப்பட நல்ல நளைக் குறிக்க வேண்டும் என்றார்."

தன் கணவர் கூறுவதையே வியப்புடன் கேட்டவாறிருந்த செம்பியன் மாதேவியார் பேச நா எழாமல் தவித்தாள். தன் கணவர் கூறும் யோசனையை அவள் ஏற்கவில்லை என்றாலும் சிதம்பரம் சென்று நடராசர் சந்நிதியில் திருவுளம் அறிய முற்படும் யோசனையை அவள் ஆதரித்தாள்.

தாமும், சிதம்பரம் செல்லப் போகிறோம் என்ற மகிழ்ச்சி அவளுடைய மற்ற கவலைகளை ஓட்டியது.

8. திருவுளம் எப்படியோ?

கண்டராதித்த சோழர், சிதம்பரம் புறப்படுவதற்கான ஆயத்தங்கள் தஞ்சை மாளிகையில் விரைவாக நடைபெற்று வந்தன. அரசருடன் செல்பவர்கள் பட்டியல் உருவாக்கப்பட்டது. யானைகள், குதிரைகள், காவல்வீரர்கள், சமையல் பாத்திரங்கள் பண்டங்கள் சுமக்கும் வண்டி, பரிசாரகர்கள் எனப் பட்டியல் நீண்டது.

அரசி செம்பியன் மாதேவியார் ஆங்காங்கே உள்ள கோயில்களில் வழிபாடு நடத்திய பிறகு கோயில்களுக்கு வேண்டிய பூசை கலங்கள் விளக்குகள், விளக்குகளுக்கு நெய்தரும் ஆடுகள் இறைவன் இறைவிக்கு ஆபரணங்கள் இவற்றைத் தர கருவூல அதிகாரிகள் சிலரையும் தன்னுடன் வர உத்தரவிட்டாள்.

"கல் தச்சர்களையும் அழைத்துச் செல்வோம். சில கோயில்களுக்கு நாம் இறையிலியாக நிலங்கள் சாசனம் செய்வோம். அவற்றை நாம் அளித்ததைக் கல்லில் பொறித்து வைப்போம்..." என்று தேவியார் கூறியதை அரசர் ஆமோதித்தார்.

சிதம்பரம் செல்வதில் அரசர்க்கும் அரசியார்க்கும் மிக ஆனந்தம். கண்டராதித்தர் தன் தந்தையுடன் சிறுவயதில் பல முறை சிதம்பரம் வந்திருக்கிறார். அவரது தந்தை பராந்தக சோழர் தில்லை அம்பலத்திற்குப் பொன்வேயும் திருப்பணி நடத்திய போது கண்டராதித்தன் உடனிருந்திருக்கிறார்.

காலையிலும், மாலையிலும், கதிரவன் தன் ஒளியால் அம்பலத்தைத் தழுவி வணங்கும் போது மிகுந்த ஒளி வீசிப்பிரகாசிக்கும் விமானத்தை மெய்மறந்து ரசித்து மகிழ்ந்திருக்கிறார். சிற்சபையில் ஆடும் கூத்தபிரானின் நடனத்தோற்றத்தில் லயித்திருக்கிறார். காலையிலும், மாலையிலும் எப்போதும் தில்லை அம்பலவாணன் திருவடிவத்தை இதயத்தில் வைத்துப் போற்றித் துதித்தவாறிருக்கும் கண்டராதித்தன், மீண்டும் பொன்னம்பலத்தைத் தரிசிக்கப் போகிறோம் என்ற நினைவுடன் மகிழ்ந்து சிறு குழந்தைபோல் தேவியாரிடம் பேசினார் அவர்.

"எப்போதும் நிரந்தரமாகச் சிதம்பரத்தில் தங்கிவிட வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது" என்று செம்பியன் மாதேவியிடம் கூறினார் அரசர்.

செம்பியன் மாதேவியார் மெல்ல நகைத்து, "எனக்கும் அதே போன்ற ஆசைதான். ஒவ்வொரு கோயிலுக்கும் நாள்தோறும் சென்று இறைவனை வழிபட வேண்டும் என்ற பேரவா. ஒவ்வொரு கோயில் இறைவன் மீதும் ஞானசம்பந்தப் பிள்ளையும் நாவுக்கரசரும், சுந்தரரும் போற்றிப் பாடியுள்ள பதிகங்களைக் கேட்டுப் பரவசமடைய ஆசை. அந்தப் பாடல்கள் எல்லாம் காற்றோடு காற்றாகப் போய்விடக் கூடாது. அவற்றைத் தொகுக்க வேண்டும் என்ற எண்ணம் சமீபகாலமாக என் உள்ளத்தில் ததும்பி நிற்கிறது" என்று தனது உள்ளத்தில் ததும்பிய எண்ணத்தைத் தெரிவித்தார்கள்.

"ஆமாம், ஆமாம், நம்பியாண்டார் நம்பிகள் ஒருமுறை அந்தத் தெய்வமாலையைப் பற்றித் தெரிவித்திருக்கிறார். அடுத்த என் பணி அதுதான். என் வாழ்க்கையின் இலட்சியமே சிவனுறைத் திருத்தலங்களை இப்பூ உலகில் எங்கிருந்தாலும் சென்று

வணங்குவது" என்று உற்சாகம் பொங்கும் குரலில் கூறினார் கண்டராதித்தன்.

"தம்பதியாராகச் சென்று தேவிப்பதுதான் விமோசனம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. எல்லையம்மை உடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள்" என்றாள் செம்பியன் மாதேவியார்.

கண்டராதித்தர் மகிழ்ச்சியுடன் தலையசைத்து, "இப்பொழுது சிதம்பரம் புறப்படுகிறோம். சிதம்பரத்தில் நடராசர் திருப்பாதத்தில் பணிந்து திருவுள நறுக்கோலையை எடுத்துப் பார்க்க வேண்டும். இளவரசராக யாரை நியமிப்பது என்பது முடிவாகிவிட்டால் எனக்குப் பெரிய பிரச்சனை தீர்ந்தது" என்று கூறியவர் சிறிது யோசித்துப் பிறகு, "தேவி! ஒருவேளை வீரமாதேவியின் மகனுக்கு அநுகூலமாக இறைவன் திருவுளமில்லையென்றால்..." என்று தன் கவலையைத் தெரிவித்தார்.

"மாறாக ஏன் நினைக்க வேண்டும்? கிடைக்கும் என்றே நினைப்போம்" என்று மாதேவியார் கூறினாள்.

"பழுவேட்டரையர் திருவுளச் சீட்டை எல்லாம் ஒப்புக் கொள்ள மாட்டார். குழப்பத்தை ஏற்படுத்துவார். வீர மாதேவியின் மகன் இளவரசன் என்றாகி விட்டால் சோழநாடு இரண்டுபட்டுவிடும்" என்று தன் கவலையைத் தெரிவித்தார் கண்டராதித்தர்.

"எனக்குத் தெரிந்ததைச் சொல்லட்டுமா?" செம்பியன் மாதேவி மெல்லிய சிரிப்பு உதடுகளில் நெளியக் கேட்டாள்.

"ஆகா! நன்றாகச் சொல்லுங்கள் தேவி. நீ சொல்வதைத்தான் கேட்பதாக நாடே பேசிக் கொள்கிறதே" என்று கண்டராதித்தர் கூறினார்.

"தில்லை அம்பலவாணர் திருவடிகளில் இரண்டு ஓலை நறுக்குகளைச் சமர்ப்பிப்போம்."

"இரண்டா?"

"ஆமாம். வீரமாதேவியின் மகனுக்கு இளவரசுப் பட்டம் தரலாம்; வீரமாதேவியின் மகன் கிருஷ்ணன் பெயர் மற்றொன்றில் சகோதரர் பெயர்..."

"அரிஞ்சயன் பெயரா?"

"ஆமாம். பழுவேட்டரையரின் ஆசையே தன் பெயரன் சிங்காதனத்தில் அமர வேண்டும் என்பதுதானே? சிவபெருமான் திருவுளம் எப்படியோ அப்படியே நடக்கட்டும்" என்றான் செம்பியன் தேவி.

கண்டராதித்தன் இமைகளை மூடியவாறு, "அம்பலவாணரே! உமது சோதனையோ? உம் சித்தப்படி நடக்கட்டும்" என்று பிராத்தித்தார்.

ஆனால், அம்பலவாணருடைய சித்தம் வேறுவிதமாக இருந்தது.

சிதம்பரத்திற்கு அரசரும், அரசியும் புறப்படுவதற்கு இரண்டு நாட்களே இருந்தன. சிதம்பரம் செல்லும் வழியிலுள்ள திருத்தலங்களுக்கு எல்லாம் செய்தி அறிவித்தாயிற்று.

அன்று காலை விடிந்து பத்து நாழிகைகள் ஆகியிருந்தன. திடீரென மாளிகையில் பரபரப்பு. பாங்கிகள் ஓடிவந்தனர். அந்தப்புர மகளிர் அங்கு மிங்கும் ஓடினர்.

செம்பியன் தேவியார் வழக்கம் போல் எழுந்து நீராடி புதிய மலர்களைத் தானே தொடுத்தெடுத்துப், பூசையறைக்குச் செல்லப்

புறப்பட்டபோது திடீரென மயங்கி வீழ்ந்து விட்டாள். நல்ல வேளையாக உடனிருந்த பாங்கியர் தாங்கிப் பிடித்திராவிடில், தலை அருகிலுள்ள கம்பத்தில் மோதுண்டிருக்கும். பணிப்பெண்கள் தேவியாரை மெல்லத் தூக்கி மஞ்சத்தில் கிடத்தினர். கண்டராதித்தருக்குச் செய்தி சொல்ல விரைந்தனர். அரண்மனை வைத்தியரை அழைத்துவரப் பணி செய்வோர் பறந்தனர்.

செய்தி எங்கும் பரவியது. நகரில் எங்கும் பரவியது. வீதிகளில் பரவியது. வீடுகள் தோறும் பரவியது. வீட்டுத் தலைவர்கள் மாளிகையை நோக்கி விரைந்தனர். வீட்டுத் தலைவிகள் கையைப் பிசைந்தவாறு இஷ்ட தெய்வங்களைப் பிராத்தித்துக் கொண்டனர். உள்ளுக்கும், வெளிக்குமாகக் கவலையுடன் நடந்து கொண்டிருந்தனர்.

நாகு கவலையுடன் அம்மா என்று கூறியது. சுகர் அங்கும் இங்கும் பறந்து சென்று கவலை மொழி பேசியது.

மருத்துவர் வந்தார். அந்தக் கூடத்தின் திரைச் சீலைகளை விலக்கி நன்றாக வெளிச்சம் வரவும், தூய காற்று வீசவும் வழி செய்தார். மூலிகை வேரொன்றை எடுத்துத் தேவியின் நாசி அருகில் மெல்ல நீட்டினார். மஞ்சத்தில் கிடந்த தேவியாரின் நாடியைப் பிடித்துப் பார்த்தார்.

கண்டராதித்தன் தேவியின் முகத்தைப் பார்ப்பதும், வைத்தியர் ஏதாவது சொல்கிறாரா என்று அவரை நோக்குவதுமாகக் கவலையுடனிருந்தார்.

மாளிகையின் வெளியே மக்கள் ஆவலுடன் காத்திருந்தனர். அமைச்சர்கள் மண்டபத்தில் கூடிவிட்டனர்.

"நான் நேற்றுக் கூடத் தேவியாரைப் பார்த்தேனே; மகிழ்ச்சியுடனிருந்தார்களே...?"

"காலையில் நீராடப் போகும்போது பார்த்தேனே. தெம்புடனிருந்தார்களே..."

"பூசைக்கு வேண்டிய மலர்களைப் பறித்து வந்து தந்தபோது பார்த்தேனே. அரசி உடல் ஆரோக்யத்துடனிருந்தது பற்றியும் திடீரென மயங்கி விழுவதற்கு எந்தவிதக் காரணமுமில்லை என்பதையும் கவலையுடன் தெரிவித்தார்கள்.

அரண்மனை வைத்தியர் அநுபவம் வாய்ந்தவர். சோழ அரச குடும்பத்தினரிடம் மதிப்பும் அன்பும் கொண்டவர். தெய்வ பக்தி மிகுந்தவர். தேவியார் மயக்கமடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டவுடன் அவர் சிவிகையோ, ரதமோ, எதும் எதிர்பாராமல் ஓடோடி வந்தார். அவரது சீடன் மூலிகைகள், சூரணங்கள் நிறைந்த கைப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தான்.

வைத்தியர் முகத்தில் கவலைக் கோடுகள் மறைந்தன. தேவியார் மெல்லக் கண்களைத் திறந்தார்.

"நமசிவாய; நமசிவாய" என்று கண்டராதித்தன் சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார். வைத்தியர், மன்னர் அருகே வந்தார். புன்முறுவலுடன் அவரது இரு கரங்களையும் பிடித்துக்கொண்டார். "இராசகேசரி கண்டராதித்த சோழ மாமன்னர் வாழ்க! அவரது சிறந்த ஆட்சி நீடித்து விளங்குவதாக. அவரது திருப்பெயரை என்றும் கூறும் வண்ணம் அவர் பரம்பரை என்றும் சோழ நாட்டை ஆள்வதாக" என்று வாழ்த்துக் கூறிவிட்டு "அரசே! கவலைப் பட வேண்டாம்! நல்ல செய்தியைச் சொல்லப் போகிறேன்" என்று பெருமகிழ்ச்சியுடன் கூறியபோதுதான் கண்டராதித்தன் முகமும் மலர்ந்தது.

"சோழ சக்ரவர்த்தி அவர்களே! பரகேசரி விஜயாலய சோழ தேவர் பரம்பரை நீடித்து விளங்கப் போகிறது.

"காவிரிக் கரை எங்கும் சிவபெருமானுக்குத் திருக்கோயில்கள் எடுத்த இராசசேகர் ஆதித்த சோழன் திருப்பெயர் நீடித்துக் கூற வாரிக பிறக்கப் போகிறது.

"வீர சோழன் பண்டிதவற்சலர் இருமுடி சோழன் என்று புகழ்ப் பெயர் பெற்ற தங்கள் தந்தை பரசேகரி பாரந்தக சோழரின் பெயர் விளங்கத் தங்களுக்குத் திருக்குமாரன் பிறக்கப் போகிறான்.

பூர்வ ஜென்ம புண்யத்தால் சிவநாமத்தைச் சிந்தையில் என்றும் மறவாத சோழர் குலத்திலகம் அரசியார் செம்பியன் மாதேவியார் திருவயிற்றில் சிவனருளால் இளவரசர் உதயமாகி விட்டான்..." என்று கூறி மெல்ல நிறுத்தியவுடன் கண்டராதிதர் பரவசமடைந்தார். அவர் விழிகளிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. அவருக்குச் சொற்கள் வரவில்லை.

மேலே பூசை மண்டபத்திற்குச் சென்றார். "நிற்றம்பலவாணா! சபேசா! ஆனந்த தாண்டவமிடும் அரசே! சோழர் குலத்தைத் தோன்றாத் துணையாயிருந்துக் காத்து ரட்சிப்பவரே! குலம் விளங்க அருள்பாலித்திடுவீர் என் ஐயனே! என்று மனம் உருக வேண்டினார்.

நகரெங்கும் இதே பேச்சு. எங்கும் விழாக்கோலம். பழுவூரிலிருந்த பழுவேட்டரையருக்கும் செய்தி போயிற்று. அரிஞ்சயன் மிக மகிழ்ச்சியடைந்தான். தன் சகோதரருக்குப் பாராட்டுதல் தெரிவிக்க உடனே தஞ்சை செல்லவிரும்பினான். அவனைப் பழுவேட்டரையர் தடுத்து நிறுத்தினார்.

அவனைச் சுட்டெறிப்பவர் போல் நோக்கி, "உனக்குப் போட்டியாக உன் சகோதரனுக்கு ஒரு ஜீவன் உதயமாகப் போகிறது. அதற்காக நீ வருத்தப்படாமல், பாராட்டுத் தெரிவிக்க தஞ்சை செல்ல விரும்புகிறயா?" என்று கடிந்து கொண்டார்.

அரிஞ்சயன் மெல்ல நகைத்தான். அந்த நகைப்பில் தன் பாட்டனாரை ஏளனம் செய்யும் குரலிருந்தது. "பாட்டா! தங்கள் உள்ளம் எனக்குப் புரிகிறது. என் சகோதரர் கண்டராதித்தரின் மனமும் நான் அறிவேன். அவர் சொன்ன சொல் மாறாதவர். ஆனால் எனக்கு ஆண்டவன் அருளும் பூர்வ ஜென்மப் புண்ணியம் இருக்க வேண்டுமே!" என்றார்.

பழுவேட்டரையருக்குப் புரியவில்லை. அரிஞ்சயன் விளக்கினான். "தாத்தா! என் சகோதரர், சோழ அரசர் நற்குண சீலர் சொன்ன சொல் மாறாதவர், எனக்கு இளவரசப் பதவி தருவதில் அவருக்கு ஆட்சேபணையில்லை. இன்னும் சொல்லப் போனால் அரசியாருக்கும்! எள்ளளவும் ஆட்சேபணையில்லை. திருஉள நறுக்கோலை எழுதி தில்லை அம்பலவாணர் திருவடியில் சமர்ப்பித்து, எந்த ஓலையைத் தில்லை வேதிய முனிவர் எடுக்கிறாரோ அந்த ஓலையில் கண்டுள்ளவருக்கு இளவரசப் பட்டம் சூட்டப்போவதாக முடிவு செய்துள்ளார். இரண்டு ஓலைகளுள் ஒன்றில் என் பெயரும் ஒன்று. ஆண்டவன் அருள் இருந்தால் என் பெயர் ஏற்கப் படுமானால் நான் சோழ நாட்டு இளவரசர்" என்றான் அரிஞ்சயன்.

பழுவேட்டரையர் தலையசைத்தார். "உன் பெயரும் கிடையாது. இந்த இரட்ட நாட்டு அனாதைப்பயலின் பெயரும் கிடையாது. கண்டராதித்தன் ஏன் திருவருள் உள்ளம் அறியச் செய்ய வேண்டும். சோழர்க்குலம் விளங்க அவருக்கு ஒரு மகவு பிறக்கப்போகிறது. இனி உன் சகோதரருக்கு மற்றொருவர் ஆதரவும் தேவையில்லை..." என்று சோகப் பெருமூச்சுடன் கூறினார்.

"அதுதான் இல்லை. மன்னர் சிதம்பரம் செல்வது உறுதி. இறைவன் திருபாதத்தில் திருஉளச் சீட்டு எழுதிப்போடுவது

நிச்சயம். அதில் என் பெயர் இருப்பதும் உறுதி. அரசர் சொன்ன சொல் மாறமாட்டார்" என்று உறுதியாகக் கூறினான் அரிஞ்சயன்.

கண்டராதித்த சோழர் முன்பே முடிவு செய்தபடி சிதம்பரம் புறப்படுவது உறுதியாகி விட்டது. செம்பியன் தேவியார் மயக்கமுற்றது அவர் கருவுற்றதன் எதிரொலிதான் என்பதை அறிந்த மன்னர் இறைவனை வாழ்த்தி, அதற்காகச் சிறப்புப் பூசைகள் செய்ய அசவசியம் சிதம்பரம் செல்ல வேண்டும் என்று முடிவு செய்து விட்டார். அவருடன் செல்ல செம்பியன் தேவியாருக்கு அனுமதி தர வைத்தியர் சம்மதிக்க வில்லை. இன்னும் தொண்ணூறு நாட்கள் ஓய்வுடனிருக்க வேண்டும் என்றும் தெரிவித்து விட்டார். சிதம்பரம் பயணத்தை நிறுத்த வேண்டாம் என்றும் சிதம்பரம் சென்று ஆண்டவனைத் தொழுது வருமாறும் அரசியார் சொல்லி விட்டார்.

தேவியாரின் பொலிவு மிகுந்த திருமுகத்தை மெல்ல ஒரு முறைத் தடவி, "அடுத்த தடவை சிதம்பரம் பயணம் மிகச் சிறப்பாக இருக்கும்" என்றார்.

"மூவராகச் சென்று தன்னைத் தரிசிக்க வேண்டும் என்பது இறைவனின் திருஉள்ளம் போலும்" என்றாள் தேவி மெல்லப் புன்னகைத்து.

கண்டராதித்தருக்கு முதலில் புரியவில்லை. "நம்முடன் இளவரசரும் வரவேண்டாமா?" என்று தேவி கேட்டவுடன் அவர் புரிந்து கொண்டார்.–

சிறு குழந்தை போல் கைகொட்டிச் சிரித்து, "உன் வயிற்றில் வளருவது இளவரசர் தான் என்பதை உறுதி செய்து கொண்டு விட்டாயா?" என்று கேட்டார்.

"போன்புமிக்க பிராணா நாதரே! சோழ நாட்டு மாமன்னரே! என்னுடைய பிரார்த்தனை, வேண்டுதல் வீண் போகாது. ஈசன் நமக்கு நல்ல புத்திரன் அருள்வான். நம் குலப்பெருமை விளங்க வைக்க அவனைச் சிவநேச செல்வனாக வளர்ப்பேன். தங்களைப் போல் அன்பும், பக்தியும், வீரமும் நிறைந்தவனாக வளர்ப்பேன். சிவபெருமான் அருள் நிச்சயம் உண்டு" என்று தேவி கூறும்போது அவர் கண்கள் பனித்தன. உணர்ச்சி வசப்பட்டார்.

தேவியாரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டவன் பழுவேட்டரையரின் அந்தரங்கத்திற்குப் பாத்திரமானவன் என்பதும், பேழையிலுள்ள ஓலை நறுக்குகள் இரண்டிலும் அரிஞ்சயன் பெயரையே எழுதி வைத்துவிட்டான் என்பது சோழ மன்னர் கண்டராதித்தர் அறிய நியாயமில்லை.

9. இசைக்கு என் உயிர்

சிதம்பரம்–தில்லை அம்பலம் என்று புகழ்பெயர் கொண்ட தில்லைச் சிற்றம்பல நகரத்திற்குள் இராசகேசரி கண்டராதித்த சோழர் கம்பீரமாகப் பிரவேசித்தார்.

நகரெங்கும் விழாக்கோல வைபவத்துடன் கோலாகலமாக விளங்கியது. ராஜபாட்டை எங்கும் மாவிலைத் தோரணங்கள் பசுமையாக அசைந்தன. வீட்டு வாயிலில் புதுக்கோலமிட்டு மாதர்கள் ஆர்வத்துடன் காத்திருந்தனர். மாடத்தின் மீதிருந்து மலர் தூவி வரவேற்க மங்கை நல்லார் காத்திருந்தனர்.

சின்னஞ் சிறுவர்கள் புது ஆடை உடுத்தி அரசர் திருமுகங்காணக் காத்திருந்தனர்.

வயதானவர்கள் தோள்களின் மீது சில பாலகர்கள் அமர்ந்திருந்து ராஜபவனியை எதிர்நோக்கியிருந்தனர்.

அருகில், எட்டிய தொலைவிலுள்ள கிராமங்களிலிருந்து மன்னரைக் காண மக்கள் வந்த வண்ணமிருந்தனர்.

சந்திரங்களில் வருபவர்களுக்கு இல்லை எனாது சோறு போட எப்போதும் அண்டாக்களில் சோறு கொதித்துக் கொண்டிருந்தது.

யானைகள் அசைந்து வந்தன. யானை மீது புலிக் கொடி பிடித்த வீரர்கள் அமர்ந்திருந்தனர்.

குதிரைகள் மீது வேலாயுதம் தாங்கிய வீரர்கள் கம்பீரமாக ஆரோகணித்து வந்தனர்.

சித்திரத்தேரினில் இராசகேசரி கண்டராதித்தர் திருநீற்றுத் திருச்சின்னத்துடன் குங்குமப் பொட்டுத் துலங்க கம்பீரமாக அமர்ந்திருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு தன் தந்தை பராந்தக சோழ தேவருடன் தில்லை அம்பலத்திற்குப் பொன்வேய்ந்த பணியைக் காண வந்திருந்தபோது அவரைக் கண்டவர்கள் இப்போது சிவப்பழமாக, சோழர்களின் பரம்பரை மகுடத்துடன் அரசகளையுடன் சற்று முதுமையுடன் மாறுதலுடன் தோற்ற மளிப்பதைப் பார்த்துச் சற்று வியப்படைந்தார்கள்.

அரசருடன் அரசியும் வரவில்லை என்று அறிந்தபோது மக்கள் சற்று ஏமாந்தார்கள். ஆனால், காரணமறிந்தபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

"இராச கேசரி கண்டராதித்த சோழ தேவர் வாழ்க, வாழ்க!" என்று ஒவ்வொருவரும் குதூகலத்தால் கோஷமிட்டனர்.

கண்டராதித்தர் சிதம்பரத்திற்கு வந்து சில வருடங்களாகிவிட்டன. தொலைவிலிருந்தே திருச்சிற்றம்பல விமானத்தை முதலில் தரிசித்து, "சிவசிவ" என்று மனத்திற்குள்ளேயே துதித்துக் கொண்டார்.

நகர்வலம் வந்து ஊர்ப் பிரமுகர்களைச் சந்தித்து உரையாடி நாட்டு வளப்பும் விசாரித்து நாடுகாவல் தலைவர்களுடன் கலந்துபேசிக் கொண்டிருந்த அரசருக்கு உடனே நடராஜர் தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஆவல் மிகுந்திருந்தது.

சபாநாயகரை உடனே தரிசிக்க விரும்பியதால் கோவிலில் வரவேற்பிற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடக்கத் தொடங்கின.

காலையிலேயே திருப்பள்ளி எழுச்சி பாடக் கூத்தன் வரவில்லை. "கூத்தன் எங்கே, கூத்தன் எங்கே" என்று ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டனர் ஆனால் விடை கூற ஒருவருக்கும் தெரியவில்லை.

"என்ன இப்படிச் செய்து விட்டானே கூத்தன். இனிய குரலுடன் இன்பத் தமிழில் பாடுவதை அரசர் கேட்டால் மிக மகிழ்வாரே..." என்று கவலையுடன் அனைவரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர்.

"அரசரிடம் பாராட்டுதல் பெறாமல் எங்கே போய்விட்டான் கூத்தன்?" என்று உண்மையில் வேதனையடைந்தனர் சிலர்.

"விடி காலையில் கொள்ளிடத்தில் குளிப்பதற்குப் புறப்பட்டுச் சென்றதை நான் பார்த்தேன். பிறகு நான் கவனிக்கவில்லை" என்று கவலைதரும் செய்தியை ஒருவர் தெரிவித்தார்.

கூத்தனைப்பற்றிக் கவலைப்பட ஒருவருமில்லை. இடது காலைத் தூக்கி ஆடும் அம்பலவாணருக்குத்தான் தெரியும், கூத்தனைப் பற்றி.

இல்லை... இல்லை... உதயனுக்கும் தெரியும். மது வனருக்குத் தெரியும், கூத்தன் எங்கே என்று.

மலர் மங்கையின் பலத்த தள்ளலால் நிலை குலைந்து புதரில் வீழ்ந்த கூத்தன் உடலெங்கும் முட்கள் கீறி இரத்தம் கசிந்தது. மலர்மங்கை வேகமாக ஓடிக் குடிலையடைந்தாள்.

கூத்தன் விடவில்லை. அவளைப் பின்தொடர்ந்து ஓடினான். ஒருவித வெறி அவனுள்ளத்தே பூதாகாரமாக எழுந்து விட்டது.

மலர்மங்கை ஓடிச் சென்று குடிலின் கதவைத் தாளிட்டுக் கொண்டாள். கூத்தன் இனி வரமாட்டான் என்று அவள் நினைத்து களைப்பும், சோர்வும், அதிர்ச்சியும், ஆத்திரமும் மேலோங்கத் தரையில் படுத்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம், கதவு படபடவென்று தட்டப்பட்டது.

"மங்கை கதவைத்திற கதவைத் திற..." என்று கூத்தன் ஆவேசத்துடன் கூவினான்.

மங்கை பல்லைக் கடித்துக் கொண்டாள். தட்டட்டும்... தட்டட்டும். கை நோவும் வரை தட்டட்டும், என்று மறுமொழி பேசாமல் திரும்பி முகத்தை மூடிப் படுத்துக் கொண்டாள். இரண்டு காதுகளிலும் வெளிச் சப்தம் கேட்காமலிருக்கத் துணியைத் திணித்துக் கொண்டாள்.

"மங்கை! கதவைத் திற, இல்லாவிட்டால் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்துவிடுவேன். நான் பழைய சாதுவான கூத்தனில்லை. என் வெறியைக் கிளப்பிவிட்டு விட்டாய். மூர்க்கத்தனம் உச்சி மண்டையை உடைத்து வெளியே வரும் போலிருக்கிறது. உன்னை ஒரு தடவையாவது அணைத்துக்

கொள்ளாமல் போகமாட்டேன். மங்கை, கதவைத் திற..." – கூத்தனின் குரல் அந்த அமைதியான இடத்தையும் கலக்கியது.

மங்கை கதவைத் திறக்கவில்லை. கூத்தனின் பலத்த தட்டுதலால் நிலைவாசல் ஆடியது. அவன் கை சிவந்தது. முகம் சிவந்தது. உள்ளம் தணலாய்ச் சிவந்தது.

இப்போது உதயனும் மதுவனரும் அங்கே வந்து விட்டனர். சற்று மறைந்து நின்று என்ன நடக்கிறது என்று பார்க்க விரும்பினர்.

கூத்தன் இன்னும் கதவைத் தட்டிக் கொண்டே இருந்தான்.

"மங்கை, நான் உன்னை அடையாமல் திரும்பிப் போக மாட்டேன். கதவை உடைத்து விடுவேன். அல்லது கூரை மீதேறிப் பிரித்து உள்ளே குதிப்பேன்" – கூத்தன் கூவினான்.

இப்பொழுது, உள்ளே இருந்த மங்கை சற்று நடுங்கினாள். எழுந்து உட்கார்ந்தாள். கூத்தனின் கூக்குரல் அதிகமாகியது.

"கூத்தா... மரியாதையாகப் போய்விடு. அவர்கள் வந்தால் உனக்கு ஏற்ற மரியாதை கிடைக்கும்" –மங்கை உள்ளே இருந்து கூவினாள்.

கூத்தன் ஆத்திரத்தால் பயங்கரமாகச் சிரித்தான். மெல்லிய குரலில் பாடல்களைப் பொழியும் அவன் இரைக்காகக் காத்திருக்கும் புலியானான்.

"நான் போகமாட்டேன். யார் வந்தாலும் எனக்குப் பயமில்லை. நீ யாரைச் சொல்கிறாய் என்று எனக்குத் தெரியும். அவர்களுடைய இரகசியங்கள் எனக்குத் தெரியாது என்று நினைக்காதே... ஒரு நொடியில் அதிகாரிகளிடம் சொல்லிவிடுவேன்" –கூத்தன் கூவினான்.

மங்கை எழுந்து உட்கார்ந்து கொண்டாள். "கூத்தா... மரியாதையை இழக்க விரும்பாதே. என் குரு என்பதற்காக உன்னைச் சும்மா விடுகிறேன். இல்லாவிடில் அங்கேயே உன்னை..." மங்கை பல்லைக் கடித்தாள்.

"நான் இறந்துவிடுவேன் என்றெண்ணிப் பாறையின்மீது தலை மோதுமாறு என்னைத் தள்ளினாய். என் ஆயுள் கெட்டி. உன்னைக் கல்யாணம் செய்து கொண்டு பல ஆண்டுகள் ஜீவித்திருக்க ஆண்டவன் திருவுளம் இருக்கிறது. உன்னால் ஏதும் செய்ய முடியாது... கதவைத்திற, தாமதப்படுத்தாதே..." கூத்தன் காலால் கதவைப் பலங்கொண்ட மட்டும் உதைத்தான்.

மங்கை கதவருகே வந்தாள்.

"கூத்தா... மனிதர் தேவாவதற்கான பாடல்களைப் பாடுகிறாய். ஆனால் நீ மிருகமாகிக் கொண்டு வருகிறாய். மிருகத்தை வேட்டையாட இரண்டு வேடர்கள் வந்துவிடுவார்கள். உன்னைக் கிழித்து மாலையாகப் போட்டுக் கொள்வார்கள். ஊர் சிரிப்பதற்கு முன்பு போய்விடு... கூத்தா... என் குருநாதர் என்பதால் மிகவும் மரியாதையும் பணிவும் மிகக் கேட்டுக் கொள்கிறேன்."

"என்னைப் பார்த்தா ஊர் சிரிக்கும். உங்களைப் பற்றித்தான் ஊர் சிரிக்கப்போகிறது. மங்கை! உங்கள் சதித்திட்டம் எனக்குத் தெரியாது என நினைக்காதே. உனக்காக, உதயனும் அந்த மதுவணரும் கொண்டுள்ள சதித் திட்டங்களைப் பொறுத்துக் கொள்கிறேன். நீ கதவைத் திற... உன் விழியால் என்னை ஒரு தடவைப் பார். என் உடல் முழுவதும் வடியும் குருதியை உன் மென் விரல்களால் துடைத்து எடு... உனக்கு வேண்டியவற்றைச் செய்வேன். அந்தச் சதிகாரர்களிடமிருந்து உன்னை மீட்டுப் பாதுகாப்பேன்." கூத்தன் கதவை ஒங்கி உதைத்தான். கதவு

பிளந்தது. கூத்தன் உள்ளே திறந்த பகுதி வழியே நுழைய எத்தனிக்கையில் உதயன் பாய்ந்து வந்து கூத்தனைப் பிடித்துக் கொண்டான்.

உடலெங்கும் முட்கள் கீறியதால் ஏற்பட்ட ரணமும் பசியும், களைப்பும், ஏமாற்றமும், கோபமும் கதவில் பலமாக மோதியதால் ஏற்பட்ட அதிர்ச்சியும் ஒன்று சேரத் துவண்டு கீழே விழ இருந்த கூத்தனை உதயனும் மதுவணரும் தாங்கிப் பிடித்துக் தூக்கிக் கொண்டு மரங்களடர்ந்த இடத்தின் மறைவிற்குக் கொண்டு சென்றனர்.

அதற்குப் பிறகு கூத்தன் அங்கு வரவில்லை. நெடுநேரமாகியும் நடுக்கம் குறையாமல் நின்று கொண்டிருந்த மலர்மங்கையை அங்கே வந்த உதயன் தேற்றினான்.

"கவலைப்படாதே, மங்கை. நாளை நடராசரைத் தரிசிக்க ஆசர் கோயிலுக்கு வருகிறாராம். அவர் எதிரே நீ பாடுகிறாய். தைரியமாகப் பாடுகிறாய்..." என்றான்.

மங்கையின் பயம் தீரவில்லை. "மங்கை, பயப்படாதே. இனிக் கூத்தன் இங்கே வரமாட்டான்" என்றான்.

ஏன் என்று கேட்பது போல் மங்கை விழிகளை அகல விரித்து நோக்கினாள். அவளுக்குப் பயம் நீங்கவில்லை.

"ஆமாம், கூத்தன் இந்தச் சிதம்பரத்தை விட்டே ஓடிப்போய்விட்டான். உன்னை மறப்பதற்காக ஆயிரம் பொன் அவனுக்குக் கொடுத்து விட்டோம்" என்று மதுவணர் கூறினார்

மங்கை மெல்லச் சிரித்தாள். "என் விலை ஆயிரம் பொன்தானா?" என்று கேட்டாள்.

"அவன் வரையில் அதுவே அதிகம். உன் விலை எவ்வளவு என்று எங்களுக்குத் தெரியும். உன்னுடைய மதிப்புக்கு விலையாக இந்தச் சோழ நாட்டை அளிக்கலாம்" என்று கூறி மதுவணர் சிரித்தார். அந்தச் சிரிப்பிலே பயங்கரம் புதைந்திருந்தது.

மறுநாள் சோழச் சக்கரவர்த்தி சபாநாயகர் சந்நிதிக்கு வரும்போது மங்கை என்னென்ன செய்ய வேண்டும்; எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று உதயன் சொல்லிக் கொடுத்தான்.

"மங்கை! மிக அருமையான வாய்ப்பு, நழுவ விடாதே. உன்னால் தான் இராட்டிரகூட நாடு வெல்ல வேண்டும். நமத அரசர் கிருஷ்ணதேவர் சோழ நாட்டையும் சேர்த்து ஆள வேண்டும். சோழ அரசரின் மனதைக் கவரும் வகையில் நீ நடந்து கொள்ள வேண்டும்" என்று மதுவணர் உபதேசித்தார்.

உதயனும், மதுவணரும் காலையிலேயே சோழ சக்கரவர்த்தியின் பட்டணப் பிரவேசத்தைக் கண்டனர். வீதியின் ஓரமாக நின்று கொண்டு, இரதத்தில் பவனிவரும் அரசரைக் கண்டனர். மக்களின் ஆரவாரமும் வாழ்த்தொலியும், மலர்த்தூவலும் அவர்கள் உள்ளத்தில் எரிச்சலை ஊட்டின. அவற்றை வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை.

சோழ மாளிகையில் சக்காவர்த்தி ஓய்வு எடுத்துக் கொள்ளும் இடத்தைக் கண்டறிந்து, அங்கு நுழை வாசல், அரசர் தங்கும் அறை, பாதுகாப்பு முறைகள் அனைத்தையும் தெரிந்து கொண்டனர். பிறகு மங்கையை அழைத்து வர விரைந்து வந்தனர்.

"மங்கை, மங்கை! நேற்று நான் சொன்னது போல் மிக மிக அருமையான வாய்ப்பு.... சந்நிதியில் பாடுவதற்கு இன்று உன்னை விட்டால் வேறு யாரும் இல்லை" என்றார் மதுவணர்.

மங்கை புரியாமல் அவரை நோக்கினாள்.

"ஆமாம் மங்கை! கூத்தனைக் காலையிலிருந்தே காணவில்லை. அவன் நிஜமாகவே ஊரைவிட்டு ஓடிவிட்டான்" என்றான் உதயன்.

மங்கை திகைத்தாள். நிஜமாகத்தானா? கூத்தன் காலையில் திருப்பள்ளியெழுச்சி பாடச் செல்லாத நாளே கிடையாதே. அவர் பாடலைக் கேட்காமல் நடராஜர் துயில் எழுந்திருக்க மாட்டாரே" என்று கவலையுடன் கேட்டாள் மங்கை.

"ஆமாம், ஆமாம். தேவி சிவகாமி அம்மை எழுப்பிக் கூட நடராஜர் எழுந்திருக்கவில்லையாம். பிறகு தில்லை வாழ் அந்தணர்கள் பள்ளியெழுச்சி பாடியதும், அபஸ்வர கீதம் தாங்காமல் அவர் துள்ளி எழுந்து அவர்கள் வாயை மூடி விட்டுச் சபைக்கு ஓடிவிட்டாராம் நடராஜர்" என்று நகைச்சுவையுடன் தான் பேசிவிட்டதாக எண்ணித் தானே பெரிதாகச் சிரித்துக் கொண்டான் உதயன்.

மங்கை யோசித்தாள். கூத்தனுடைய வக்கிரமான பத்தினியைக் கண்டால்தான் அவளுக்குப் பிடிக்கவில்லையே தவிர, கூத்தனின் திறமை, குரல் நயம், பக்திப் பரவசம் யாவும் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தன. என்றாலும், அவளுடைய குருநாதரை அவளால் அலட்சியம் செய்துவிட முடியுமா?

கூத்தன் ஊரைவிட்டு ஓடி விட்டதாகவே அவள் எண்ணினாள். அப்படியெல்லாம் பொன்னுக்கு ஆசைப்பட்டு இலேசில் ஊரை விட்டுக் கூத்தன் ஓடிவிடக் கூடியவன் அல்லன் என்பதை அவளால் சிந்தித்து உணர முடியவில்லை.

மலர்மங்கை நம்பியது போல் கூத்தன் ஊரைவிட்டு ஓடவில்லை. கூத்தனை இனியும் வெளியே நடமாட விட்டால்

ஆபத்து என்பதை உதயன் உணர்ந்து கொண்டான். இருள் பிரியாததன் முன் கூத்தன் எழுந்து நீராடக் கொள்ளிடம் செல்லும் போது அவனைத் தொடர்ந்து ஓர் உருவம் சென்றது.

கொள்ளிடத்தில் ஊற்று எடுத்து, கூத்தன் அமிழ்ந்துக் குளித்தபோது எழுந்திருக்க முடியாமல் அழுத்தி முச்சுத்திணற வைத்த பிறகு அவன் இறந்து விட்டதாக முடிவு செய்து கூத்தனைத் தூக்கிச் சென்றது. நாணல் புதர்களுக்கிடையே கூத்தனை வீசிவிட்டு "இனிக் காண்பவர் யார்?" என்று அந்த உருவம் திரும்பியது.

"எல்லாம் நலமே முடிந்ததா?" என்று மதுவனர் கேட்கவும் தலையை அசைத்தான் உதயன் மகிழ்ச்சியுடன்.

"இனி மங்கை அரசர் அபிமானத்தைப் பெற அவர் எதிரில் பாட வேண்டியது தான்..." என்றார் மதுவனர்.

"ஆம்" என்று தலையை அசைத்தான் உதயன்.

உச்சிகால பூஜை மணி ஓசை அலைஅலையாக எழுந்து சிதம்பரம் நகரெங்கும் பரவியது. கண்டராதித்த சோழர் தன் பரிவாரங்களுடன் முன்னதாகவே கோவிலுக்கு வந்து ஒவ்வொரு சந்நிதியாக வணங்கித் துதித்து நடராசர் எதிரே மெய்மறந்து நின்றார்.

சிறப்பு அபிஷேக ஆராதனைகள் முடிந்தவுடன் பதிகங்கள் பாட வேண்டுமே. என்ன செய்வது என்று ஒருவரை ஒருவர் கவலையுடன் பார்த்துக் கொண்ட நேரத்தில் முதிய அந்தணர் மண்டபத்திற்கு அருகே நின்றிருந்த மலர்மங்கையைப் பார்த்து விட்டார். அவர் முகம் மலர்ந்தது.

மலர்மங்கை அழைக்கப்பட்டாள். வாத்திய கோஷங்கள் நின்றன. மெய்ம்மறந்து நடராசரை தியானித்துக் கொண்டிருந்த கண்டராதித்தர் செவியில் இனிய இசை வீழ்ந்தது.

இசை, அரசரைத் தெய்வத்தின் திருவடிக்கருகே கொண்டு நிறுத்தியது. நடராசரின் நடன சிங்காரத்தைக் காணச் செய்தது. சபாபதியின் கொவ்வைச் செல்வாயைக் கண்டு மகிழச் செய்தது. குனித்த புருவத்தைக் கண்டு ஆனந்திக்கச் செய்தது. குமிழ்ச் சிரிப்பைக் கண்டு பேரானந்தத்தில் வியக்கச் செய்தது. நடராசரின் கால் சலங்கை ஒலி கேட்டது. கையில் உள்ள உடுக்கை ஒலி கேட்டது–

"அம்பலவாணா, அம்பலவாணா, ஆனந்தக் கூத்தாடும் சபாபதே" என்று மெய்யுறுகப் புலம்பினார். அவர் விழிகளிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. அவர் மெய் சிலிர்த்தது. இரு காங்களையும் தலைக்குமேல் தூக்கிக் கூப்பி "அம்பலவாண, ஆடவல்லரே, அம்பலத்தரசே! சோழ நாட்டைக் காப்பாற்று... உன் திருவடியின் நினைவு மாறாமல் என்றுமே நின்னை சிந்திக்கும்படி கருத்தினில் நிலைத்திருக்க அருள் புரிவாய்..." என்று உருகி வேண்டினார்.

மீண்டும் மேளச் சப்தம் முழங்கியது. மணிஓசை கேட்டது. வீணையுடன் குழல் ஒலித்தது. அகண்டதீப ஆராதனை நடந்தது. அற்புதமக இசைத்தவர் யாரென்று திரும்பிப் பார்த்தார் கண்டராதித்தர்.

உள்ளம் உருகப் பாடிய மலர்மங்கை கண்களில் நீர் வழிய நின்று கொண்டிருந்தாள்.

33384

10. ஒற்றைக் கொன்றை மலர்

உதயனும், மதுவனரும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். அவர்கள் இருவரும் திட்டமிட்டபடியே அதுவரை நடைபெற்றுவிட்டன.

மலர் மங்கையின் இனிய குரல் கண்டராதித்த சோழரை மிகவும் கவர்ந்தது. அரசர் தங்கியிருந்த மாளிகைக்குச் சென்றவுடனேயே மலர்மங்கையை அழைத்து வருமாறு கட்டளையிட்டார்.

அந்த உத்தரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உதயன். மலர்மங்கையுடன் சக்கரவர்த்தி தங்கியிருந்த இடத்திற்குச் சென்றான்.

புறப்படும் முன், மலர்மங்கையைச் சிறப்பாக, எடுப்பாக சிங்காரித்துக் கொள்ளுமாறு உதயன் வற்புறுத்தினான். மலர்மங்கை தயங்கினாள்.

"மங்கை, நீ சோழ சக்கரவர்த்தியைச் சந்திக்கப் போகிறாய் என்பது நினைவிருக்கட்டும்..." என்று உதயன் குரலில் அழுத்தமுடன் கூறினான்.

மங்கை அஞ்சவில்லை; அவள் நினைவெல்லாம் கம்பீரமான சோழ மன்னரின் வடிவத்திலேயே லயித்திருந்தது. அவருடைய முகத்தில் தெய்வீக ஒளி வீசுவதை அவளால் காண முடிந்தது. அவர் பேசும் ஒவ்வொரு சொல்லிலும் உயர்ந்த பண்பு இருப்பதை

அவளால் அறிய முடிந்தது. பெரும் அரசருக்கான வீண் ஆடம்பரம் அவரிடமில்லாததை அவளால் உணர முடிந்தது.

"சக்கரவர்த்திக்கு ஆடம்பர ஆடைகள் பிடிக்காது என்று நினைக்கிறேன். மிக அடக்கத்தைத் தான் அவர் விரும்புவார். நெற்றியில் திருநீறு பளிச்சிட வேண்டும். திலகம் அழகுபட இடப்பட்டிருக்க வேண்டும். அவர் பாடச் சொல்லும் போது பாடவேண்டும். பகட்டான உடையையோ, கவர்ச்சியையோ, அவர் விரும்பமாட்டார்" என்று மங்கை மெல்லக் கூறினாள்.

"மங்கை"–உதயன் கண்டிப்பு நிறைந்த குரலில் கூறினான். "நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும். எல்லாம் தெரிந்து விட்டது போல் நினைத்து விடாதே. வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்து விடக்கூடாது. உன்னிடம் அரசருக்குத் தனிப்பட்ட அன்பு ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிந்து விட்டது. உன்னை அவர் மாளிகைக்கு அழைப்பார் என்று நினைத்தோம். அழைத்துவிட்டார். அவர் உன்னைப் பாராட்டுவார். பரிசு தருவார். அதற்கு மேலும் பரிசுப் பெற முயல வேண்டும். அதற்கு உனது நடை, உடை, பாவனை எல்லாம் உதவும். நான் சொல்வதை நீ கேட்க வேண்டும்; அதன்படி நடந்தால் இராட்டிரகூட நாட்டிலேயே நீ பெரிதும் மதிக்கப்படுவாய்" என்றான்.

உதயன் பேசுவது அவள் காதுகளில் வீழ்ந்தது. ஆனால் மனம் அதில் லயிக்கவில்லை. சோழ அரசரை மயக்கித் தன் வயப்படுத்த வேண்டும் என்ற ஆசை அவளுக்கு ஏற்படவில்லை. அதற்கு மாறாக எந்தெந்தப் பாடல்களைப் பாடலாம்; எந்தெந்தப் பண்களில் பாடலாம் என்ற யோசனைகள் அவள் மனதில் வட்டமிட்டன.

"மங்கை! நான் சொல்வது உன் காதில் விழவில்லையா? வேறு ஏதோ சிந்தனை! சீக்கிரம் புறப்பட வேண்டும். பட்டாடையை

அணிந்து கொள். அதற்கு ஏற்பக் கச்சினை அணிந்து கொள். மைதீட்டிக் கொள். நறுமணச் சந்தனம் பூசிக்கொள். காலில் சதங்கையை அணியத் தவறாதே.

"பாடத் தெரியும், ஆடவும் தெரியும் என்பதை அரசர் அறிந்து கொள்ள வேண்டாமா? உம்... சீக்கிரம்..." என்று துரிதப்படுத்தினான் உதயன்.

உதயனின் கட்டளையைத் தட்ட முடியாமல் வேண்டா வெறுப்பாக அலங்கரித்துக் கொண்டாள். ஆனால் நறுமணப் பொருள் பூசவிலை. சதங்கை அணியவில்லை. அங்கங்களை வெளிக்குக் காட்டாத நிலையில் உடை அணிந்தாள்.

கண்டராதித்த சோழரின் எதிரே, மிகுந்த பணிவுடன் மங்கை தலை குனிந்து நின்றாள். மண்டபத்திற்கு வெளியே உதயன் நின்று கொண்டிருந்தான்.

அரசர் உத்தரவுப்படி பணியாளர்கள் ஒரு தட்டிலே பழ வகைகளுடன் முத்துமாலையொன்றும் கொண்டு வந்தனர்.

"பெண்ணே! உன் பெயர் என்னவென்று சொன்னாய்?" என்று கண்டராதித்தர் கேட்டார்.

மங்கை மெல்லிய குரலில் "மலர்மங்கை" என்று கூறி ஒருமுறை அரசரை நோக்கி விட்டுத் தலை குனிந்து நின்றாள்.

"திருச்சிற்றம்பல வாணர் உனக்கு இனிய குரல் வளத்தைக் கொடுத்துள்ளார். முன் பிறப்புப் புண்ணியத்தால் இசைப்புலமையும் இனிய குரலும் நீ பெற்றிருக்கிறாய். உன்னைப் பெற்ற பாக்கியசாலி யாரம்மா?" என்று அரசர் கேட்டார்.

மன்னரின் அருகே நின்றிருந்த திருமந்திர ஓலை நாயகம் மிகவும் பணிவும் பக்தியும்மிக்க, சிதம்பரத்தில் வாணிபம் செய்யும் உதயனை பற்றிக் குறிப்பிட்டு, அவருடைய வளர்ப்பு மகள் மங்கை என்பதைத் தெரிவித்தார். மேலும், உதயனின் தர்ம சிந்தனையைப் பற்றியும் புகழ்ந்தார். "தில்லையிலுள்ள தர்மசத்திரத்திற்கு உதயன் ஏராளமாக உதவுகிறார்" என்றும் தெரிவித்தார்.

அரசர் மகிழ்ந்தார். "இந்தப் பிறவியிலும் இவளை வளர்ப்பவர் புண்ணியம் செய்கிறார். முற்பிறவி, இப்பிறவி இரண்டும் சேர்ந்து மறுபிறவியில் இன்னும் சிறப்பாக இவள் விளங்குவாள். மகாபாக்கியசாலி பெண்ணே! நீ திருவையாறு சென்றிருக்கிறாயா?" என்று கேட்டார் அரசர்.

இல்லை என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள் மங்கை. "அந்தத் தலத்திற்குச் செல்ல வேண்டும் என்ற பேராவல் எனக்கு உண்டு, அந்தத் தலத்து இறைவன் மீது அப்பர் பெருமான் பாடிய பாடல்கள் எல்லாம் எனக்கு மனப்பாடம்–" என்றாள் மங்கை.

கண்டராதித்தர் முகம் மலர்ந்தது. நிமிர்ந்து உட்கார்ந்தார் "நாவுக்கரசர் பாடியவை உனக்கு மனப்பாடமா? ஆகா! எங்கே ஒரு பாடல் பாடு" என்று குரலில் ஆவல் பொங்க கேட்டார்.

மங்கை பாடினாள். கூச்சம் சிறிதுமின்றிப் பாடினாள்.

"மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடி
போதொரு நீர்சுமந்தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல்
ஐயாறு அடைகின்ற போது

காதல் மடப்பிடியோடுங்
களிறு வருவனை கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்..."

அவள் பாடியபோது கங்கையையும், பிறையையும் சடையிலணிந்த சிவபெருமான் தோன்றினார். மலையான் மகள் பார்வதி தோன்றினாள்.

திருவையாறு எனும் திவ்யக்ஷேத்திரம் தென்பட்டது. தேவ பூசைக்கு மலரும், திருமஞ்சனத்திற்கு நீரும் கொண்டு செல்லும் பக்தர்கள் தென்பட்டனர். அப்போது எதிரே சக்தியும் சிவமும் போல இளைய பெண்யானையும், ஓர் ஆண்யானையும் ஒன்று சேர வருவதும் தெரிந்தது.

கண்டராதித்தர் கண்களுக்கு இந்த அரிய காட்சிகள் புலப்பட்டன. விழிகளை மூடியவாறு, "ஆகா, ஆகா" என்று உருகினார். பிறகு விழிகளை மெல்லத் திறந்து "பெண்ணே! நீ பாக்கியசாலி. பாடலின் இனிமையில் இறைவனையே கொண்டு நிறுத்தி விடுகிறாய். நீ தஞ்சைக்கு வந்துவிடுகிறாயா? அரசியும் உன்னைப் பார்த்தால் மகிழ்ச்சி அடைவாள். உன் பாட்டைக் கேட்டால் பரவசமடைவாள். எங்களுடனேயே இருந்து கொண்டு தெய்வப் பாடல்களைப் பாடியவாறு எங்களுக்குத் தெய்வ தரிசனம் எப்போதும் தோன்றச் செய்கிறாயா?" என்று கேட்டார்.

மங்கை திகைத்தாள். என்ன மறுமொழி கூறுவது என்று புரியாமல் வெளியே நின்று கொண்டிருந்த உதயனை நோக்கினாள். அப்போது திருமந்திர ஓலை நாயகம் அரசரின் செவிகளில் மட்டும் விழுமாறு ஏதோ கூறினார்.

வெளியே நிற்கும் உதயனை அழைத்து வருமாறு அரசர் கட்டளையிட்டார். உதயன் உள்ளத்திற்குள்ளே சோழ அரசர் மீது வெறுப்பு இருந்தாலும் அரசரை நேருக்கு நேர் காணும் போது அவன் இயல்பாக நடுங்கத்தான் செய்தான். கண்டராதித்தன் முக தேஜஸும், அவர் கண்களில் இருந்து பிரதிபலித்த ஒளியும் உதயனைத் திக்குமுக்காடச் செய்தன.

கண்டராதித்தன் உதயனின் நலன்களை விசாரித்தார். மங்கையின் இசைப்புலமையைப் பாராட்டினார். மங்கையைத் தஞ்சைக்கு அழைத்துச் செல்ல விரும்புவதாகச் சக்கரவர்த்தி தெரிவித்தவுடன் உதயனுக்கு உண்மையிலேயே பெருமகிழ்ச்சி ஏற்பட்டது.

"சக்கரவர்த்திகள் பெரிய மனது செய்து, இந்த அனாதைப் பெண்ணை ஏற்பது எங்கள் முன் பிறவியில் செய்த புண்ணியமே" என்று உதயன் கூறினான். மங்கைக்கு வியப்பாக இருந்தது; அச்சமாகவும் இருந்தது. உண்மையிலேயே கூறுகிறாரா? உதட்டளவில் கூறுகிறாரா? அந்த வார்த்தைகளின் மறைவில் ஏதாவது சதித்திட்டம் இருக்கிறதா?

உதயனை அவள் நோக்கினாள். உதயனும் மலர்மங்கையை எச்சரிக்கைத் தெரிவித்து நோக்கினான்.

மங்கை மெல்லிய குரலில் பாடினாள். பாடலைக் கேட்டவுடன் கண்டராதித்தன் உணர்ச்சி வயப்பட்டார்.

"மங்கை, தெய்வமாகப் பார்த்துச் சோழநாட்டிற்கு அனுப்பப்பட்ட கன்னிகை. அரசி உன்னைப் பார்த்தால் மகிழ்ச்சியடைவாள். உன் பாடலைக் கேட்டுப் பரவசமடைவாள். சிவத்தலம் ஒவ்வொன்றிற்கும் செல்லும் போதும் உன்னையும் உடன்

அழைத்துச் சென்று பாடக்கேட்டு ஆனந்தமடைவாள். நாளைக்கே புறப்படலாம். ஒரு வேளை இன்றே புறப்படலாம். உடன் புறப்பட்டுவரச் சித்தமாயிரு..." என்று மங்கையைப் பார்த்துக் கூறிப் பிறகு உதயனை நோக்கி, "நீங்கள், மங்கையை எப்போது வேண்டுமானாலும் தஞ்சைக்கு வந்து சந்திக்கலாம்..." என்றார்.

உதயனும், மலர்மங்கையும் அரசரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்த போது மீண்டும அவர்களை அரசர் அழைத்தார்.

"சந்தியாகால பூசைக்குத் தவறாமல் கோயிலுக்கு வந்துவிடு" என்று மங்கையிடம் அரசர் கூறினார். மங்கை மெய் சிலிர்க்க உதயனை ஒருமுறை நோக்கினாள். உதயன் தலையை அசைத்தான்.

இவ்வளவு பெருமைக்கும் தனக்கு இசை கற்பித்த கூத்தன்தான் காரணம் என்று மங்கை நினைத்தாள். அவரை அலட்சியப்படுத்தி ஊரைவிட்டே போகுமாறு செய்துவிட்டேனே என்று கவலைப்பட்டாள்.

"கூத்தன் ஊரைவிட்டே போய்விட்டார் என்பது உண்மைதானா? எனக்கு என்னவோ பயமாயிருக்கிறது..." என்றாள் மங்கை.

"ஏன்? என்ன பயம்?"–உதயன் அவளைக் கேட்டபோது அவனுக்கும் பயம்" கூத்தனுக்கு நேர்ந்த கதியை மங்கை அறிந்து விட்டால்...?

"மங்கை, கூத்தனை நீ இன்னும் மறக்க வில்லையா? அவன் இருந்திருந்தால் உனக்கு அரசரிடம் இவ்வளவு செல்வாக்கு ஏற்பட்டிருக்காது"–உதயன் அவள் விழிகளைக் கூர்ந்து நோக்கியவாறு கேட்டான்.

மங்கை சற்றுச் சிந்தித்தாள். உதயன் சொல்வது உண்மையாயிருக்குமா? அரசர் முன்னிலையில் என்னைப் பாடவைப்பதாகக் கூறியது பொய்யா யிருக்குமோ?

"மங்கை, நீ இனி மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டும். தஞ்சை சென்றவுடன் அந்தப்புரத்திலுள்ள நூறோடு நூற்று ஒன்றாக மாறிவிடாதே. உன்னைச் சிதம்பரத்திற்கு அழைத்து வந்ததன் காரணத்தை மறந்து விடாதே. தஞ்சை மாளிகையில் அழகியோடு அழகியாக மாறி உல்லாசமாக வாழ்க்கை நடத்த நீ செல்லவில்லை. சோழ அரச குலத்தை நிர்மூலமாக்கவே நீ செல்கிறாய் என்பதை மறந்து விடாதே. நீ சென்ற சில நாட்களுக்குள் நான் மாறு வேடத்தில் வருவேன். "ஹரஹர சம்போ! என்று கூறுவேன். நீ புரிந்து கொள்ள வேண்டும். அரசர் படுத்துறங்குமிடத்திற்கு வழி காட்ட வேண்டும். அரசரைக் கைலாசம் அனுப்பி விடுவேன். அதே நாளில் இராட்டிரகூடர்ப் படைகள் பெண்ணையாற்றைக் கடந்துவிடும். நினைவிருக்கட்டும்" என்று உதயன் கூறும் போது மங்கை நடு நடுங்கினாள்.

"ஐயோ! சோழ மன்னரைக் கொல்லச் சதி செய்யும் கூட்டத்தில் நான் வந்து அகப்பட்டுக் கொண்டேனே, எப்போதும் சிவ நினைவாக இருக்கும் உத்தமரைக் கொல்லச் சதிசெய்வதே மிக மிகப் பாவம். நடராசப் பெருமானே என்னைக் காப்பாற்றுங்கள்" என்று மனதிற்குள்ளேயே பிரார்த்தித்தாள்.

"என்ன முணுமுணுக்கிறாய் மங்கை?" என்று உதயன் கேட்டான்.

"ஒன்றுமில்லை. பாதுகாவலோ, படைப்பலமோ இல்லாமல் சிதம்பரத்திற்கு வந்திருக்கும் அரசரை மிக எளிதில் கொன்று விடலாமே. அப்படிச் செய்யாமல் தஞ்சைக்கு நான் சென்று உங்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் வரைக் காத்திருக்க

வேண்டுமா என்று நினைத்தேன்" என்றாள் மங்கை மிகச் சாதுர்யமாக.

உதயன் பெரிதாகச் சிரித்தான். "ஆகா! மங்கை! உனக்கும் அரசியல் அறிவு சிறிது இருக்கிறது. இராட்டிரகூடர்கள் யுத்த தர்மத்தைக் கைவிடாதவர்கள். போர்க்கொடி உயர்த்தாமல் போருக்குப் புறப்படமாட்டார்கள். மேலும் திருத்தலத்திற்கு அரசர் வந்தபோது கொலைசெய்யப் பட்டார் என்றால், அந்தப்பழி காலாகாலத்திற்கு அழியா! கண்டராதித்தன் திடீரென இறந்தால் அல்லது கொலை செய்யப்பட்டால் அவருக்கு அடுத்த வாரிசு இல்லாததால் நியாயமான வாரிசு என்ற முறையில் நமது அரசர் கிருஷ்ணதேவர் சோழ நாட்டிற்குள் நுழைவது நியாயம்தானே!" என்றான்.

"வாரிசு"–மங்கைக்கு ஏதும் புரியவில்லை. இந்தக் குழப்பத்தினின்று சதிக் கும்பலிலிருந்து எவ்வாறு விடுபடுவது என்று நினைக்கலானாள்.

●●●●●

சந்தியாகால பூஜையின் போது கண்டராதித்தர் நடராசர் திருப்பாதத்தில் ஓலை நறுக்குகளை வைத்து திருவுளம் அறிய விரும்பினார். அர்ச்சனை, தூப தீபங்களுக்குப் பிறகு தில்லை வாழ் அந்தணர்களுக்குள் மூத்தவர் ஓலை நறுக்குகளினின்று ஒன்றை எடுத்து அரசர் எதிரே பிரித்தார்.

அதில் அரிஞ்சயன் பெயர் எழுதப்பட்டிருந்தது. கண்டராதித்தர் ஆனந்த பரவசமானார். இரு கரங்களையும் உயர்த்திக் கூப்பி, "நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க" என்று கூறலானார். கூத்தாடலானார். மலர்மங்கை அந்தப் பார்வையிலுள்ள பயங்கரத்தைத்

தாங்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் கூந்தலில் சொருகியிருந்த கொன்றை மலர் ஒன்று கீழே வீழ்ந்தது.

அரசரை நோக்கியவாறு கீழே வீழ்ந்திருந்த கொன்றை மலரைக் குனிந்து எடுத்து மீண்டும் தலையிலணிய முயன்றாள் மங்கை.

"கொன்றை மலர் இறைவனுக்குப் பிரியமானது உனக்குத் தெரியுமா?" என்று அரசர் கேட்டார்.

அவர் வந்த காரியம் முடிவடைந்துவிட்டது. உடனே சிதம்பரத்தைவிட்டுப் புறப்பட்டு இரவோடு இரவாகப் பயணப்பட முடிவு செய்தார். அரசியாரிடம் இளவரசப் பட்டத்திற்கான ஆண்டவன் திருவுளத்தை உடனே தெரிவிக்க வேண்டும் என்ற ஆவல் அதிகமாகியது.

பரிவாரங்கள் புறப்பட ஆயத்தமாயினர். மலர்மங்கையும் உடன் வருவது என்று முடிவானது. மலர்மங்கைக்குத் தனி வண்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

நடுநிசிக்குச் சற்று முன்பு மன்னர் சிதம்பரம் நகரைவிட்டுப் புறப்பட்டார். அவருடன் பரிவாரங்கள் புறப்பட்டன. காலையிலிருந்து மாலைவரை சிதம்பரம் நகரிலிருந்த கோலாகலம் சிறிது சிறிதாகக் குறைந்தது.

மதுவணரும் உதயனும் மங்கையிடம் வந்து தஞ்சையில் சந்திப்பதாகவும் மிகக் கவனமாக நடந்து கொள்ளுமாறும் இரகசியமாக எச்சரித்தனர்.

வண்டி ஆடி அசைந்து சென்றுகொண்டிருந்தது. மங்கை உறக்கம் வராமல் கவலையோடு உட்கார்ந்திருந்தாள். வண்டியின்

ஆட்டத்தில் அவள் கூந்தலிலிருந்த கொன்றை மலர் சரிந்து அவள் தோள்மேல் வீழ்ந்தது.

ஒற்றைக் கொன்றை மலரைக் கையிலெடுத்துப் பார்த்து விழிகளில் ஒத்திக்கொண்டு வண்டிக்கு வெளியே வீசி எறிந்தாள்.

கொள்ளிடக் கரையருகே வழியில் கொன்றை மலர் வீழ்ந்து கிடந்தது.

11. மங்கை எங்கே?

தஞ்சை மாநகரை, சோழ மன்னர் இராசசேகரி கண்டராதித்தர் வந்தடையும்போது இரவு நெடுநேரமாகிவிட்டது. ஆங்காங்கே சிறிது இளைப்பாறியவாறே பரிவாரங்கள் வழிநடந்தன. சிவிகை சுமப்போரும் அவ்வப்போது மாற்றப் பட்டார்கள். சில கூண்டு வண்டிகள் மட்டும் போதுமான ஓய்வுக்காக வழியில் அதிக நேரம் தங்கின.

இரவு எந்த நேரமானாலும் தஞ்சையை அடைந்துவிட வேண்டுமென்ற பேரவா மன்னருக்கு இருந்தது. பட்டத்தரசி செம்பியன் தேவியாரைச் சந்தித்து நடந்தவற்றை உடனே சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பு அரசரிடமிருந்தது.

பயணத்தின்போது அவர் பல திட்டங்களைச் சிந்தித்து முடிவு செய்திருந்தார். இளவரசர் பதவிக்கு அரிஞ்சயனை நியமிக்க வேண்டும் என்பது இறைவனின் திருவுளம் என்பது அவருக்குப் பெரும் நிம்மதியை அளித்தது.

அரிஞ்சயன் சிறந்த வீரன். மிகக் கம்பீர மானவன். பழுவேட்டரையர் குலத்து வீர இரத்தமும் சோழர் குலத்து வீர இரத்தமும் கலந்த அழகிய ஆண் மகவும் அவனுக்குப் பிறந்து இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. தன் பெயரனுக்குச் சோழ இளவரசர் பதவி என்பதையறிந்தால் பழுவேட்டரையர் தன் கோபதாபங்களை விட்டொழிந்து ஆட்சிக்கு மேலும் அனுகூலமாக நடந்து கொள்வார் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது. தான் நடவடிக்கை எடுக்கத் தவறிய பல செய்திகளை அவர் முன் நின்று நடத்த முற்படுவார். தெற்கே பாண்டியர்களிட மிருந்து இழந்த எல்லையை மீட்க உதவுவார். வடக்கே இரட்டர்களிடமிருந்து தொண்டை மண்டலத்தை மீட்கப் படைகளைத் தந்து உதவுவார். உட்பூசல் ஏற்பட இனி இடமில்லை. நாம் மன அமைதியுடன் சிவத் தொண்டில் காலங் கழிக்கலாம் நீண்ட நாள் கனவான மேற்குத் திசையிலுள்ள சிவத் தலங்களுக்கு செல்லலாம். இவ்வாறு நினைப்பதே அவருக்கு மிக நிம்மதியாக இருந்தது.

ஆண்டவன் திருவுளத்தை நினைந்து வியந்தார். தேவியிடம் சிதம்பரத்தில் ஒரே நாளில் நடைபெற்ற சம்பவத்தை விவரித்தால், அதைக் கேட்டு மகிழ்ச்சி யடைவாள்.

கண்டராதித்தன் மாளிகையை அடைந்தவுடன் அந்தப் புரத்திற்கு விரைந்தார். அன்றே அரசர் திரும்பி வந்து விடுவார் என்று செம்பியன்தேவி எதிர்பார்க்க வில்லை. வழக்கம் போல் சிவத்தியானம் செய்து பின் உறங்கச் சென்றுவிட்டாள்.

அந்தப்புரத்திற்கு அரசர் வருகிறார் என்பதை வாத்ய முழக்கங்கள் மூலம் அறிந்த பணிப்பெண்கள் பரபரப்படைந்தனர். பாதி உறக்கத்திலிருந்தவர்கள் சுறுசுறுப்படைந்தனர். விளக்குகள்

எற்றப்பட்டன. மங்கியவாறிருந்த ஒரிரு விளக்குகள் தூண்டிவிடப்பட்டன

மஞ்சத்தில் தேவியார் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். தேவியை எழுப்ப விருமபவில்லை. இந்த உலகக் கவலை, நாட்டுக் கவலை ஏதுமின்றி இரவுத்தாமரை மொட்டுப் போல் முகம் விளங்க உறங்கிக் கொண்டிருந்த தேவியைச் சிறிது நேரம் பார்த்தவாறு நின்ற அரசர் தானும் உறங்கச் சென்றார்.

கிழக்கே வானம் வெளுக்குமுன் எழுந்த தேவியார் மற்றொரு மஞ்சத்தில் மன்னர் சயனித்திருப்பதைக் கண்டு வியப்படைந்தாள். பிறகு பெண்களைக் கேட்டறிந்தார்.

மன்னரைத் திருப்பள்ளி எழுப்ப கீதமிசைப்போர் அந்தப் புரவாயிலில் மெல்லிய வாத்யக் கேஷங்களை எழுப்பினர், கோட்டை வாயிலில் முரசு முழங்கியது.

கண்டராதித்தன் மெல்லக் கண் விழித்தார். தன் எதிரே தேவி புன்முறுவலுடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டார். முகத்தில் உற்சாகம் பொங்க, "தேவி! காலை வேளையில் உனக்கு இரண்டு நல்ல செய்திகள் கூறப்போகிறேன்" என்றார்.

"சிவபெருமான் அருளால் தங்கள் பயணம் நலமே முடிந்திருக்கும். ஆனால் ஒரே நாளில் இவ்வளவு தொலைவு சென்று திரும்புவதால் மிகுந்த களைப்படைந்திருப்பீர்களே" என்று அவர் பாதங்களை மெல்லப் பிடித்தாள்.

"தேவி எல்லாம் நல்லபடியே நடந்தன. உனக்கு உதவியாக இருக்க ஓர் அழகிய மங்கையை அழைத்து வந்திருக்கிறேன்" என்று சிறு குழந்தைபோல், புதிர் ஒன்றைக் கூறுவதைப் போல் சொன்னார்.

"அழகிய மங்கையா?" தேவி வியப்புடன் கேட்டாள்.

"ஆமாம், அழகு மட்டுமில்லை. இனிய குரல் அவளுக்கு. நம்பியாண்டார் பாடும் பதிகங்களை அவளும் பாடுகிறாள். திருவையாற்றுப்பிரான் மீது நீ அவ்வப்போது பாடும் பதிகத்தையும் பாடுகிறாள்.....!"

"அப்படியா?"

"நான் மெய்ம்மறந்து போனேன். அவள் ஓர் அனாதை என்பதையும் அறிந்தேன். இங்கே உனக்குத் துணையாக இருக்கட்டும் என்று அழைத்து வந்துவிட்டேன். ஆண்டவன் அளித்த பரிசு."

"உம். ஒரு நல்ல செய்தி சொன்னீர்கள் மற்றொன்று?"

"மற்றொன்றா..... நம் மனக் கவலைக்கு அம்பலவாணன் நல்ல வழி காட்டிவிட்டார். அதைக் கூறவே உடனே புறப்பட்டு வந்து விட்டேன்..."

"நடராசப் பெருமான் தன் திருவுளத்தைப் புலப்படுத்தி விட்டாரா?"

"ஆமாம். இங்கிருந்து புறப்படும்போது இரண்டு ஓலை நறுக்குகளில் ஒன்றில் வீரமாதேவியின் புதல்வன் பெயரையும் மற்றொன்றில் அரிஞ்சயன் பெயரையும் எழுதியிருந்தேன். அங்குச் சென்றவுடன் என் மனத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. வேறு இரு ஓலை நறுக்குகளைக் கொண்டு வரச் செய்தேன். ஒன்றில் அரிஞ்சயன் பெயரை எழுதினேன். மற்றொன்றில்....." என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

தேவி ஆவலுடன் அவர் முகத்தை நோக்கினாள்.

"மற்றொன்றில்... நாதா! தாங்கள் ஒரு முறை முடிவு செய்ததைப் பிறகு மாற்றமாட்டீர்களே..." என்று தேவி கவலையுடன் கேட்டாள்.

"ஆமாம்; பயணத்தின்போது அமைதியாக சிந்தித்தேன். பழுவேட்டரையர் கூறுவதுபோல், என்ன இருந்தாலும் வீரமாதேவியின் மகன் வேற்று நாட்டவன் தானே! மற்றொன்றில் செம்பியன் வயிற்றிலுதிக்கும் செல்வன் என்று எழுதினேன்."

கண்டராதித்தன் இவ்வாறு கூறியவுடன் செம்பியன் மாதேவியின் உடல் சிலிர்த்தது. தன் இரு கரங்களையும் கூப்பிக் கொண்டு "சுவாமி, என்ன எழுதினீர்கள்... எனக்குப் பிறக்கப் போகிறவன் செல்வன்தான் என்று உறுதியாக முடிவுவே செய்துவிட்டீர்களா? அதுவும் நாம் வணங்கும் அம்பலவாணர் திருவுளப்பாங்கு தான். உம்... பிறகு சொல்லுங்கள்..." என்று ஆவலுடன் அவர் முகத்தை நோக்கினாள்.

கண்டராதித்தன் முக மலர்ச்சியுடன், தேவி! பரமன்கிருபை எப்படி இருக்கிறது பார்த்தாயா? அவரது திருவுளம் எத்தகையது என்று பார்த்தாயா? என்றார்.

"சொல்லுங்கள். பிரபோ சொல்லுங்கள்! அம்பலத்தரசர் திருவுளம் எப்படியோ அப்படியே நடப்போம்" என்று தேவி கூறும்போது அவள் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் தளும்பியது.

தேவி நடராசர் திருப்பாதத்தில் சமர்ப்பித்த ஓலை நறுக்கினின்று ஒன்றைத் தில்லைவாழ் முதிய அந்தணர் எடுத்தார். அதைப் பிரித்துப் படித்தேன். ஆகா! சோழ நாட்டின் பெருமைக்குக் காரணஸ்தரான அமரர் பரகேசரி பராந்தக சோழதேவரின் மூன்றாவது திருக்குமாரர், எனது இனிய இளவல் அரிஞ்சயன் பெயர் அதில் எழுதப் பட்டிருந்தது. தெய்வம் அறவழியைத் தான் காட்டும்" என்றார் கண்டராதித்தன்.

செம்பியன் மாதேவியார் ஒரு கணம் திடுக்கிட்டாள். பிறகு தன் முகமாறுதலைப் புலப்படுத்தாமல் விழிநீரை மெல்லத் துடைத்துக் கொண்டு, "அரசர்க்கரசே! தெய்வம் நல்வழி காட்டி விட்டது. பழுவேட்டரையரின் கோரிக்கை நிறைவேறிவிடும். அவரது பெயரன் சோழநாட்டு இளவரசராக வேண்டும் என்று எப்போதும் எண்ணிக் கொண்டிருந்த அவரது இலட்சியம் நிறைவேறிவிடும்" என்று உற்சாகமாகக் கூறியவள் சற்று நிறுத்தினாள். பிறகு முகத்தில் கவலை தோன்ற, "சுவாமி, எனக்கொரு சந்தேகம் இளவரசப் பட்டம் சூட்டப்பட்டவர்தானே பிறகு நாட்டை ஆளும் உரிமை பெற்றவராவார்?" என்று கேட்டாள்.

கண்டராதித்தர் உடனே மறுமொழி கூறவில்லை. சிறிது யோசித்து, "ஆமாம்" என்றார்.

"சுவாமி, அப்படியென்றால் தெய்வ அருளால் என் திருவயிற்றில் வளரும் சிசுவுக்கு இந்த நாட்டில் என்ன உரிமை! பரகேசரியாக இந்த நாட்டை ஆள அவனுக்கு உரிமை கிடையாதா? வருங்காலத்தில் அரியணைக்கு உரிமைப் போராட்டம் ஏதாவது ஏற்பட்டால் எந்தக் குழப்பத்தையும் போராட்டத்தையும் தடுக்க வேண்டும் என்று விரும்பினோமோ அவை தலை தூக்கினால்?" என்று தேவி தன் ஐயத்தைக் கேட்டாள்.

கண்டராதித்தன் தன் விழிகளை மூடிக் கொண்டு, "சிவ, சிவ" என்று சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார். தேவியின் கேள்விக்கு உடனே மறுமொழி கூறாமல் சிறிது நேரம் மௌனமாக இருந்து, "இந்த நாடு, ஆட்சி, மகுடம், அரியணை, அரசபதவி இவையெல்லாம் நிரந்தரம் அல்ல என்பது என் கருத்து. உன் எண்ணமும் அப்படித்தான் இருக்கும். வருங் காலத்தில் நடக்கப் போவதாகக் கற்பனை செய்து கொள்ளும் உள்நாட்டுப் பூசலைப்பற்றி ஏன் நாம் இப்போது கவலைப்பட வேண்டும்?" என்று கேட்டார்.

"அரசர்க்கரசே! தங்கள் எண்ணமே என் எண்ணம். தங்கள் இலட்சியமே என் இலட்சியம். இந்த அரசபதவி சாகவதல்ல என்று எனக்குத் தெரியும். சிவாஜ்யத்தையே எப்போதும் சிந்தனை செய்து கொண்டிருக்கும் நாம் மண்ணாசை கொள்ளப் போவதில்லை. ஆனால் நமது புதல்வர் அப்படி இருப்பார் என்று நினைக்க முடியுமா?" என்று தேவி கேட்டாள்.

"ஏன் இருக்கக் கூடாது? சிவநேசச் செல்வியான உன் திருவயிற்றில் வளர்பவன் பற்றற்றவனாக ஏன் விளங்கக் கூடாது? விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை உடையவனாக ஏன் உருப்பெறக் கூடாது? தாயத்தார்கள் போட்டிக்கு வந்தால் அவர்களுக்கு விட்டுக் கொடுத்து சிவநெறியே தன்நெறி, சிவத்தொண்டே தன் இலட்சியம் என்று ஏன் இருக்கக் கூடாது. தேவி! ஒன்று சொல்வேன். சோழ வளநாட்டில் அப்பரும் சம்பந்தரும் சுந்தரரும் பாடிப் போற்றிய பல கோயில்கள் பழுது பட்டிருக்கின்றன. அவற்றைக் கற்றளிகளாக ஆக்குவோம். பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும் மற்றும் நர்மதை நதிக் கரையிலும் கோதாவரி, கிருஷ்ணா, கங்கை நதிக்கரையிலும் உள்ள சிவத்தலங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசிப்பதற்கே நமது வாழ்நாள் போதாது. நாம் விட்டபணியை நமது திருக்குமாரன் தொடரட்டும். திருப்பணியிலேயே தன் வாழ்நாளைச் செலவு செய்தால் நாடாளும் மண்ணாசை அவனுள்ளத்தே தோன்றாது. தாயத்தார்களுடன் பூசலும் ஏற்படாது."

கண்டராதித்தன் இப்படிக் கூறி நிறுத்தியவுடன் செம்பியன் தேவியார் தன் விழிகளை மெல்ல மூடித்திறந்து, உள்ளக் கவலையை ஒரே கணத்தில் விட்டுவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் "நாதா! நல்ல அறிவுரை கூறினீர்கள். என் உள்ளத்தில் இருந்த எள்ளளவு ராஜீய ஆசையையும் கிள்ளி எறிந்து விட்டீர்கள். என் கருவில்

வளரும் சிசு உயர்ந்த இலட்சியத்துடன் வளர வேண்டுமானால் நானும் அந்த உணர்வு கொண்டவளாக இருக்க வேண்டும். எப்போதும் தெய்வ சிந்தனையுடையவளாக இருக்க வேண்டும். குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை ஆண்டவன் திருவுருவையே தரிசித்துக் கொண்டிருக்க வேண்டும். இறைவன் திருப்பெயரைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். நாவுக்கரசரும், சம்பந்தப் பெருமானும், சுந்தரரும், மாணிக்கவாசகரும் இறைவன்மீது பாடியுள்ள திருப்பாடல்களை இசையுடன் கேட்டவாறு இருக்க வேண்டும். அதற்கு எனக்கு ஏற்ற வழி செய்யுங்கள்" என்று உருக்கமுடன் வேண்டினாள்.

கண்டராதித்தன் முகம் மலர்ந்தது. நிமிர்ந்து உட்கார்ந்தான். உற்சாகம் மிகுந்த குரலுடன், "தேவி. அவற்றிற்கும் இறைவனே வழிகாட்டி விட்டார் முதலிலேயே கூறினேனே! தமிழொடு இசைபாடும் இளமங்கையை உனக்காக அழைத்து வந்திருக்கிறேன். அவள் உன் அருகிலேயே இருப்பாள். அவள் இனிமையாகப் பதிகங்களைப் பாடுவாள். நாம் செல்லும் திருத்தலங்களுக்கெல்லாம் அவளையும் உடன் அழைத்துச் செல்வோம்..." என்றார்.

செம்பியன் தேவியார் முகமும் பிரகாசமடைந்தது. "எங்கே சுவாமி, அந்த இளமங்கை? உடனே நான் அவளைக் காண வேண்டும்" என்று ஆவலுடன் கேட்டாள்.

"தேவி, ஓர் அதிசயம் என்ன தெரியுமா? அந்த மங்கை தன் கூந்தலில் கொன்றை மலரைச் சூடியிருக்கிறாள். தெய்வ அருள் ததும்பும் விழிகளை உடையவளாயிருக்கிறாள். உனக்குத் துணையாக இருக்க ஏற்றவள். இதோ அவளை இங்கே அழைக்கிறேன்" என்று கூறிய மன்னர், கரஒலி எழுப்பி காவல்காரனை அழைத்து, உடனே மலர்மங்கையை அழைத்து வருமாறு கட்டளையிட்டார்.

ஆனால், மலர்மங்கை, கண்டராதித்தனுடன் வந்த பரிவாரங்களுடன் வரவில்லை. தஞ்சைக்கு வந்து சேரவில்லை. அவள் ஏறி வந்த வண்டி மட்டுமே வந்திருந்தது. ஆனால், மலர்மங்கையைக் காணவில்லை.

மலர்மங்கையைத் தேட நாலா திக்குகளிலும் வீரர்கள் புறப்பட்டனர்.

12. அவனுக்கு அவ்வளவு அழகிய காதலியா?

கண்டராதித்த சோழர், சிதம்பரம் நகரிலிருந்து அவ்வளவு விரைவில் புறப்பட்டு விடுவார் என்று ஒருவரும் எதிர்பார்க்க வில்லை. சித்தம் போக்கு சிவன் போக்கு. கண்டராதித்தர் போக்கு என்று சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்று உடன் வந்த மூத்த அதிகாரிகள் பேசிக் கொண்டனர்.

மலர்மங்கை உதயனிடமும், மதுவணரிடமும் விடை பெற்றுக் கொண்டாள். அவர்களை விட்டுப் பிரிவதிலே அவளுக்கு உள்ளூர மகிழ்ச்சி இருந்தது. கண்டராதித்தனின் பரிவாரங்கள் முன்னால் செல்ல மலர்மங்கையை ஏற்றிவந்த கூண்டுவண்டி கடைசிகடைசியாக அசைந்தாடி வந்து கொண்டிருந்தது. அந்த வண்டியில் சில பண்டங்களும் ஏற்றப்பட்டிருந்தன.

நடு நிசியைத் தாண்டிய அந்த நேரத்திலும் மங்கைக்கு உறக்கம் வரவில்லை. அவள் எண்ணக் குதிரையை அடக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். சிறுவயதிலிருந்து

நடைபெற்ற சம்பவங்களை ஒருமுறை நினைத்துப் பார்த்துக் கொண்டாள்.

பின் நிலவுக் காலமாதலால் நிலா ஒளி இருளை ஓளவிற்குப் போக்கிக் கொண்டிருந்தது. அவளைவிட்டுப் பின் நோக்கிச் சென்ற பாதை கடந்த காலச் சுவடுகளை மெல்ல அழித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது வண்டியை நோக்கி ஓர் உருவம் விரைந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டாள். அந்த உருவம் ஒட்டமும் நடையுமாக நெருங்கி வந்தது.

வண்டியில் சாய்ந்து உட்கார்ந்திருந்த மலர்மங்கை நிமிர்ந்து உட்கார்ந்தாள். கண்களை ஒருமுறை கசக்கிக் கொண்டாள். அந்த உருவம் நெருங்கிக் கொண்டிருந்தது.

யார்–யார்? அவள் மனத்தில் ஓர் சந்தேகம்–ஓர் எண்ணம்–, ஓர் முடிவு எழுந்தது.

மலர்மங்கை வண்டியிலிருந்து கீழே குதித்தாள். வண்டி ஒட்டி தூங்கி விழித்தவாறு வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான். மங்கை நினைத்தது சரிதான். ஓடிவருவது கூத்தன் தான் என்பதை மங்கை உறுதிப்படுத்திக் கொண்டாள்.

மங்கையின் உடல் சிலிர்த்தது.

"மங்கை!" என்று கூத்தன் கூவியது கேட்டது.

அருகே இருந்த மரங்களினின்று திடீரென்று விழித்த பறவைகள் சில சிறகுகளைச் சிலிர்த்துப் பறந்து சென்றன.

மங்கை வண்டியினின்று கீழே குதித்தாள். அவனை நோக்கி ஓடினாள். இருவரும் மிக அருகே நெருங்கி விட்டனர்.

"ஆ, நீங்களா?" என்று மங்கை கூவினாள்.

"மங்கை... நானேதான்.... கூத்தனேதான்... பேயுருவம் அல்ல..." என்றான் கூத்தன். அவன் கரங்கள் நீண்டன அவளை அணைக்க.

"பொன்னைப் பெற்றுக் கொண்டு பொன்னம்பல நகரைவிட்டுப் போய்விட்டீர்களாமே. என்ன கோபமிருந்தாலும் உங்கள் மாணவியிடம் சொல்லிக் கொண்டு சென்றிருக்கக் கூடாதா?"

இருவரும் எதிர் எதிரே, ஒருவர் முக உணர்ச்சியை மற்றவர் பார்த்துக்கொள்ளும் இடைவெளியுடன் நின்றனர். ஒருவர் முக உணர்ச்சியை, மன உணர்ச்சியை மற்றவர் அறிந்து கொள்ள முயன்றனர்.

"உன்னிடம் இப்படியொரு கதையைச் சொல்லிவிட்டு என்னை இந்த உலகைவிட்டே ஒட்டிவிட முயன்றார்கள் அந்தச் சதிகாரர்கள்" என்றான் கூத்தன்.

"நீங்கள் ஊரில் இருந்தால் அரசர் என்னைப் பாராட்டுமளவுக்கு விட்டுவிடமாட்டீர்களாம். அறிமுகப் படுத்த மாட்டீர்களாம். உங்களுக்கு என்மீது பொறாமையாம். என்னை வசியப் படுத்த முயன்று முடியாததால் எப்படியாவது அபகரித்து விடப் பார்க்கிறீர்களாம். அதனால் பொன்னைக் கொடுத்து ஊரைவிட்டே போகுமாறு செய்துவிட்டார்களாம்" என்று மங்கை கூறினாள்.

"ஊரைவிட்டு இல்லை. உலகத்தைவிட்டே என்னைப் போக வழி செய்து விட்டார்கள். நாள்தோறும் பொன்னம்பலவாணனைக் கசிந்துருகிப் பாடிய புண்ணியம் என்னைக் காத்தது. நான் பிழைத்தேன்" என்று கூத்தன் கூறினான்

மலர்மங்கை வியப்பும் அச்சமும் மேலிட அவன் கூறுவதைக் கேட்டாள்.

நாள்தோறும் பொழுது புலரா முன்னர் கொள்ளிடத்தில் நீராடி திருப்பள்ளி எழுச்சிப்பாடக் கோயிலுக்குத் திரும்பி வரும் வழக்கமுடையவன் கூத்தன். அன்றும் அவ்வாறே புறப்பட்டான். முதல் நாள் நடந்த சம்பவங்கள் அவனுள்ளத்தில் பெரும் வேதனையை அளித்தன. தன் காதலை மங்கை ஏற்காமல் அலட்சியப்படுத்தியது பெரும் ஏமாற்றத்தை அளித்திருந்தது. சோர்வுடன் அவன் ஆற்றங்கரையை நோக்கி நடந்த போது அவன் அறியாமல் உதயன் பின் தொடர்ந்தான்.

கொள்ளிடத்தில் சரடுபோல் ஒற்புறமாகத் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்ததால், ஊற்றுக் குழியில் குளிக்க இறங்கிய கூத்தன் மீது திடீரென்று பாய்ந்து தண்ணீரில் மூச்சுத் திணற அழுத்தி, அவன் இறந்துவிட்டான் என்ற எண்ணத்தில் அவனைத் தூக்கி நாணல் புதருகே போட்டுவிட்டு உதயன் இருளோடு இருளாக வீட்டிற்குத் திரும்பிவிட்டான்.

வழக்கம்போல் நீராட அந்தப்பக்கம் வந்த முதியவர் மயங்கிய நிலையிலிருந்த கூத்தனைக் கண்டு சிலர் உதவியுடன் அவனைத் தூக்கிவந்து தன் குடிசையுள் கிடத்தி, அவனுக்குச் சிகிச்சை அளித்தார். கூத்தனுக்குச் சுய நினைவு வர வெகு நேரம் பிடித்தது.

கண்விழித்துச் சற்றுக் களைப்பு நீங்கப் படுத்திருந்த கூத்தன் பெரியவருக்கு நன்றி தெரிவித்தான். அன்று முழுவதும் ஓய்வுடனிருக்கு மாறு கூறிய பெரியவர், தஞ்சையிலிருந்து அரசர் சிதம்பரம் வந்திருக்கும் செய்தியையும் தெரிவித்தார்.

கூத்தனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கூத்தன் அப்போதுதான் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு எப்படியும் சிதம்பரம் சென்று அரசரைக் காண வேண்டும் என்று துடித்தான்.

பெரியவர் அவனை அனுப்பச் சம்மதிக்கவில்லை. "இந்த நிலையில் நீ நடக்கக் கூடாது. இன்று முழுவதும் ஓய்வு எடுத்துக் கொண்டுதான் ஆகவேண்டும் உன்னைக் கொன்றுவிடச் சதி செய்தவர்களைப்பற்றி நான் நகரத்திற்குள் சென்று சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவித்து வருகிறேன்" என்று கூறி கூத்தனைப் போகவிடாமல் தடுத்துவிட்டார்.

"ஐயா, மற்றொரு முக்கியமான செய்தியையும் சொல்ல வேண்டும். எதிரி நாட்டு ஒற்றர்கள் இருவர் நமது மன்னரைக் கொல்லப் பெரும் சதித் திட்டம் வகுக்கிறார்கள். மன்னர் உயிருக்கு எந்தவித ஆபத்தும் வந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்காகவாவது நான் ஊருக்குள் போய்த்தான் ஆகவேண்டும்" என்று, கூத்தன் தான் அறிந்த செய்தியைத் தெரிவித்தான்.

"நீ கவலைப்படாதே தம்பி! நான் கவனித்துக் கொள்கிறேன். நீ உயிர் பிழைத்துவிட்டாய் என்பது கூடச் சில நாட்கள் வரை வெளியில் தெரியாமல் இருந்தால் நல்லது" என்றார் பெரியவர்.

பெரியவர் வெளியே சென்ற பிறகு கூத்தன் சிந்திக்கலானான். முதல்நாள் அவன் மங்கையின் குடிலை நோக்கிச் சென்றது. முதல்நாள் அவன் மங்கையிடம் நடந்துகொண்ட முறையை நினைத்துப் பார்த்தான். அவள் தன்னைப் புதரில் பிடித்துத் தள்ளியதையும், தன்னை மிகவும் அலட்சியப் படுத்தியதையும் நினைத்துக் கொண்டான். தனது மோக வெறியை இப்போது நினைத்துக்கொண்டாலும் அவனுக்கு வெட்கமாக இருந்தது.

மங்கையைப் போன்ற உயர் குணமுடைய பெண் அவ்வாறு நடந்தது சரிதான் என்ற முடிவுக்கு வந்தான்.

எதிரி நாட்டுச் சதிகாரர்கள் மங்கையைப் பயன்படுத்திச் சக்கரவர்த்தியைக் கொல்லத் திட்டமிட்டிருப்பதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்ற வேகம் அவனுள்ளத்தில் எழுந்தது.

காலையில் தன்னைக் கோயிலிலுள்ளவர்கள் தேடியிருப்பார்கள். மன்னர் வந்திருக்கும்போது பூசை வேளையில் பதிகம் பாடாமல் தான் எங்கோ சென்றுவிட்டதாகக் கோபப்பட்டிருப்பார்கள். யார் பாடியிருப்பார்கள்?–இவ்வாறு பலபல எண்ணியவாறு இருந்த அவன் களைப்பு மிகுதியால் உறங்கி விழித்தெழுந்தபோது இரவு வெகு நேரமாகி விட்டிருந்தது. சோழ மன்னர் பரிவாரங்களுடன் திரும்பிச் செல்லும் ஆரவாரம் கேட்டது. கொள்ளிடத்தைக் கடந்து சென்றிருப்பார்கள். கூத்தன் பரபரப்புடன் துள்ளி எழுந்தான். என் உடனே திரும்பிவிட்டார்கள் என்று அறிய விரைந்தான்.

அவன் செல்வதற்குள் பரிவாரங்கள் வெகுதூரம் சென்றுவிட்டன. திகைத்து நின்ற கூத்தன் கண்களில் மங்கை தன் கூந்தலிலிருந்து, வீசியெறிந்த கொன்றை மலர்க் கொத்து மண்ணில் கிடப்பது தென்பட்டது.

கூத்தனுக்குப் புரிந்துவிட்டது. அரசப்பரிவாரங்களுடன் மங்கையும் செல்கிறாள். உதயன் தன் திட்டத்தை படிப்படியாக நிறைவேற்றிக்கொண்டு வருகிறான். உதயன் சதியைத் தக்க முறையில் வெளிப்படுத்த வேண்டும் என்று பரிவாரங்களுடன் சேர்வதற்கு ஓடோடிச் சென்றான்.

கூத்தன் அங்கு வந்து சேர்ந்த கதையையும், கூத்தன் உயிர்பிழைத்த விபரத்தையும் கேட்டறிந்த மங்கை விம்மி அழுதாள்.

அவள் ஏறி வந்த கூண்டு வண்டியும் தொலைவில் சென்று மறைந்தது.

"மங்கை என் அழுகிறாய்?" என்று கூத்தன் அவள் கரத்தைப் பிடித்தான். அவள் அவன் கரங்களை ஒதுக்கித் தள்ளவில்லை.

"நான் தங்களிடம் நடந்து கொண்ட முறை சரியில்லை. தங்களை வெறுத்தேன், கோபமாகப் பேசினேன். தங்களுக்கு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதற்கு நானும் ஒரு விதத்தில் காரணம்..." என்று கூறி மங்கை குலுங்கிக்குலுங்கி அழுதாள்.

"இல்லை, இல்லை... மங்கை. உன் மேல் தவறே இல்லை. ஓர் கன்னிப் பெண்ணிடம் குரு நிலையில் உள்ள ஒருவன் முறை தவறி நடந்து கொண்டிருக்கக் கூடாதுதான். உன் இசைப் புலமை என்னைக் கவர்ந்தது. உன் குரலினிமை என்னை மயக்கியது. உன் அழகு என் உள்ளத்தில் மோகத்தை வளர்த்தது. நிலை தடுமாறினேன்... நீ என்ன தண்டனையைக் கொடுத்தாலும் தகும்..." என்று கூறி அவள் விழிகளிலிருந்து பெரும் கண்ணீரை மெல்லத் துடைத்தான்.

மங்கை அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். கூத்தன் அவள் கூந்தலை வருடி. முதுகை மெல்லத் தடவினான். விம்மலால் குலுங்கிய அவளது மார்பகம் அவனது இதய ஒலியுடன் சேர்ந்து ஏதோ பேசியது. அவளுடைய கரங்கள் அவனது தோள்களில் அழுந்திப் பாதுகாப்பைத் தேடின.

வானத்திலே பிறைச்சந்திரன். கண்ணுக்கு எட்டிய தொலைவுவரை கொள்ளிட மணல் படுக்கை. காலையில் இருந்ததைவிட ஆற்றில் நீர் ஏற்றம் அதிகரித்திருந்தது. தொலைவில் தெரிந்த கரையோரம் அடர்ந்த மரங்கள். சுகமான காற்று.

"இந்த ஆற்று மணலில் இப்படியே இருந்து விடுவோமா?"– கூத்தன் கேட்டான்.

மங்கை மெல்லச் சிரித்தாள். மங்கிய நிலாவொளியில் அவளுடைய பல்வரிசைகள் முல்லை அரும்பினைப்போல் பளிச்சிட்டன

"என் விழிகளையும் தூக்கம் தழுவுகிறது. விடியும் வரை நாம் இங்கேயே இருந்து விடுவோமா?" மங்கையின் தூக்கம் பறந்தது. குழந்தைத்தனம் மிகுந்தது.

கூத்தன் அவள் பிணைப்பிலிருந்து மெல்ல விடுபட்டு, "மங்கை. விடியும் வரை நாம் இங்கே இருக்க முடியாது! முதலில் இந்த ஆற்றை நம்பமுடியாது. எந்த நொடியிலும் வெள்ளம் பெருகிவிடும். விடிவதற்குள் விளைவுகள் வேறு விதமாக மாறிவிடலாம். நாம் எங்காவது சென்று விட வேண்டும்..." என்று கவலையுடன் பேசினான் கூத்தன்.

"சிதம்பரத்திற்கே சென்று விடுவோமா?"–மங்கை கேட்டாள்.

"ஓ ஓ! சிதம்பரத்திற்கா? என்னைப் பார்த்தவுடன் உயிருடன் திரும்பி விட்டானே கூத்தன் என்று உதயன் பிரமிப்பான். தஞ்சைக்குச் செல்லாமல் திரும்பி விட்டாயே என்று உன்னிடம் சீறுவான். விளைவுகள் பயங்கரமாக அமையும்..." கூத்தன் கவலையுடன் தெரிவித்தான்.

"தஞ்சைக்குச் சென்று விடுவோம். சோழமன்னர் என்னைக் காணாமல் திகைப்பார். நீங்களும் நானும் சேர்ந்தே பாடிக்கொண்டு சிவத் தொண்டாற்று வோம்..." என்றாள் மங்கை.

"வேண்டாம், வேண்டாம் தஞ்சைக்குச் செல்ல வேண்டாம். அங்கு உன்னை உதயன் தேடிவருவான். அவனுடைய சதித்

திட்டத்தை நீ நிறைவேற்றும் கட்டாயம் ஏற்படும். மாபெரும் பாதகத்திற்கு நீ உடந்தையாக இருக்கப் போகிறாயா?" கூத்தன் கேட்டதும் மங்கை திடுக்கிட்டாள்.

"வேண்டாம், வேண்டாம், தஞ்சைக்குச் செல்ல வேண்டாம். வேறு எங்காவது சென்று விடுவோம். நீங்கள் அழைக்குமிடத்திற்கு நான் வருகிறேன். தெற்கே வெகு தூரத்திற்கு வெகு தூரம் சென்று விடுவோம். உங்கள் நிழலோடு நிழலாக நான் வாழ்நாள் முழுவதும் கழித்து விடுவேன். இசைபாடி இறைவன் தொண்டாற்றுவோம்" என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினாள். அவர்கள் பாதங்களை இப்போது நீர் சூழ ஆரம்பித்தது.

"மங்கை, பார்த்தாயா? சிறிது நேரத்திற்கு முன்பு காலடியில் மணல்பரப்பு. இப்பொழுது தண்ணீர். வாழ்க்கையும் அப்படித்தான். நாளை என்ன நடக்க வேண்டும் என்று முடிவு செய்பவன் ஆண்டவன். அந்தப் பரிபூரணனுக்குத் தொண்டு செய்து காலங்கழிப்போம். கொள்ளிடக்கரை ஓரமாக நடந்து சென்று அடுத்த கிராமத்தை அடைவோம். நாளைக்கு அங்குத்தங்கி பிறகு எங்குச் செல்வதென்று முடிவு செய்வோம்..." என்றான் கூத்தன்.

இருவரும் நடக்கத் தொடங்கினர். அவர்கள் கைகோத்து நடந்தனர். கிழக்கு வானம் வெளுத்தது. பொழுது புலரும் சமயம் அவர்கள் இருவரும் சிறிய கிராமம் ஒன்றை அடந்தனர்.

"கூத்தன், நான் மணிவாசகன்..." என்று அவன் நெருங்கிவந்து கூறிய பிறகே கூத்தன் புரிந்து கொண்டான்.

மணிவாசகனும் கூத்தனும் ஒன்றாக இலக்கணமும், இசையும் படித்தவர்கள். அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து ஏழு வருடங்களுக்கு மேலாகிவிட்டன.

கூத்தனின் நலனைக் குறித்து மணிவாசகனும், மணிவாசகன் நலனைப்பற்றிக் கூத்தனும் கேட்டறிந்தனர். பேசிக் கொண்டிருக்கும்போது மணிவாசகனின் பார்வை மலர்மங்கையின் பக்கம் பல முறை சென்றது.

மணிவாசகனின் பார்வையைத் தாங்கமுடியாத மங்கை முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

மணிவாசகன் மங்கையைப் பற்றிக் கேட்டறியத் துடித்தது அவன் முகத்தில் தெரிந்தது. கேட்டே விட்டான்.

கூத்தன் என்ன சொல்வான்? "மணிவாசகா, நான் எல்லாம் விபரமாகச் சொல்கிறேன். நாங்கள் இன்று இந்த கிராமத்தில் தங்கப் போகிறோம். இரவெல்லாம் உறக்கமில்லை. உடல் அமைதி வேண்டித் துடிக்கிறது. மனம் அமைதி வேண்டித் தத்தளிக்கிறது. பூரணமான ஓய்வு எங்களுக்குத் தேவை" என்றான்

மணிவாசகன் முகம் மலர்ந்தது. "கூத்தா, என் வீட்டிற்கு வா. சிறிய குடில்தான். அங்கே நீ தங்கலாம். நான் கோயிலுக்குச் சென்று பூசைக்குப் பறித்த மலர்களைக் கொடுத்துவிட்டு வருகிறேன்" எனறான்.

மணிவாசகனின் பூக்கடையில் உள்ள மலர்களிடையே கொன்றை மலர் சிரித்துக்கொண்டே வெளியே தலை நீட்டியது. மங்கையின் முகம் மலர்ந்தது.

"ஆ! கொன்றை மலர்" என்று குழந்தை போல் கூவி, குடலையிலிருந்து கொன்றை மலரொன்றை எடுக்கக் கரத்தை நீட்டினாள்.

"இந்த மலர் இறைவனுக்கு பூசைக்கு முன்பு முகரக் கூடாது..." என்று மணிவாசகன் கூறியவுடன் மங்கையின் முகம் சிறுத்தது.

மணிவாசகன் வீட்டை நோக்கி கூத்தனும், மங்கையும் சென்றனர். அழகிய சிறிய குடிசை. சிறிய திண்ணை, பூசணிக்கொடி வீட்டுக்கூரையில் படர்ந்திருந்தது. வீட்டுத் தோட்டத்தில் கொன்றை மலர்! மங்கையின் முகத்தில் மீண்டும் மலர்ச்சி.

"மணிவாசகா, நாங்கள் சற்று நேரம் ஒய்வு எடுத்துக் கொள்கிறோம். நீ கோயிலுக்குச் சென்று திரும்பி வந்த பிறகு நாள் முழுவதும் பேசலாம்..." என்றான்.

மணிவாசகன் திரும்பி வந்தபோது வாயில் திண்ணையில் கூத்தனும், உள்ளே மங்கையும் தங்களை மறந்து உறங்கிக் கொண்டிருந்தனர்.

மங்கையின் அழகை அமைதியாக ரசித்தான் மணிவாசகன். 'கூத்தன் பெரும்பாக்கியசாலி. இவ்வளவு அழகிய மங்கை அவனுக்குக் காதலியாக அமைந்து விட்டாளே' என்று நினைக்கும்போது அவன் உள்ளத்தில் பொறாமைத் தீ முண்டெழுந்தது.

13. ஆணையும் ஆட்சியும்

வானம் இருண்டு, இடி இடித்துப் பெரு மழை பெய்தது. மேற்கே அடர்ந்து கருத்த வானம் பிரளயத்தையே கொண்டு வந்தது போல் பெரு மழையைக் கொட்டியது.

காவிரியில் வெள்ளம் இரு கரைகளையும் தழுவி ஓடியது. திசை நதிகளிலெல்லாம் கரையை மீறிப் பெருக்கெடுத்தது. கரிகாலன் கட்டிய அணைகளையும் மீறிக் காவிரி ததும்பி நின்றது.

கண்டராதித்தரைச் சந்திக்க பழுவேட்டரையர் வந்தார். நல்லவேளையாக அவர் களாயைக் கடந்து வந்த பிறகே கொள்ளிடத்தில் கடக்க முடியாத அளவுக்கு வெள்ளம் சென்றது.

பழுவேட்டரையருடன் அரிஞ்சயனும் வந்தான். பழுவேட்டரையரின் கோபதாபங்கள் தனிந்திருந்தன. கண்டராதித்தர் மகிழ்ச்சியுடனில்லாவிட்டாலும், தன் இளவல் அரிஞ்சயன் வந்திருப்பதறிந்து அவனை வரவேற்றுக் கட்டித் தழுவி நலன்களை விசாரித்தார்.

சிதம்பரத்தினின்று விரைவிலேயே அரசர் திரும்பிவிட்டது குறித்துப் பழுவேட்டரையர் அவரிடம் விசாரித்தார். சிறிது நேரம் நாட்டு வளப்பம் குறித்தும் பொதுவாகப் பேசிய பழுவேட்டரையர் முக்கிய செய்தி ஒன்றைத் தெரிவித்தார்.

இராட்டிரகூட நாட்டினின்று படைகள் அணிவகுத்து வரும் செய்தி தான் அது.

பழுவேட்டரையர் உள்ளத்தில் அந்தச் செய்தி குறித்து பரபரப்பும் கவலையும் இருந்தாலும் அவர் மிக அமைதியுடன் பேசினார்.

"சக்கரவர்த்தி அவர்களே! தங்கள் தந்தை பராந்தகர் காலத்தில் புலிக் கொடி காளத்திக் குன்றுகள் வரையில் பறந்தது. தொண்டை மண்டலம் நமது ஆட்சிக்குட்பட்டிருந்தது. கடந்த சில ஆண்டுகளில் இராட்டிரகூடர்கள் கொஞ்சங் கொஞ்சமாகத் தங்கள் கொடியை நமது பூமியில் பறக்கவிட்டு வருகிறார்கள். என்ன துணிவு

இருந்தால் பாலாற்றங்கரையில் அவர்கள் சிறிதும் கவலையின்றித் தங்கியிருப்பார்கள்" என்றார் பழுவேட்டரையர்.

கண்டராதித்தன் மௌனமாக இருந்தார். பழுவேட்டரையர் எதைச் சுட்டிக் காட்டுகிறார் என்பது அவருக்குப் புரிந்தது. சோழர்ப் படைகள் வலிமைக் குன்றியிருப்பதை அவர் மறைமுகமாகக் கூறுகிறார் என்பது அவருக்குப் புரியாதா? சிறிது நேர அமைதிக்குப் பிறகு அவர் சொன்னார்.

"பழுவேட்டரையரே சமாதானமாக வாழ முயல்வோம். சமாதானக் காலத்தில் படைவீரர்களைச் சேர்த்து வைத்து அவர்களுக்குச் செய்யும் செலவைப் பழுதடைந்த கோயில்களைச் சீர்படுத்த செலவு செய்யலாம். அப்பப்பா! சோழநாட்டுக் காவிரிக் கரை ஓரமாக மட்டும் எவ்வளவு கோயில்கள் பழுதடைந்து நித்ய நைவேத்ய ஆராதனைக்கு வழி இன்றி இருக்கின்றன. அவற்றைச் சீர்படுத்த வேண்டும். அதற்காகக் கருவூலத்திலிருந்து செலவு செய்ய விரும்பும் எனது எண்ணம் எளிதில் நிறைவேறாது போலிருக்கே..." என்று குறைபட்டுக் கொண்டார்.

'சோழ நாட்டு மாமன்னர் போரைப் பற்றி! இப்படி நினைக்கிறாரே! இவரது மூதாதையாகள் எத்தகைய வீரதீர பராக்கிரமங்களைப் புலப்படுத்தி எட்டுத் திக்கிலும் சோழர்ப் புகழை நிலைநாட்டினர். பராந்தக சோழரின் புதல்வரா இப்படிப் பேசுகிறார்?' என்று பழுவேட்டரையர் நினைத்தார். ஆனால் சினங் கொள்ளவில்லை. கண்டராதித்தர் உள்ளம் அவருக்கு இப்பொழுது மிக நன்றாகப் புரிந்திருந்தது. சிவசிந்தனையன்றி வேறு நினைக்க விரும்பாத அவர் போக்கை மாற்றுவது அவ்வளவு எளிதல்ல என்று முடிவு செய்த பழுவேட்டரையர், "மன்னர் பிரான் அவர்களே! கோயில்களைப் பழுது பார்த்து, நித்ய பூஜைகள் செவ்வனே நடக்கச்செய்வது முதன்மையான காரியம்தான். ஆனால் அதற்குள்

எதிரிகள் நம் நாட்டையே அபகரித்துக் கொண்டு விடுவார்களே! இரண்டு மூன்று ஆண்டுகளாகவே தொண்டை நாட்டினின்று நமக்கு உரிய திரைப் பொருள்கள் பொன்னும், பொருளும் கருவூலத்திற்கு வந்து சேரவில்லை. கருவூலத்தில் பொருள் இருந்தால் தானே கோயில் திருப்பணிக்குச் செலவிடலாம்?" என்றார்.

பழுவேட்டரையர் சொல்வதும் நியாயமாகப் பட்டது. 'ஆனால் போர்க்களத்தைப் பற்றியே நினைக்கத் தோன்றவில்லையே' என்று கண்டராதித்தன் எண்ணினார்.

"பழுவேட்டரையர் அவர்களே! ஓர் அரசருக்கு உள்ள கடமைகளுள் தலையாயது நாட்டைப் பாதுகாப்பது. எல்லையிலே எதிரியை வைத்துக் கொண்டு அவர்களை முறியடித்து ஓட்டாமலிருப்பது சரியல்ல. நமது எல்லையைப் பாண்டியர்கள் கவர்ந்திருக்கிறார்கள் என்பதை அறிவேன். தங்கள் திட்டங்களையும் யோசனையையும் நான் முழுவதுமாக வரவேற்கிறேன். அந்தப் பொறுப்பைத் தங்களிடம் ஒப்படைத்துவிட்டு மேற்குத்திசை ஊர்களுக்கெல்லாம் செல்ல முடிவு செய்துள்ளேன்" என்று மன்னர் கூறியபோது பழுவேட்டரையருக்கு அரசரின் போக்கில் ஏற்பட்ட மாறுதல் வியப்பை அளித்தது.

வியப்பினின்று அவர் மீளுவதற்கு முன்பே, தொடர்ந்து மன்னர் கூறியது அதிர்ச்சியை அளித்தது.

"பழுவேட்டரையர் அவர்களே! சிதம்பரத்து நிகழ்ச்சிகளைத் தங்களிடம் சொல்லாமல் நான் வேறு யாரிடம் சொல்வது?" என்று கூறிச் சிதம்பரம் நகரை அடைந்தது முதல் மீண்டும் திரும்பி வந்தது வரை நடந்தவற்றைத் தெரிவித்து மங்கை இன்னும் தஞ்சைக்கு வந்து சேராததைத் தெரிவித்தார்.

"அவள் எங்கே என்று நமது வீரர்களால் இன்று வரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவள் எங்கே? அவளை யாராவது கவர்ந்து சென்று விட்டார்களா? நமது நாட்டில் ஒரு பெண்ணுக்கு ஆபத்து என்பதை நினைக்கவே முடியவில்லை. அந்தப் பெண்ணை உடனே கண்டுபிடித்து அழைத்து வருவதற்கான முயற்சிகளைச் செய்யுங்கள். அவளைக் கண்டு பிடித்த பிறகுதான் மற்ற பணிகள் என்று உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

மீண்டும் தொடர்ந்து: "ஓர் இளமங்கையைப் பற்றி எனக்கு அவ்வளவு கவலையா என்று நீங்கள் வியப்படையலாம். ஆனால், அவளுடைய குரலினிமையையும் இறைவன் மீது அவள் நெஞ்சுருகப் பாடும் நேர்த்தியையும் நீங்கள் கண்டிருந்தால் ஓர் அரிய மானிக்கத்தை இழந்து விட்டோமே என்று நினைப்பீர்கள்" என்றார்.

"பழுவேட்டரையர் அவர்களே! தங்கள் பலத்தையோ, வீரத்தையோ, திறமையையோ நான் குறைவாக மதிப்பிடவில்லை. சோழ நாட்டின் பெருமைக்கும் புகழுக்கும் தங்கள் வீரமல்லவா காரணம். இளைஞர்களுக்கு வாய்ப்பளியுங்கள். தங்கள் அனுபவத்தையும், போர்க்களத்தில் எப்படியெலலாம் நடந்து கொள்ள வேண்டும் எனும் முறையையும் , திறமையாகத் தங்கள் திட்டத்தையும் அவர்களுக்குக் கற்றுத் தாருங்கள். காஞ்சிப் போர்க்களத்திற்கு நானும் என் இளவல் அரிஞ்சயனும் சேர்ந்தே புறப்படுகிறோம். சோதிடரை அழையுங்கள். நல்ல நாளை உடனே பார்த்துத் தெரிவிக்கச் சொல்லுங்கள். சிதம்பரம் நடராசர் திருமுன்பு அரிஞ்சயனுக்கு இளவரசப் பட்டத்தைச் சூட்டுகிறேன். சோழ நாட்டு இளவரசன் அரிஞ்சயன் தனது முதல் விஜயமாக வடக்கு நோக்கிச் செல்லட்டும்..." என்று அரசர் உணர்ச்சி மேலிடப் போசினார்.

வெளியே அண்டபகிரண்டமும் அதிரும்படி இடிஇடித்தது. பழுவேட்டரையருக்கு என்ன மறுமொழி கூறுவது என்றே

தெரியவில்லை. மழை நின்ற பாடில்லை. ஆறுகளில் வெள்ளம் தணியவில்லை. ஆற்று வெள்ளம் குறையும் வரை படைகளை நடத்திச் செல்ல முடியாது. அதற்குள் திட்டமிடுவோம்... என்று முடிவு செய்தார் என்றாலும் அவருள்ளம் அவரைக் கேட்டுக் கொண்டே இருந்தது. 'அரசரின் மனமாற்றத்திற்குக் காரணம் என்னவாக இருக்கும்? மந்திரி மண்டலத்தார் என்ன முடிவு கூறுகிறார்களோ?'

மழை நின்றது. தங்கக் கதிரவன் சிரித்தபடி வானில் மீண்டும் விஜயம் செய்தான். மக்கள் கறுகறுப்பாக இயங்கத் தொடங்கினர்.

மந்திரி சபையைக் கண்டாரதித்தர் கூட்டினார். அன்றைய கூட்டத்தில் அடுத்து இளவரசப் பட்டத்திற்கு அரிஞ்சயனை நியமிப்பது குறித்து அரசர் தன் கருத்தைத் தெரிவித்தார். மகிழ்ச்சிகரமான செய்திதான் என்றாலும் அமைச்சர்கள் ஒருவருக்கொருவர் நோக்கியவாறு மௌனமாக இருந்தனர். அமைச்சர்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்காது மௌனமாக இருந்தது பழுவேட்டரையருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

கூட்டத்தில் இருந்த மௌனத்தை அரிருத்தர் கலைத்தார். தொண்டையை மெல்லக் கனைத்தார்.

"அன்பார்ந்த எனது சக அமைச்சர்களே! இன்றைய கூட்டம் சோழ வரலாற்றில் மிக முக்கியம் வாய்ந்ததாகும். நமது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய மன்னர் பிரான் அவர்கள் சிதம்பரம் சென்று தில்லை நடராசப் பெருமானின் திருஉளத்தை அறிந்து வந்திருக்கிறார்கள் நம்மிடையே இது வரையில் இருந்த குழப்ப மனநிலை ஒரு வகையில் தீர்ந்தது. குறிப்பாகப் பழுவேட்டரையருக்கும் மிகுந்த மகிழ்ச்சி." என்று கூறி வரும் போது பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு

"அதென்ன, எனக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் மிகுந்த மகிழ்ச்சி என்று கூறுகிறீர்கள் அநிருத்தரே! உம்முடைய இயற்கையான குணப்படி பேச்சில் பொடி வைக்கிறீர்களே..." என்றார் சற்றுக் கோபமாக.

அநிருத்தர் புன்முறுவலுடன், "என் பேச்சு எப்பொழுதும் நியாயமானதாக இருக்கும்... அரிஞ்சயன் தங்களுடைய பெண் வயிற்றுப் பெயரனல்லவா? தங்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சியின் அளவு அதிகம்தானே. அதைத்தான் குறிப்பிட்டேன். அதுவுமல்லாமல் சோழ நாட்டில் இளவரசர் பட்டம் குறித்த வாதப் பிரதி வாதங்களுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது..." என்றார்.

பழுவேட்டரையர் திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை. அநிருத்தர் ஏதோ ஒரு புதிய பிரச்னையைக் கிளப்புகிறார். என்று எண்ணினார்.

"இதற்கு முன்பு வாதப்பிரதிவாதம் என்றாவது ஏற்பட்டதா? அல்லது கட்சி கட்டிப் பேசுகிறார்களா! என்று" பழுவேட்டரையர் கோபமாகக் கேட்டார்.

அநிருத்தர் சிரித்தார். "அப்படிச் சொன்னேனா? சொல்வேனா? அரிஞ்சயன் தங்களுடைய பெண் வயிற்றுப்பெயரன். அரிஞ்சயன் இளவரசராக வேண்டும் என்பது தங்களுடைய நெடு நாளைய ஆசை. நமது மன்னருக்கு இன்னும் புத்ர பாக்யம் கிடைக்கவில்லை என்பதனால், தங்கள் பெயரனை இளவரசராகப் பட்டம் சூட்ட விரும்பினீர்கள். மன்னருக்கும் புத்ரபாக்யம் ஏறப்டாவிட்டால் தங்கள் பெயரன் தான் இப்பொழுது இளவரசர்; பிறகு இந்தச் சோழநாட்டு மாமன்னர். ஆனால்.... போற்றுதற்குரிய நமது அரசியார் செம்பியன் மாதேவியார் ஆண்டவன் அருளால் சூலூற்றிருக்கிறார்..." என்று கூறி நிறுத்தினார்.

அவரை மேலே பேச விடாமல் பழுவேட்டரையர் தடுத்தார்.

"நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அரசியாருக்குக் குழந்தை பிறக்கும் வரையில் இளவரசப் பட்டம் சூட்டுவதை நிறுத்தி வைக்கச் சொல்கிறீர்கள். அப்படித்தானே?" என்று கர்ஜித்தார்.

அநிருத்தர் கோபங் கொள்ளவில்லை. "பழுவேட்டரையர் அவர்களே! நான் அப்படிச் சொல்வேனா? நமது மாமன்னரே முடிவு செய்த பிறகு இளவரசப் பட்டமேற்கும் நிகழ்ச்சியை என் தள்ளிப் போட வேண்டும்? நான் கூற வந்தது அதுவல்ல; செம்பியன் மாதேவியார் திருவயிற்றில் உதிக்கப் போவது ஆண் மகவாக இருந்துவிட்டால் அடுத்துப் பட்டத்திற்குப் போட்டி ஏற்படுமல்லவா? பிறகு போட்டியில்லாமல் இப்பொழுதே முடிவு செய்துவிட்டால் நல்லதல்லவா?" என்றார். குரலில் அமைதி அழுத்தம் யாவும் ஒலித்தன.

பழுவேட்டரையர் கோபத்துடன் ஏதோ கூற முயன்றார். மற்ற அமைச்சர்களும் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டனர். அநிருத்தர் பேச்சைப் பலரும் ஆதரித்தனர்.

கண்டராதித்தர் சபையில் அமைதியை நிலை நாட்ட விரும்பினார். தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"அம்பலவாணர் திருவுளம் என் இளவல்தான் அடுத்து இளவரசராக வேண்டும் என்றிருக்கிறது. இளவரசராயிருப்பவர் தாம் அடுத்துப் பரகேசரி பட்டம் பூண்டு மன்னராக வேண்டும். அதுதான் மரபு. ஒரு வேளை ஆண்மகவு பிறந்து விட்டால், என் புதல்வனை நான் வளர்க்கும் விதமே வேறு தான். அவனை ராஜ்ய ஆசை அற்றவனாக வளர்க்கப் போகிறேன். அவன் சிவநெறிச் செல்வனாக விளங்குவான். நாட்டை ஆளும் ஆசையற்றவனாக சிவராஜதனியில்

ஒரு தொண்டனுக்குத் தொண்டனாக விளங்கவே விரும்புவான். அவ்வாறு நாங்கள் வளர்ப்போம். அதனால் எனது அன்பார்ந்த மந்திரிப் பிரதானிகளே, கவலைப்படாதீர்கள்! அநிருத்தரே தங்கள் அச்சம் நியாயமானது, தீர்க்க தரிசனமாகக் கேட்டீர்கள். ஒரு நாளும் என் மகன் சோழ அரியணைக்குப் போட்டியாக வரமாட்டான். எம்பெருமான் நடராஜர் திருவுளப் பாங்கிற்கு விரோதமாக ஏதும் நடைபெறாது. அமைச்சர் பெருமக்களே! இரண்டு ஓலைநறுக்குகளில் ஒன்றில் அரிஞ்சயன் பெயரை எழுதினேன். மற்றொன்றில் ஒரு வேளை எனக்குப் பிறப்பது மகன் என்றே எண்ணி பிறக்கும் மகனுடைய பெயரை எழுதினேன். ஆடவல்லான் திருவுள்ளம் அரிஞ்சயன் பேரிலேயே இருக்கிறது. அதனால் நாம் அரிஞ்சயனுக்கே இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டும். அதையும் உடனே செய்ய வேண்டும்..." என்று கண்டிப்பாகக் கூறினார்.

சபையில் அமைதி நிலவியது. பழுவேட்டரையர் "ஆஹாஹாரம்!" செய்தார். அனைவரும் அவரைத் திரும்பிப் பார்த்தனர். அவர் ஏதோ சொல்லப் போகிறார் என்று ஆவலுடன் எதிர்பார்த்தனர். அநிருத்தருக்கும், அவருக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சினர்.

பழுவேட்டரையர் உறுதியான குரலில், "அரிஞ்சயன் என் பெயரன் என்பதனால் அவன் சோழ நாட்டை வருங்காலத்தில் ஆள வேண்டும் என்பது எனக்கு ஆசையே இல்லை. ஆண்டவன் அருளால் அரசியார் திருவயிற்றில் உதிக்கும் ஆண்மகவு வளர்ந்து தக்க பருவம் அடைந்து வரும் வரையில் தான் அரிஞ்சயன் இளவரசனாகப் பதவியில் இருப்பான். பிறகு நியாயமான வாரிசுக்கு இடமளித்துவிட்டு விலகிக் கொள்வான். இது உறுதி. இது சத்தியம்.

இந்த வாளின் மேல் ஆணை. அரிஞ்சயனையும் அவ்வாறே ஆணையிடச் செய்கிறேன்" என்றார்.

சபையினர் கரஒலி எழுப்பினர். "ஆஹா ஆஹா" என்று உணர்ச்சி மேலீட்டால் கூவினர். மகிழ்ச்சி வெள்ளம் சபையை நனைத்தது.

அப்பொழுது, ஒற்றர்ப் படைத் தலைவரிடமிருந்து முக்கியமான செய்தி ஒன்று வந்தது.

பாலாற்றங்கரையில் கண்டு இறங்கியிருக்கும் இராட்டிரகூடப் படைகள் வெள்ளம் வடிவதை எதிர்பார்த்து, மேலும் தெற்கு நோக்கி முன்னேற இருக்கின்றனர் என்றும், சோழ நாட்டில் இராட்டிரகூடர்களின் கையாட்களாக உலவி வந்த சிலரைச் சிறைப்படுத்தி இருப்பதாகவும் செய்தி கொண்டு வந்தவன் தெரிவித்தான்.

சபை மீண்டும் மௌனத்திலாழ்ந்தது. கண்டராதித்தர் என்ன சொல்லப் போகிறார் என்று அனைவரும் அவரையே நோக்கினர்.

"பழுவேட்டரையரே! நமது ஒற்றர்ப்படைகள் மிகவும் திறமை மிகுந்தவைதாம். ஆனால், காணாமல் போன ஒரு பெண்ணைக் கண்டு பிடிப்பதில்தான் தங்கள் சாமர்த்தியத்தை அவர்கள் காட்டவில்லை..." என்றார் மன்னர்.

"அரசே! அந்தப் பாடினிப் பெண்ணைக் கண்டு பிடித்துத் தங்களிடம் கொண்டு சேர்க்கும் பொறுப்பை நான் ஏற்கிறேன். இப்பொழுதே புறப்படுகிறேன்" என்றார் பழுவேட்டரையர்.

கண்டராதித்தர் கையமர்த்தி, "பழுவேட்டரையரே! சோதிடரை உடனே அழையுங்கள். அரிஞ்சயனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டும் விழாவிற்கு உடனே நாள் பார்க்க வேண்டும். சிதம்பரத்தில் நடை

பெறும் விழா முடிவடைந்தவுடன் அரிஞ்சயனும் நானும் வடக்கு நோக்கிப் படைகளுடன் புறப்படுகிறோம்; எதிரிகளை ஒட்டி விட்டே திரும்புவோம்..." என்றார். சபை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கலைந்தது.

அரண்மனைச் சோதிடர் வந்தார். நீண்ட நேரம் அரிஞ்சயன் ஜாதகத்தை அலசிப் பார்த்துச் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு, "அரிஞ்சயன் திரு நட்சத்திரப்படி இளவரசர் பட்டமேற்கத் தக்க நாளே பல மாதங்களுக்கு இல்லை. மேலும் அரிஞ்சயன் உடனே போர்க்களத்திற்குப் புறப்படக் கூடாது. கிரக நிலை சரியாக இல்லை" என்று கூறினார்.

பழுவேட்டரையர் முகம் கறுத்தது. சோதிடரை விழுங்கி விடுபவர் போல் பார்த்தார். ஆனால் கிரகபலனை எதிர்த்துப் பேச முடியுமா?

சொன்னது போல் பழுவேட்டரையர் மலர்மங்கையின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து விட்டார்.

ஆனால், வெண்ணெய் திரள்வதற்குள் தாழி உடைந்து விட்டது.

14. இறைவன் செயல்

மணிவாசகன் தனது பிள்ளைப் பிராய நண்பன் என்ற முறையில் கூத்தன் நடந்த சம்பவங்களை விடாமல் எடுத்துச் சொன்னான். மணிவாசகன் உள்ளத்தில் முன்பே மூண்டிருந்த கனல்

மேலும் கொழுந்து விட்டெரித்தது. மங்கையைத் தானே அடைந்து விட வேண்டும் என்ற மூர்க்கமான எண்ணம் கிளர்ந்து நின்றது. அத்துடன் கூத்தன் அடையக் கூடாதென்று உறுதியும் நிறைந்திருந்தது.

மங்கையைத் தன் பேச்சுக் கவர்ச்சியால் கவர முயன்றான். அவளுக்குப் பிடித்தமான கொன்றை மலரைப் பறித்து வந்து அளித்தான். முதல் நாள் மலரை எடுத்த அவள் கரங்களில் படுமாறு நீட்டினான். மறுநாள் அவள் எதிர்பாராத நிலையில் அவள் பின்புறமாக வந்து அவள் கூந்தலில் சூட்டினான்.

மங்கை திடுக்கிட்டுத் திரும்பினாள். மணிவாசகன் மெல்ல நகைத்து, "கூத்தனுக்கு அழகு ரசனை இல்லை என்று நினைக்கிறேன். ஒரு நாளாவது உனக்கு இதுபோல் மலர் சூட்டி இருக்கிறானா?" என்று கேட்டான்.

தன் உள்ளத்தில் எழுந்த சினத்தை வெளியே புலப்படுத்தாமல், மெல்லப்புன்னகையை வரவழைத்துக் கொண்டு "அதனாலென்ன? அவர் எனக்கு மணமாலையையே சூட்டப் போகிறார்" என்று அமைதியாகச் சொன்னாள்.

"உன்னை அவன் திருமணம் புரிந்து கொள்ளப் போகிறானா?" என்று வியப்புடன் கேட்டான் மணிவாசகன். அது பொய் நிறைந்த கேள்வி என்று மங்கை புரிந்து கொள்ளவில்லை.

"ஆமாம்! அதில் என்ன சந்தேகம்?" மங்கை கேட்டாள்.

"சரி, சரி. அவன் கூறியவற்றை உன்னிடம் சொல்லக் கூடாதென்று அவன் என்னிடம் நேற்று சொன்னான்..." என்றான் மணிவாசகன்.

"ஓ! அவர் சொல்லக்கூடாது என்று சொன்னதை என்

சொல்கிறீர்கள்?" மங்கை கேட்டாள். அவள் கேள்வியில் எரிச்சல் இருந்தது.

"என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. உன் நல்வாழ்வு எனக்குப் பெரிதாகத் தோன்றியது..." என்று மெல்ல அவளை நெருங்கினான்.

"என் நல்வாழ்வைப் பற்றி அவருக்குத் தெரியும். எனக்கு எது நன்மை, எது தீயவை என்பதையும் அவர் அறிவார்"

"எனக்கு அப்படித் தோன்றவில்லை. அவன் மறுபடியும் சிதம்பரத்திற்குப் போய்விடப் போகிறானாம். தில்லை நடராசனைத் தரிசிக்காமல் அவனால் இருக்க முடியவில்லையாம்..."

மணிவாசகன் இவ்வாறு கூறியவுடன் மங்கை திடுக்கிட்டாள். நடராசரைத் தரிசிக்காமல் இருக்கக் கூத்தனால் முடியாது என்பது உண்மைதான். ஆனால், உதயனும் மதுவனரும் அங்கே உள்ளவரை அவர் சிதம்பரம் செல்லமாட்டார் என்பதை அவள் அறிவாள். எனினும் மணிவாசகனிடம் இருந்து மேலும் செய்திகளைக் கேட்டு அறிய விரும்பினாள்.

"அவர் சிதம்பரம் செல்ல விரும்பமாட்டார். எனக்கு உறுதியாகத் தெரியும். அவரும், நானும் இன்னும் இரண்டு நாட்களில் இங்கிருந்துப் புறப்படுகிறோம்" என்றாள் மங்கை.

மணிவாசகன் மெல்லச் சிரித்தான். "அதுதான் இல்லை. இரண்டு நாட்கள் கழித்துக் கூத்தன் சிதம்பரம் சென்றுவிடுவான் உறுதி..." என்றான். பிறகு, "நீயும் அவனுடன் செல்ல வேண்டியதுதான்..." என்று கூறி அவளைப் பார்த்தான்.

"நான் சிதம்பரம் போக மாட்டேன். நான் தஞ்சைக்குச் சென்று விடுவேன்..." என்றாள் மங்கை.

"அதுதான் சரி. தஞ்சைக்கு நீ மட்டுமா செல்லப் போகிறாய்?" மணிவாசகன் கேட்டான்.

"ஆமாம்! என்னை மட்டும்தான் அரசர் அழைத்தார்" என்றாள் மங்கை.

"நான் ஒன்று சொல்வேன் கேட்கிறாயா?" மணிவாசகன் கேட்டான். தலையசைத்தாள் மங்கை.

"தஞ்சைக்கு நீ செல்ல வேண்டாம். அங்கு அந்தப் புரத்தில் நூறு பேரோடு நூற்று ஒன்றாக நீ இருப்பாய்..."

"இருந்தாலும் என் ஒருத்திக்குத்தான் இசை ஞானம் இருக்கிறது. மன்னர் என் இசையை அனுபவிக்க விரும்புகிறார்... அதனால் நூற்று ஓராவது பெண்ணாக இருந்தாலும் தனி மதிப்புடன் இருப்பேன்..."

"உன் இசையை விரும்பி உன்னைத் தஞ்சைக்கு அழைக்கவில்லை. உன் அழகை விரும்பித்தான் அழைத்திருக்கிறார்கள். அங்கே உன் இசையை யார் விரும்பப் போகிறார்கள். நீ இந்தச் சிறு கிராமத்தில் இருந்தால் அரசிபோல் வாழலாம்..."

மங்கை இதைக் கேட்டுக் களுக்கென்று சிரித்தாள். "அப்படியானால் அரசர் யார்?" என்று கேட்டாள்.

மணிவாசகன் முகத்தில் கம்பீரம் மிக, "நான்தான், ராஜா! இந்த ஊர் சிறியதே தவிர, கோயில் பெரியது. கோயிலில் நான் வைத்ததுதான் சட்டம்" என்று கூறிய மணிவாசகன் குரலில் குழைவை வரவழைத்து, "மங்கை, நான் மனம்விட்டுச் சொல்கிறேன், கூத்தனுக்கு உன்னைப் போன்ற அழகி கிடைத்திருப்பது எனக்குப்

பொறாமையாகத்தான் இருக்கிறது. அவனை நீ மறந்து விடு. இரண்டு நாட்கள் அவன் கண்களில் படாமல் மறைந்திரு. அவன் சிதம்பரம் சென்று விடுவான். பிறகு உன்னை மறந்து விடுவான். நாமிருவரும் இங்கே இன்பமாக வாழலாம்..." என்றான். அவன் குரலில் இப்பொழுது குழைவு, கெஞ்சல் இருந்தன.

மணிவாசகன் நிலையை எண்ணி அவன்மீது கோபப்படுவதா பரிதாபப்படுவதா என்று அவளுக்குத் தெரியவில்லை. அந்தக் கணத்தில் இருந்து அவனிடமிருந்து விடுபட எண்ணினாள். முக உணர்ச்சியை மாற்றிக்கொண்டு, "நான் யோசித்துத்தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். மனம் என்பது அடிக்கடி மாற்றிக் கொள்ளக்கூடிய பாண்டம் அன்று" என்றாள்.

"நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வா... மனம் திறந்து பேசும் மாசற்ற என் கோரிக்கையை நன்றாக யோசித்து ஒரு முடிவுக்கு வா... உன் வருங்காலத்தை மனத்தில் எண்ணிப்பார். உனக்கு ஏற்படவிருக்கும் நன்மையை நினைத்து ஒரு நல்ல முடிவுக்கு வா..." என்று மணிவாசகன் உருக்கமாகப் பேசினான்.

மங்கைக்கு ஏற்பட்ட வேதனையைச் சொல்லி முடியவில்லை. பெண்களுக்கு அழகு ஒரு விரோதி. தான் அழகியாக இருப்பதால்தான், சதித் திட்டத்திற்கு என்னைப் பயன்படுத்த உதயன் கூடலியில் இருந்து அழைத்து வந்தார். என் அழகில் மயங்கித்தானே கூத்தன் என்னைத் தொடர்ந்து ஓடி வந்தார். ஒரு வேளை என் அழகில் மயங்கித்தான் மன்னரும் என்னைத் தஞ்சைக்கு அழைக்கிறாரா? இப்போது இந்த மணிவாசகன்! அமைதியாகப் கிராமத்தில் கோயில் உண்டு, தானுண்டு என்றிருந்தவனை என் அழகு மதிமயக்கி விட்டது. இறைவா! என் அழகை அழித்துவிடு. இல்லாவிடில் என்னையாவது உன்னிடம்

அழைத்துக்கொண்டு விடு. தாய் தந்தையற்ற எனக்கு இந்த உலகில் நீதான் ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் இருந்து காப்பாற்ற வேண்டும்"

மலர்மங்கை சிந்தித்தாள். என்ன செய்வதென்றே அவளுக்குத் தோன்றவில்லை. கூத்தன் வந்தான். அவள் முகவாட்டம் அறிந்து பதறிப் போனான். காரணம் கேட்பதற்கு முன்பே மங்கை முந்திக் கொண்டாள்.

"எப்பொழுது சிதம்பரம் பயணம்?" என்றாள் முகத்தைத் திருப்பிக் கொண்டு.

"நிஜமாகத்தான் கேட்கிறாயா? உனக்குச் சிதம்பரத்திற்கு செல்ல வேண்டும் என்று ஆசையிருக்கிறதா? உதயனையும் மதுவனனையும் சந்திக்காமல் ஒருநாள்கூட இருக்க முடியவில்லை அல்லவா?" என்று கூத்தன் கேட்டான்.

"அப்படி ஒன்றுமில்லை. உங்களுக்குத்தான் தில்லை நடராசரைத் தரிசிக்கமால் இருக்க முடியவில்லை. அதனால் தான் சிதம்பரம் செல்ல ஏற்பாடு செய்கிறீர்கள்" என்று மங்கை முகத்தைத் திருப்பாமலே கேட்டாள்.

கூத்தன் அவளருகே வந்து, அவள் முகத்தைத் திருப்பி, "மங்கை! திடீரென்று உன் பேச்சில் மாறுதல் தெரிகிறதே, என்ன காரணம்?" என்று கேட்டான். அவன் ஸ்பரிசம் பட்டவுடன் மங்கையின் உடல் சிலிர்த்தது. அவள் திடீரென கூத்தனின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மியவாறு, "நாம் இங்கே இருக்க வேண்டாம். போய்விடுவோம். போய்விடுவோம். உங்கள் நண்பரைக் கண்டால் எனக்குப் பயமாக இருக்கிறது. அவர்தான் சொன்னார், நீங்கள் என்னை விட்டு விட்டுப் போய்விடப் போவதாக" என்றாள்.

கூத்தன் அவள் முதுகை ஆதரவாகத் தடவி, "உன்னை, விட்டுப் போக எனக்குப் மனத்தியமா? சிறையாத்தில் நடராசனைத் தரிசிக்காமல் என்னால் ஒரு நாள்கூட இருக்க முடியாது என்பது உண்மையே ஆனால் இப்பொழுது நான் அந்த அம்மையாரைப் பிரிந்து இருக்கிறேன். காரணம் எனக்கு இனி நீதான் சிறையாம். எனக்கு நீதான் அம்மையார். நீ தான் திருப்பதியும். நீ தான் இசை. குறிஞ்சியும், காந்தாரமும் நீ தான். மணியாசகருடைய உண்மைச் சொரூபத்தை இப்பொழுதுதான் நான் உணர்ந்தேன். அவன் என்னிடம் என்ன சொன்னான் தெரியுமா? நீ என்னை விட்டு இரவோடு இரவாக ஒடிப்போய்விடப் போவதாகவும் உனக்குச் சிறையாத்தில் உதவனைப் பிரிந்திருக்க முடியவில்லையாம். இன்னும் கூட ஒன்று சொன்னான்: அதை என் வாயால் சொல்லக் கூசுகிறது" என்று கூறினான்.

"உம்... சொல்லுங்கள், சொல்லுங்கள். அந்தப் பாதகன் என்ன சொன்னான் என்று சொல்லுங்கள்..." என்று கூத்தன் முகத்தை நோக்கிப் பரபரப்புடன் கேட்டாள்.

"மங்கை... வேண்டாம்... வேண்டாம்... அந்தக் கொடியவன் சொன்ன விதச் சொற்களைக் கேட்க வேண்டாம்" என்று கூத்தன் கூறிப் பேச்சை மாற்ற முயன்றான்.

"இல்லை... மணியாசகன் சொல்லாதவன் என்பதை முதலில் நான் உணரவில்லை... நீ அவனைக் காதலிக்கிறாயாம். என்னை விட அவன்தான் அழகாக இருக்கிறானாம்... இன்னும் சீ... சீ... இதென்ன பேச்சு... நான் நம்பவில்லை. கெட்ட சொப்பனம்போல் மறந்துவிடு..." என்று கூறியபோது மங்கை விம்பி அழுதாள்.

"மங்கை அதற்குத் தான் அவன் கூறியதைச் சொல்ல மாட்டேன் என்றேன். நான் நம்பவே மாட்டேன். அப்படியே நீ

பிரிந்தாலும் இந்த உலகை விட்டு நான் நிச்சயமே தனியே வேறு ஒருத்தியை மனக் கண்ணாலும் நினைக்க மாட்டேன். அழுதே நாம் ஆற்றங்கரையோரம் சற்று உலவி விட்டு வரலாம் வா..." என்றான். அவள் விழி நீரைத் துடைத்துத் தேற்றினான்.

"நான் அதற்காக அழவில்லை. அந்தக் கொடியவன் கூறிய அபாண்டத்தை நீங்கள் நம்பாதபோது நான் நம்பி ஒரு கணம் சந்தேகித்து விட்டேன! ஐயோ... என் அழகை நானே பழித்துக் கொண்டேன். இன்னும் சிறிது நேரம் கழித்து வந்திருந்தால் என்னை நானே குரூபியாக ஆக்கிக் கொண்டிருப்பேன்..." என்று கூறி மீண்டும் விம்பினாள்.

"அழக்கூடாது மங்கை. இனி அழுத்து நடப்பதை நாம் கவனிக்க வேண்டும். அந்தப் பொல்லாத மணியாசகனிடமிருந்து நம்மை உடனே கொன்றாக வேண்டும்" என்றான்.

வெளியே மணியாசகன் சிரிக்கும் ஒசை கேட்டது.

குடிலின் சாளரம் வழியே மணியாசகன் எட்டிப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான். அந்தச் சிரிப்பில் பயங்கரமிருந்தது.

"கூத்தா! இங்கிருந்து தப்பி ஒடிவிடலாம் என்று நினைக்காதே. அப்படி எளிதில் உன்னை விட்டுவிட மாட்டேன். நீங்கள் இங்கு என் விருந்தினராய் இருப்பதை உதயனுக்குச் சொல்லி அனுப்பி விட்டேன். அவர்கள் வரும் வரையில் நீ என் பதிப்பிக்க விருந்தினராக இருக்க வேண்டாமா? மங்கை... என்மீது அபாண்டமாகப் பழிசுமத்துகிறாள். மங்கை, என்னைக் காதலிப்பதாக நீ சொன்ன சொற்கள் என்ன... இப்பொழுது மாற்றுவது என்ன?..." என்று கூறி இருவரையும் நோக்கி மீண்டும் சிரித்தான்.

மணிவாசகன் அங்கிருந்து போய்விட்டான். கூத்தன் மங்கையை அழைத்துக் கொண்டு வெளியேறி ஓடிவிட முயன்றான். வெளிப்பக்கம் கதவு தாளிடப்பட்டிருந்தது. கதவைப் பலமாகத் தட்டினான். சாளரம் வழியே ஓவெனக் கூவினான்.

மழையின் இரைச்சலில் அவன் குரல் ஒருவருக்கும் கேட்கவில்லை. மழை பெய்து கொண்டிருந்தது. இடியோசையுடன் அவனின் ஓலமும் சேர்ந்தது. பளிச்சிடும் மின்னலில், மங்கை அவனைப் பயத்தால் அணைத்திருப்பது தெரிந்தது.

இரவு போயிற்று. பகல் வந்தது. பகல் போயிற்று. இரவு வந்தது. பசியும் பயமும் ஒன்று சேர்ந்து அவர்களை வாட்டின.

"ஐயோ, இந்தப் பாதகனிடம் சிக்கிவிட்டோமே" என்று மங்கை வாய் விட்டழுதாள்.

"மங்கை, பயப்படாதே. வேயுறு தோளி பங்கன் நம்மைக் காப்பாற்றுவான். ஐந்தெழுத்துடையார் நம்மைக் காப்பாற்றுவார். கூன் பாண்டியன் சுரம் இறக்கியவன், திருநாவுக்கரசரைக் கடலிலிருந்து காத்தவன்... நம்மையும் காப்பான்..." என்று கூத்தன் அவள் அச்சத்தைப் போக்க முயன்றான். என்றாலும் அவன் உள்ளத்திலும் பயமில்லாமலில்லை.

மழை விட்டிருந்தது. பளிச்சிட்டது வானம். கருமுகில்கள் அகன்றது. நீலவானம் பயம் நீங்கிச் சிரித்தது. பூமிப் பெண்ணுக்கு மஞ்சள் பூசி அழகுப் பார்க்கக் கதிரவன் வந்து கொண்டிருந்தான். கூத்தன் உள்ளத்தில் புதுத் தெம்பு பிறந்தது. பய உணர்ச்சி குறைந்து தைரியம் எழுந்தது.

"மங்கை! கவலைப் படாதே. மழை நின்றுவிட்டது ஒன்றே சுபசூசகம். இதோ பார்! காலனைக் காலால் உதைத்தான்

பரமசிவன். இதோ இந்தக் கதவை என் காலால் உதைக்கிறேன்..." என்று கூறித் தன் பலங்கொண்ட மட்டும் உதைத்தான்.

கதவு திறந்தது. நிலைப்படி சாய்ந்தது. மழையினால் ஊறியிருந்த மண்சுவர் சரிந்தது. மங்கையை இழுத்துக் கொண்டு மிகவேகமாக வெளியேறினான் கூத்தன்.

கொள்ளிடத்தில் இரு கரையும் மோதிக் கொண்டு வெள்ளம் சென்று கொண்டிருந்தது. இவர்களுக்காகக் காத்திருப்பது போல் ஓடம் கரையில நின்றிருந்தது. படகோட்டி புதிய உற்சாகத்துடன் இவர்களைக் கண்டவுடன் "வாங்க.... வாங்க" என்று வரவேற்றான்.

வெள்ளச் சூழலையும் எதிர்த்து ஓடத்தை மிக லகுவாக ஓட்டிக் கொண்டிருந்தான் படகோட்டி.

"அதோ!" என்று மங்கை சுட்டிக் காட்டினாள். சற்றுத் தொலைவில் மற்றொரு படகு வந்து கொண்டிருந்தது.

அதில் மதுவணன், உதயன், மணிவாசகன், மற்றும் சில சண்டியர்கள்.

"ஏ, கூத்தா! படகை நிறுத்து. நீ தப்பி ஓட முடியாது..." என்று மணிவாசகன் கூவினான்.

"அப்பனே! சற்று விரைவாக ஓட்டு... எங்களைக் கொல்ல வருகிறார்கள்" என்று கூத்தன் ஓடக்காரனை வேண்டிக் கொண்டான்.

"ஏ! கூத்தா... நீ எங்கும் ஓடிவிட முடியாது... படகை நிறுத்து. இல்லாவிடில் உன் உயிர் போய்விடும். இதோ பார்..." என்று மதுவணன் கையிலுள்ள ஈட்டியைச் சுட்டிக் காட்டினான்.

படகு மிக வேகமாக நெருங்கியது. கூத்தன் விழிகளை மூடிக்

கொண்டான். மங்கை அச்சத்தால் நடுங்கி அவனை அணைத்துக் கொண்டிருந்தாள்.

"இறைவா! அந்தக் கயவர்களிடம் சிக்க விடாதே– இந்தக் கொள்ளிடத்திற்கு வேண்டுமானால் எங்களைப் பலியாக்கிவிடு.. உன் பாதத்தை நாங்கள் ஒன்றாக அடைந்து விடுவோம்..." என்று கூத்தன் கதறினான்.

எதிர்க் கரையிலிருந்து மற்றொரு படகு வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

அந்தப் படகு சோழ நாட்டு அரசாங்கத்தைச் சேர்ந்த படகு. புலிக் கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. பக்கத்திற்கு இருவர் வீதம் துடுப்பினை வீசிக் கொண்டிருந்தார்கள்.

படகில் சில வீரர்கள் இருந்தனர். பழுவேட்டரையர் கம்பீரமாக உட்கார்ந்திருந்தார். அந்த முதிய பருவத்திலும் அவரது விழிகள் தீட்சண்யமாக ஒளி வீசிக்கொண்டிருந்தன.

"அதோ பார்! அந்த ஓடத்தில் ஓர் இளம் பெண் அவள் ஒரு வேளை, நமது அரசர் குறிப்பிட்ட மங்கையாக இருக்குமோ?" என்று பழுவேட்டரையர் கேட்டார்.

ஓடத்திலுள்ள மங்கையைக் கவனிக்காத, உடன் வந்த ஒற்றர்ப் படைத்தலைவர், "ஐயா! அதோ மற்றொரு படகு. அதிலுள்ளவர்களைப் பார்த்தால் எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. ஓடத்தைப் படகு தூரத்திப் பிடிப்பது போல் தோன்றுகிறது" என்று தன் சந்தேகத்தைத் தெரிவித்தார்.

ஓடமும் படகும் நேர் எதிர்த் திசையில் சென்று கொண்டிருப்பது கண்ட சோழ நாட்டுப் படகு, அந்தப் படகை நோக்கித் திரும்பியது.

20043916

"ஐயா, அந்த இரு படகுகளிலும் முக்கியமானவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஓடத்திலுள்ள பெண் அந்த இளைஞனைச் சேர்த்து அணைத்திருக்கிறாள். ஐயோ அதோ அவர்கள் இருவரும் ஆற்றில் குதித்து விட்டார்களே..." என்று பதறிய தலைவர், தன் வீரார்களுக்கு அவர்களைக் காப்பாற்றுமாறு கட்டளையிட்டார்.

மதுவனரும், உதயனும் சோழர்களுடைய படகுகளைக் கண்டவுடன் ஆற்றில் குதித்தனர். அவர்களை ஒற்றர் படைத் தலைவர் அடையாளம் கண்டு கொண்டார்.

"ஓ! நீங்களா! துரோகிகளே சிக்கிவிட்டீர்களா?" என்று கூறி அவர்களையும் உயிருடன் பிடிக்குமாறு கட்டளையிட்டார். சோழ வீரர்கள் மதுவனரையும், உதயனையும் பிடிக்க வேகமாக நீந்தினர். படகிலிருந்த மற்றவர்களையும் சிறைபிடிக்க, பெரும் கயிறு ஒன்று படகை நோக்கி வீசப்பட்டது.

கண்டராதித்த சோழரின் எதிரே மிகக் கம்பீரமாகவும் பெருமையுடனும் நின்று கொண்டிருந்த பழுவேட்டரையரை அரசர் பாராட்டினார்.

"தாங்கள், மலர்மங்கையை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்று அரசர் கேட்டார்.

பழுவேட்டரையர் நடந்தவற்றைச் சொன்னார். "நாட்டில் நான்கு திசைகளிலும் நமது ஒற்றர்கள் சென்று மலர்மங்கையைத் தேடினர். அவள் அடையாளம் எனக்குத் தெரியாது. என்றாலும் இசையும், நடனமும் தெரிந்த இளமங்கையர்கள் எங்கெங்கு உள்ளனரோ அவர்களிடம் சென்று விசாரிக்க ஏற்பாடு செய்தேன். சிதம்பரத்திலிருந்து தாங்கள் புறப்பட்ட போது உடன் வந்த மலர்மங்கை எந்த இடத்தில் காணால் போயிருப்பாள் என்பதைப்

புலனறிய செய்தேன். கொள்ளிடக் கரைக்கு மறுபுறம் அவள் சென்றிருக்கலம் என்ற தகவல் வந்தது. நானும், ஒற்றர்படைத் தலைவருமாகப் புறப்பட்டோம்" என்று பழுவேட்டரையர் கூறி, நட்டாற்றில் நடைபெற்ற சம்பவங்களை விவரித்தார்.

"என் அந்தப் பெண்ணை அவர்கள் தொடர்ந்தார்கள்?" என்று அரசர் கேட்டார்.

"இரண்டு காரணங்கள். ஒன்று அழகு. மற்றொன்று நாடு" என்றார் பழுவேட்டரையர். விபரம் புரியாது திகைத்த அரசருக்குப் பழுவேட்டரையர் விளக்கினார்.

"அழகு நிறைந்த மலர்மங்கையைக் கொண்டு சோழ நாட்டைக் கவருவது இராட்டிரகூட நாட்டுச் சதிகாரர்களின் திட்டம்" என்றார் பழுவேட்டரையர்.

"மலர்மங்கை இராட்டிரகூட நாட்டைச் சேர்ந்தவளா?" என்று அரசர் கேட்டார்.

"இன்னம் விசாரிக்கவில்லை என்றாலும், அவளுடன் பேச்சுக் கொடுத்த போது அவள் சோழ நாடடிற்கு விரோத முடையவளாகத் தெரியவில்லை. சிவபக்தியும், தமிழும் அவள் உயிராக உள்ளன. அவள் பெரிதும் விரும்பும் கூத்தன் எனும் இளைஞன் சிதம்பரத்தைச் சேர்ந்தவன். இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் இராட்டிரகூட நாட்டுச் சதிகாரர்களின் வலையிலிருந்து அவர்கள் தப்பிவிட்டார்கள் என்றே தெரிகிறது" என்றார் பழுவேட்டரையர்.

கண்டராதித்தர் ஆவலுடன், "அவர்கள் எங்கே?" என்று கேட்டார்.

"ஆற்றில் மூழ்கிப் போன அவர்களுக்கு முதலுதவி அளித்து மயக்கம் தெளிவித்து, திருவையாற்றில் உள்ள ஆதூலர் சாலையில்

ஓய்வெடுக்குமாறு சொல்லியிருக்கிறேன். இன்னும் இரண்டு நாட்களில் அவர்கள் இங்கே வருகிறார்கள்" என்றார்.

"அவர்கள் என்றால் யார்?" என்று கண்டராதித்தர் சந்தேகத்துடன் கேட்டார்.

"ஆம்; அவர்கள் தாம். அந்தக் கொன்றை மலர் குமரியும், அவளுடைய காதலன் கூத்தனும். இப்பொழுது சக்கரவர்த்தி அவர்களுக்கு இசைப் புலமைமிக்க இருவர் கிடைத்து விட்டனர்" என்றார்.

"பழுவேட்டரையர் திறமையே திறமை!" என்று அரசர் பாராட்டினார்.

"சக்கரவர்த்தி அவர்களே! தங்களுக்கு இசைக் குயில் கிடைத்தது. நாட்டுக்கோ விரோதிகளுக்கு உளவு கூறும் கழுகுகள் கிடைத்துவிட்டன. இரட்ட நாட்டுப் பகைவர்களுக்கு உளவு கூறிக் கொண்டிருந்த துரோகிகளும் சிக்கிவிட்டனர். ஆனால், என் கோரிக்கை? என் எண்ணம்? என் விருப்பம் நிறைவேறவில்லையே. என் பெயரன் அரிஞ்சயனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட என்றுதான் நாள் கிடைக்குமோ? அரண்மனை ஜோதிடர் கருத்து சரியில்லையோ என்ற எண்ணத்தில் சேர நாட்டுச் சோதிடரை அணுகினேன். அவரும் அப்படியே சொல்கிறார்" என்று கவலையுடன் தெரிவித்தார்.

கண்டராதித்தர் என்ன மறுமொழி கூறுவார்?

"எல்லாம் அம்பலவாணர் செயல்" என்று கண்டராதித்தர் தமது விழிகளை முடியவாறு பொன்னம்பலத்து நடராசப் பெருமானை வாழ்த்தி வழிபட்டார்.

ஆனால், பழுவேட்டரையர் திருப்தி அடையவில்லை. இளவரசப் பட்டமேற்பு விழாவை உடனே நடத்துவதற்கு வழி தேட விரைந்தார்.

ஆனால் அடாது செயலாற்றும் முயற்சிக்குத் தடை விதிப்பதுபோல் செய்தி ஒன்று வந்தது.

பாலாற்றங்கரையில் தண்டு இறங்கியிருந்த இராட்டிரகூட நாட்டுப்படைகள் வெள்ளம் வடிந்தவுடன் ஆற்றைக் கடந்துவர ஆயத்தம் செய்கிறார்கள் என்ற செய்தி அவரைத் திடுக்கிடச் செய்தது.

கண்டராதித்தரிடம் தெரிவிப்பதில் பலனில்லை என்று எண்ணி பழுவேட்டரையர், அநிருத்தரிடம் நேரே சென்றார்.

அநிருத்தர் சொன்னார்: "பழுவேட்டரையர் அவர்களே! எல்லாம் அறிந்த தாங்கள் இந்தச் சமயம் தங்களுடைய பிடிவாதம் ஒன்றை விட்டுக் கொடுத்தால், தங்கள் கோரிக்கை நிறைவேறும்"

பழுவேட்டரையர் அநிருத்தரை நோக்கி, அந்தக் கோரிக்கை என்ன என்று கேட்க விரும்புவதுபோல் புருவங்களை உயர்த்தினார்.

"உடனே, தங்கள் பெயரன் அரிஞ்சயனைப் படைகளுக்குத் தலைமை வகித்து வடக்கு நோக்கிப் புறப்படச் செய்யுங்கள்" என்றார்.

15. கண்ணீர் பூக்கள்

மலர்மங்கையின் உடல் நலம் கேட்டறிய கண்டராதித்தர், திருவையாற்றிற்குச் சென்றார். மலர்மங்கை, படுக்கையில் எழுந்து உட்கார்ந்திருந்தாள். எல்லாம் கனவுபோல் அவளுக்குத் தோன்றியது. ஆற்றில் மூழ்கித் தத்தளித்தவரை அவளுக்கு நினைவில் இருந்தது. பிறகு, தன்னைக் காப்பாற்றியவர் யார் என்பது அவளுக்கு நினைவில்லை. நினைவு திரும்பிக் கண்விழித்த போது, நந்தவனத்தின் நடுவே இருந்த குடிலில் படுத்திருப்பதை அறிந்தாள்.

அது சோழநாட்டில் பலரும் அறிந்த ஆதூர சாலை.

அவள் உடல் சோர்வு நீங்கிவிட்டது. கண்விழித்தவுடன் அவள் முதலில் கூத்தனைத் தேடினாள். கூத்தன் வேறு ஓர் அறையில் படுத்திருப்பதாகவும், அவரும் தேறி வருவதாக அவள் அறிந்தாள்.

சக்கரவர்த்தி தன்னைச் சந்திக்க வருவார் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

என்ன சொல்லி வரவேற்பதென்றே அவளுக்குத் தெரியவில்லை.

பரபரப்புடன் எழமுயன்ற அவளைச் சைகை செய்து கையமர்த்தி அவள் உடல் நலம் விசாரித்தார் கண்டராதித்தர்.

"விரைவில் குணமடைந்து நீ தஞ்சைக்கு வந்து சேரவேண்டும்" என்று கூறிய கண்டராதித்தனை நோக்கி, மிக நாணத்துடன், "நான் பூரணத் தெம்புடனிருக்கிறேன். இப்பொழுதே தஞ்சைக்குப் புறப்பட ஆயத்தமாக இருக்கிறேன்" என்றாள்.

அரசர் பணிப் பெண்களுக்குக் கட்டளையிட்டு மலர்மங்கையைத் தஞ்சைக்கு அழைத்து வருமாறு சொன்னார்.

புத்துடை அணிந்து, புதிய பொலிவுடன் மலர்மங்கை தஞ்சைக்குப் புறப்படுமுன்பு, கூத்தனைப் பார்த்துவர அவனிருப்பிடம் சென்றாள்.

கூத்தன் மெலிந்து போய் இன்னும் படுக்கையிலிருந்தான்.

தனக்கு அரசரிடமிருந்து வந்த அழைப்பை மலர்மங்கை எடுத்துக்கூறி, தான் தஞ்சைக்குப் புறப்படும் செய்தியைத் தெரிவித்தாள்.

அழுகுக்கு அழகு செய்தாற்போல் பத்தழகு பொலிய மங்கை நிற்பதைக் கூத்தன் பார்த்தான். அவனால் எழ முடியவில்லை.

"கூத்தா, நான் தஞ்சைக்குப் புறப்படுகிறேன். அரசர் உத்தரவு நீயும் தஞ்சைக்கு வந்து விடு" என்றாள்.

விரக்தியாகச் சிரித்தான் கூத்தன். "நீ நலமுடன் சென்று வா, மங்கை" என்று வாழ்த்தினான்.

"உடல் நலம் சரியான உடனே நீயும் வந்துவிட வேண்டும்" என்று மங்கை குழைந்தாள்.

மீண்டும் அவன் சிரித்தான்.

"நான் எதற்கு வரவேண்டும்? நீ அரச அவையில் நடனமிடுமாய். அரசர் எதிரே பாடுமாய். நான் என்ன செய்ய போகிறேன்?" என்று கூத்தன் கேட்டான்.

"நீ பாடு, நான் ஆடுகிறேன்" என்றாள் மங்கை, மீண்டும் அவன் சிரித்தான்.

"நீயே பாடப் போகிறாய், ஆடப் போகிறாய், நான் எதற்கு? நீ எங்கிருந்தாலும் நலமுடன் வாழ வேண்டும்" என்று கூத்தன் மீண்டும் கூறினான்

"அப்படிச் சொல்லாதே கூத்தா. நீயில்லாத மாளிகை வாழ்வு ஒரு வாழ்வா? நீ வாவிட்டால் நான் தஞ்சைக்குச் செல்லமாட்டேன். உன்னுடனே தங்கி விடுகிறேன்" என்று மங்கை வேதனை கலந்த குரலில் கூறினாள்.

கூத்தன் தலையசைத்தான். "கூடாது, கூடவே கூடாது. நீ இங்கே தங்கக் கூடாது. நீ நலமுடன் வாழ வேண்டும்" என்றான்.

பணிப்பெண்கள் நேரமாகிறது என்று துரிதப்படுத்தினர். மலர்மங்கை கூத்தனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் விழிகளில் நீர் தளும்பியது.

"வருகிறேன் என்று ஒரு வார்த்தை சொன்னால்தான் நான் புறப்படுவேன்" என்றாள் மங்கை.

கூத்தன் தலையசைத்தான்.

மங்கை, பணிப்பெண்களுடன் புறப்பட்டாள்.

தஞ்சை வந்தடைந்த அவள், ஒவ்வொரு நாளும் கூத்தன் வருகிறானா என்று எதிர்பார்த்துக் காத்திருந்தாள். கூத்தன் வரவில்லை.

ஆனால், கூத்தனிடமிருந்து ஓலை ஒன்றை ஒருவன் கொண்டு வந்தான்.

"அன்புள்ள, மலர்மங்கை! தஞ்சை மாளிகையில் நீ மகிழ்ச்சியுடனிருக்க வேண்டும் என்பதே என் கோரிக்கை. இசைக்கும், நடனத்துக்கும் நீ உன்னையே அர்ப்பணித்துக் கொண்டவள். கடைசிவரை கலைக்குத் தொண்டாற்றிக் கொண்டிரு. என்னை மறந்துவிடு. நான் தில்லைக்குத் திரும்பிச் செல்கிறேன். நடராசர் திருச்சபையில் பாடியவாறு என் வாழ்நாளைக் கழிப்பேன்; என்றும் நீ உயர்வாக நலமுடன் வாழ வாழ்த்துகிறேன். என்னை மறந்து விடு. எப்பொழுதாவது என்னைச் சந்திக்க முயன்றால் நாம் கலைஞர்களாகவே பழகுவோம். நம் காதல் இனி இறைவனிடம் தான்" கூத்தன் எழுதியிருந்தான்.

மலர்மங்கை ஓலையில் கண்டிருந்தவற்றைப் படித்துக் கண் கலங்கினாள். அவள் கூந்தலிலிருந்து கொன்றைமலர் ஒன்று உதிர்ந்தது. உதிர்ந்த மலரின்மீது இரு சொட்டுக் கண்ணீர் சிந்திச் சிதறியது.